337

# KAMALENDRA.

## A Tamil Drama

BY

S. Krishnaswami Ayyar, B.A. B.L.,

14 JUL 1

PUBLISHED BY
K. S. RAMASUBBIER & Bros.,
AT THEIR
Dandapani Printing House,
TIRUPUR.

1ST EDITION-1000.

1924.

[Price 10 Ans.

O-,2MKI,K
N24
68888

உ

கடவுள் துணை.

# கமலேந்திரா

## ஓர் தமிழ் நாடகம்.

S. கிருஷ்ணசுவாமி அய்யர் B.A., B.L, அவர்கள்

இயற்றியது.

14 JUL 1924

பதிப்பித்தவர்,

**K. S. இராமசுப்பய்யர் & பிரதர்ஸ்**

தண்டபாணி பிரிண்டிங் ஹவுஸ்.

திருப்பூர்.

1-வது பிரசுரம்—1000

1924

காப்பிரைட் ரிஜிஸ்டர்டு]

[விலை 10 அணா.

894·8112
3065

N24

The Copyright of this Book

BELONGS TO

**K. S. Ramasubbier & Bros.**

*Printers, Publishers, A/c Book Makers, Stationers Etc.,*

**TIRUPUR.**

68888

INSCRIBED TO

**The Memory of**

**THE LATE T. S. NATARAJA AYYAR**

**Head Tamil Pandit, Salem College**

**AS A TOKEN OF**

REVERENCE AND AFFECTION BY HIS BROTHER

THE AUTHOR.

உ

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 21 | 9 | இத்துனை | இத்துணை |
| 34 | 26 | அககணமே | அக்கணமே. |
| 4 | 1 | அரசஅவை | அரசனவை. |
| | 5 | அரசஅவை | அரசனவை. |
| 49 | 14 | கற்பழிநதாலென்ற | கற்பழிநதாளென்ற. |
| | 18 | யனுரைத்தது | யானுரைத்தது. |
| 55 | 22 | விடைபகற் | விடைபகர். |
| 56 | 5 | கண்ணீருகுது | கண்ணீருகுத்து |
| | 26 | சொறிந்கிட்ட | சொரிந்கிட்ட. |
| | 29 | கற்பினிர்கணி | கற்பினிற்கணி. |
| | 31 | சிலம் | சீலம். |

# முகவுரை.

இச்சிறு நாடகம் யான் சென்னை இராஜதானிக் கலா சாலையில் பி. ஏ. வகுப்பில் மாணவனாயிருந்த காலத்து கோடைகால விடுமுறையில் எழுதப்பட்டு இதுவரை சும்மா கிடந்தது. இதனைக் கண்ணுற்ற எனது நண்பர்களில் சிலர் இதனை அச்சடித்து வெளியிடச்சாலவும் வற்புறுத்திக் கட்டாயப்படுத்தினமையின் இப்போது இதனை வெளியிடத் துணிந்தேன். இன்றேல் இன்றும் இது வெயிலோளியைக் கண்டிராது.

இதுவே முதல் முதல் வரைந்த நூலாதலாலும், நந்தமிழ் மொழியில் தக்க பயிற்சியில்லாமையாலும், இதிற் குற்றங்கள் பல பொதிந்துகிடக்குமென்பது திண்ணம். இதனை வாசிக்குநர் குற்றங்கருதாது குணமேதேனுமிருப்பின் அதனைக் கண்டுகளிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன்

இதனை அச்சிட்டு வெளிப்படுத்தி உதவிய எனது நண்பர் 'தண்டபாணி பிரிண்டிங் ஹவுஸ்' புரப்ரைட்டரான ஸ்ரீமான் K. S. இராம சுப்பய்யர் அவர்கட்கு என்றும் எனது நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாயுளேன்.

திருப்பூர்
1—4—24

S. KRISHNASWAMI AYYAR.

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ௧. | வீரகேசரி : | அங்கநாட்டு அரசன். |
| ௨. | சுந்தரவதனன் : | கலிங்கநாட்டு அரசிளங்குமரன் : நாடகத்தலைவன். |
| ௩. | சுகப்பிரியன் : | சேரநாட்டு இளவரசன். |
| ௪. | சுதர்மன் : | பிரபுக்கள். |
| ௫. | புஷோத்தமன் : | |
| ௬. | பிரதாபன் : | |
| ௭. | சத்தியசேனன் : | ஓர்வாலிபன் : சுந்தரவதனன் வேலையாள். |
| ௮. | சுத்தவீரன் : | வயது சென்ற ஓர் போர்வீரன். |
| ௯. | கமலா : | புருஷோத்தமன் மகள். |
| ௧௰. | இந்திரா : | வீரகேசரி மகள் : நாடகத்தலைவி. |
| ௧௧. | மாகதம் : | இந்திராவின் தோழியர். |
| ௧௨. | மாணிக்கம் : | |
| ௧௩. | மோகனா : | |

விறகு வெட்டிகள், வேடர்கள், காவலாளர் ஏனையோர்:

### நாடக நிகழ்விடம்:

அங்கதேசமும், அதனையடுத்த அடவியும்.

உ

திருப்பூர்.

முனிஸிபல் ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப் பண்டிதரும்,
ஸ்ரீமத் கம்பராமாயணப் பிரசங்க வித்துவானுமாகிய
ப்ரும்மஸ்ரீ C. S. முத்துஸாமி ஐயரவர்கள் கூறிய

# சிறப்புப்பாயிரம்.

## நிலமண்டில வாசிரியப்பா.

திருவளர் கைலையி னொருபரஞ் சுடரின்
கருணையிற் றோன்றிய கன்னித் தண்டமிழ்
சகத்துள மாந்தர் சமுகந் தழைப்ப
அகத்தியற் குணர்த்திய வருமைத் தீந்தமிழ்
மதுரையம் பதியின் மதிக்குல மன்னவர்
மதுரமுத் தமிழென வளர்த்த வொண்டமிழ்
கீரனாதியோர் கெழுமி நாடொறும்
ஓர்ந்துறு சங்க மோங்கிய செந்தமிழ்
தேவர் குறளுந் திருவா சகமும்
மூவர் தமிழும் முழங்கும் பைந்தமிழ்
கம்பர் கவிநயக் கடல்கடைந் தறிஞர்
இம்பருக் கமுதிங் கீந்திடும் இன்றமிழ்
எனப்புகழ் வாய்ந்த இளவண் டமிழில்
முனம்பல நூல்கள் மூதறி வாளராஞ்
சொல்லே ருழவர் தொடுகடற் புவியாள்
வில்லே ருழவரும் வியக்கக் குயிற்றினர்.
அத்தகை நூல்கள் வித்தகர்க் குரியன.
இந்நாட் கேற்பதோ ரின்னிசை நடையில்
வசனகா வியம்பல வளம்பெற வேண்டி
ஆடரங் குக்கோ ரணிகல னாக
நாடக வியலில் நாட்டுதல் நன்றெனக்

காசினி புகழுங் கமலேந் திராவெனும்
மாசிலா தொளிரும் மகுடஞ் சூட்டிய
வண்டமிழ் நாடகம் கண்டுமுக் கனிபோல்
அறம்பொரு ளின்பம் அமையப் பெற்றதாய்த்
திறமுறப் பின்னது செவிக்கமு தாகச்
சொன்னலம் பொருணலந் தொடைநல மணிநலம்
எந்நல முஞ்சேர்ந் திலகுற வியற்றினன்
அன்னவன் யாரென அறைகுவன் கேண்மின்
ஞாலமா நங்கை கோலமா முகநிகர்
சேலமார் கல்விச் சீலமார் சாலையில்
தலைமையாத் தமிழைச் சால்புற நடாத்திய
புலவர் பெருமான் புகழ்நட ராசற்
கிளையான் கல்வியி லிளையான் கலைதேர்
ஆரண மறையோன் நாரண பண்டிதன்
முன்னோன் முத்தமிழ் முழுதொருங் குணர்ந்தோன்
என்னோ ரன்புக் கிசைந்தவன் பீ ஏ
பீ எல் பட்டமும் பெற்றுயர் வக்கீல்
கிருட்டித் தொழிலிற் றிசைமுக னொப்பான்
கிருட்டினசுவாமியாம் கீர்த்திநா வலனே.

## விஞ்ஞாபனம்.

——000——

இப்புத்தகத்தின் முதற் பதிப்பாகிய இதில் பல அச்சுப் பிழைகள் விரவியிருப்பதை இது வாசிக்கும் நண்பர்கள் மன்னிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

K. S R. & Bros.

உ

கடவுள் துணை.

# கமலேந்திரா.

—):(—

## அங்கம் க.

### முதற்களம்.

இடம்: அரண்மனையின் ஒருபுறம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: சுதர்மன், புருஷோத்தமன், பிரதாபன்

சுதர்மன்:—என்னே! இன்னம் எவரும் வந்திலர்!

புரு:—ஆச்சரியமே! இன்று கூடும் சபைக்கு பிரபுக்கள் எல்லோரும் தவறாமல் வரவேண்டுமென்பது அரசன் ஆணை. மேலும் குடிகளில் எவர் வரினும் விலக்கலாகாது என்பது வேந்தன் விருப்பம்.

சுத:—எதற்காகவோ?

புரு:—எல்லாம் சேரநாட்டிளவரசைக் குறித்தே. அவனே நம்மரசன் புத்திரியை மணந்து நம்மைஆள வந்துளான்.

பிர:—ஓகோ! இந்திராவை சுகப்பிரியனுக்குத் திருமணம் முடிக்க நம்மரசன் எண்ணியிருந்ததை நாம் அறிவோமல்லவா? யாவர் முன்னரும் தன் கருத்தைத் தெரிவிப்பான் இச்சபை கூட்டுகின்றான் போலும்—நிற்க இந்திராவோ சுகப்பிரியனைத் தன் காதலனாகக் கருதிலள் என்பர். உண்மையோ?

புரு:—குடிகள் தம்மனவிருப்பத்தை வெளியிடுவதன்றி வேறறியார். ஏனைய சம்பவங்கள் அவர்களை எள்ளளவும் எட்டுவதில்லை.

சுத:—இம்மணம் இனிதே நிறைவேறின் சேரநாட்டிளவரசன் அங்கம் களிங்கம் இரண்டும் சீதனமாகவகித்து ஆள இருக்கின்றனும்.

புரு:—ஆம். ஆனல் களிங்கத்தின் உரியவனிருப்ப இவன் அதை அடைவது எங்ஙனமோ அறியேன்!

சுத:—யார்? சுந்தரவதனனு?

புரு:—ஆம். அவ்விளஞ் சிங்கமிருக்க, அதன் 'இரையை இந்நாயின் வெங்கட் சிறுகுட்டிக்கு இடுவது' எப்படி?

சுத—அரசன் நோக்கி யளிக்கின் சுந்தரன் என்செயவல்லான்?

புரு:—நீர் வெகுகாலம் தேசயாத்திரை செய்து மீண்டு சில நாட்களே சென்றன. ஆதலின் நாட்டின் நிலை உணராது பேசுகின்றீர். சுந்தரன்மேல் சனங்கள் வைத்திருக்கும் அன்பை அறியீரோ?வீரகேசரி, சுந்தரன் தந்தையும் களிங்கத்தின் காவலனுமான பராக்கிரமகேதுவைக்கபடத்தால் வென்று, அவனையும் மகனையும் சிறைச்சாலையில்விட்டு, களிங்க மன்னன் மனமுடைந்து காலஞ்சென்றபின், சுந்தரவதனனைக் கொல்ல முயன்றபோது நிகழ்ந்ததை நினைத்துப்பாரும். குடிகள் போர்க்கெழ அரசன் அஞ்சி சுந்தரனைச் சிறையினின்றும் விடுத்ததை மறந்தீரோ? அக்காலத்து அவனை அளித்த அவர்கள் அன்பு மேன்மேலும் வளர்ந்து பெருகியிருப்பதை நீர் அறியீர் போலும்.

சுத:—ஆயினும் இதுவரை நாட்டைப் பறிகொடுத்து வாளாவிருந்தவன் இனி என் செய்வான் என்றே கேட்டேன்.

புரு:—அப்படியன்று. அடக்கமுடையாரை எளிதில் கடக்கக் கருதுவது தவறாகும்.

'ஓடுமீனோட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாங் கொக்கு'

என்பது அமுதவாக்கு. கூடியவிரைவில் குடிகள் பேருதவியால் தன்னாட்டை அவன் பெறுவது திண்ணம். தங்கள் மனக்கோயில் இருந்த இறையெனக் கருதிப் போற்றும் அவர்கள் அவன் பொருட்டு எதுவுஞ் செய்வர். அவர்கள் அன்பே அவனை அளிக்கும் அரண் ஆகும்.

சுந்:—ஆம் நீர் சொல்வன முற்றும் உண்மையே. சுந்தரன் தன் சொந்த நாட்டைப் பெறின் யாவரும் களிப்பர். எல்லோர் நன்மதிப்பிற்கும், அன்பிற்கும் அருகனுய் விளங்கும் சுந்தரன் குணம் வெகு சுந்தரமானதே!

புரு:—சந்தேகமென்ன? அங்க அழகு மட்டுமல்லாமல், அகவழகும் அமைந்து, கல்விக் கெல்லையாய், கருணைப் பெருங் கடலாய், வீரர் சிங்கமாய், வேந்தர் திலகமாய், குணப்பெருங் குன்றமாய் விளங்கும் இளைஞனை யாரே நேசியார்?

சுந்:—உண்மையே! சேரநாட்டிளவரசு எத்தகையன்?

புரு:—சுகப்பிரியனு? கேட்டல் வேண்டுமோ? பெயரே அவன் குணத்தைத் தெரிவித்து நிற்கின்றதே!

பிர:—மாதரார் மயக்கத்து ஆழ்ந்து கிடக்கும் மன்னன் என்பர்!

புரு—தற்புகழ்ச்சிக்கு உறைவிடமாம்!

பிர:—கல்விமணமறியாக் கசடனும்! போர் முகமறியாப் போர் வீரனும!

சுந்:—பளா! வெகு நேரிது. போதும! போதும்! அவன் புகழைப் பாடுவதை ஒழியுங்கள். இத்தகையனை மணக்க இந்திரா இசையாளாயின் இறும்பூதன்றே!

பிர:—ஆயினும், 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்பதைப் பற்றி நடக்கும் நங்கையவள்.

[மாகதம் மாணிக்கம், மோகனு மூவரும் அவ்வழிச் செல்கின்றனர்]

ஆ! இம்மாதர்கள் யாவர்?

புரு:—இந்திராவின் தோழியரிவர்?

பிர:—முதற் செல்வாள் யாவள்?

புரு:—மாகதம் என்ற மாதவள். குணத்தில் மிக்க நல்லாள். இந்திராவுக்கு உகந்தவள்.

சுந்:—பின் செல்பவள்?

புரு:—அவளா? மாணிக்கம் என்ற மங்கை. அவள்வந்து கொஞ்ச நாட்களே ஆயின.

சுந்:—கடைசியிற் போகும் பாவையோ?

புரு:—மோகனு என்ற பெயரினள். ஆடவர்க்குதவும்அழகி. காளையர் திறனைச் சோதிக்கும் காரிகை.

பிர:—நல்லது. இனிச்செல்வோம். அரச அவை கூடும் அமயம் அணுகிவிட்டது.

(யாவரும் போகின்றனர்.)

## இரண்டாங்களம்

இடம்: அரச அவை.

காலம்: காலை.

பாத்திரங்கள்: வீரகேசரி, சுகப்பிரியன், புருஷோத்தமன் முதலிய பிரபுக்கள் ஒருசார்; இந்திரா, மரகதம் முதலிய அவள் தோழியர் மற்றொருசார்

வீர:—சுகப்பிரிய! அருகில்வா. இன்று முதல் நின்னை என்மகனெனக் கருதுவேன். இதோ நிற்கும்என் அருந்தவச்செல்வி இந்திராவை உனக்கு அழல் சான்றாய் மணமுடிக்க மனங்கொண்டதை எல்லோர் முன்பும் உறுதியாக்கவே இன்று யாம் இங்குக் கூடியதின் கருத்து. வாக்குறுதி மட்டில் நிற்பதாக எண்ணேல். இம்மாதம் இறுதி காணு முன் உங்கள் திருமணம் முடிப்போம். பல வருடங்களாக மனத்திருந்த விருப்பம் நிறைவேறுவதுடன் என் செல்வப் புத்திரியும் தக்க கணவனையடைந்து இன்புற்று வாழக் காண விழைகின்றேன்.

பிர:—என்னே! இம்மாதம் முடியுமுன் மணமுடியுமாம்! அவ்வளவு சீக்கிரமா!

சுத:—அது நடப்பதைப் பார்ப்போம்.

புரு:—சுந்தரனுக்குப் பெருந்தீங்கு இழைக்கும் இம்மணம் நடப்பது மிகக் கடுமையே!

சுக:—அரசர் கோவே! தங்கள் இன்சொற்கு வந்தனம் தந்தனன். தங்கள் கருத்தை யாவர் முன்பும் வெளியிட்டது களிப்பை யளித்தது.—எல்லோர் முன்னரும் என்னைப்பற்றி யானே புகழ்ந்து பேசுவது அழகல்லவாயினும் சமயம் வாய்த்தபோது சிறிது பேசாதிருக்க மனமில்லை—வீரமும் தீரமும்; வனப்பும் வாய்மையும்; எல்லையில் கல்வியும்; சொல்லருஞ் செல்வமும்; தொல்புகழ் நாடும்; பரந்

தபாரினும், விரிந்தவானினும் இப்புகழ் படைத்தார் எவருமிலரெனப் பாவலர் பாடும் பாக்கியமும் வாய்ந்த என்னை அரசனாக அடைய நிற்கும் குடிகளின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

பிர: பளா! என்ன விந்தை!

சுத:—எப்புலவன் கற்பித்ததோ! பாடம் நன்றாய் ஒப்புவித்தான்!

சுக:—(இந்திராவை நோக்கி) இந்திரா! என் சொல்கின்றாய்? நம்மிருவருக்கும் மணம் நிறைவேறின், நாமும் நம் குடிகளும்களித்து இனிதேவாழலாம். நமதேசம் பல்வளமலிந்து திகழ்ந்தொளிவீசிப் பொலிந்து, பிறநாடுகளைக்கண்டு நகும் வண்ணம் நாம் அதைப் புரப்பதால், சனங்கள் செல்வத்திற் செழிந்தோங்குவர். நாமோ! சொல்லவேண்டுவதில்லை. நம்மை யொப்பார் நாமே! அழகில் அனங்கனும், செல்வத்திற் குபேரனும், அறிவில் ஆதித்தனும் என யாவரும் புகழ் என்னையும், அலர்மகள் அழகும், கலைமகள் கல்வியும் வாய்ந்த உன்னையும் நிகர்ப்பார் யார்? மாலும் மலர் மகளும் போன்றும், இந்திரனும் சசியும் போன்றும் வாழலாம்.

புரு:—ஆகா! இவன் விலையென்னையோ? தக்கவிலைக்குத் தன்னை விற்பான் போலும். தன்னையே வியந்து புகழ்ந்து மகிழ்கின்றான்.

மர:— (ஒருசார்) இவனுக்கு இவ்வளவு எப்படித் தெரியும்? வாயிற் பேசவல்ல வீரனிவனே!

மோக:—ஆ! ஆ! எவ்வளவு அழகாய்ப் பேசுகின்றான்? இவனை மணப்பவள் பாக்கியசாலியே!

[சுந்தரவதனன் வருகின்றான்]

புரு:—அதோ! சுந்தரன் வந்தனன். அவனன்றோ இப்பெரும் புகழிற் கிலக்காவான். அவனே அரசச்சிங்கம்! அவன் சிறந்த நோக்கும், பரந்தமார்பும், பவளவாயும், சொட்டும் வனப்புர், மட்டில்லாக்குணமும் அவன் அழகைப்பன் மடங்கு அதிகரித்து நிற்றலைக் காண்மின்!

சுந்:— (வீரகேசரியை அணுகி) இறைவ! வந்தனம்.

வீர:—என்னே! சுந்தர!

சுந்:—ஓர் வேண்டுகோள். நலமுடன் நல்குவீர்.

வீர:—என்னையோ அது! பகர்வாய்.

புரு:—அரசனைப்பாருங்கள். அவன் முகம் வெளுத்து அச்சங் காட்டலைக்காண்மின்.

சுந்:—விவரமாய் விளக்கமுறச் செப்பவோ?

வீர:—சொல்வாய்.

சுந்:—ஆயின்-(சுகப்பிரியனை நோக்கி) சுகப்பிரிய! உன்னிடம் இம்மொழி இயம்புவல். அன்னியனே! ஆ! அப்படி விழித்துப்பாரேல்! வியப்பான் போல் நடியாதே! இதோ (இந்திராவை சுட்டிக்காட்டி) இருக்கும் இவ்வணங்கோடு சீதனமாய் நீ பெறக் கருதும் கலிங்கதேயம் உன்னதென உன்னினாய் கொல்? என் தந்தை அதை உனக்கே விட்டிறந்தார்? யான் உயிரோடிருக்குமளவும், என் வலிய கரங்கள் உள்ளவரையிலும், சில உண்மை நண்பர்கள் என்னைக் காக்கத் தயாராயிருக்குமளவும், இங்கும் அங்கும் எங்கும் எள்ளினுள் எண்ணெய் என வியாபித்துவிளங்கும் கடவுள் ஒருவன் உள்ள வரையிலும், நீ அதைக் கைக்கொள்ளக் கனவிலும் கருதாதே. அலைமேலலை மோதி ஓயாதொழியாது ஒலிக்கும் கடலன்னப் பெரும்படை அணியணியாய் வகுக்கப்பெற்று, ஆயிரம் அரசர்கள் உன்னைச் சூழ்ந்து காக்கினும் உன்னைச்சும்மா விடேன்! என் சுதந்தரத்தை இழவேன்! கேட்டாயோ?

சுக:—என்னே! இவன் பித்தன் போல் பிதற்றுகிறான்!

புரு:—பளா! பளா! இளவரசு இயம்பிய சொல் அன்னியனை அச்சமுறச் செய்தது.

சுந்:—என்ன சொன்னாய்? பித்தனா? இல்லையென இதோ காண்பிப்பேன்.

வீர:—சுந்தர! இத்தகைத் துணிவுடனும் அதிகாரத்துடனும் இங்கு பேச நீயார்? எட்டிச்செல்!

சுந்:—ஐயா! யான் அதிகாரமுடையனாயின் இப்படிச் சாந்தமாய் இருப்பேனோ? யான் யாரெனக்கேட்டீர்! ஓர் அணுவைப் போன்று தங்கள் ஆணையென்னும் காற்றின்முன் பறப்போன்! புழுவென யாவரும் மதித்து மிதிக்கப்படும் துர்பாக்கியன்!

வீர:—(கோபித்து) சுந்தரவதனா! நில். இப்படிப் பேசவோ உத்தாவளித்தனம்? இதுவோ நீ வேண்டியவரன்? தூரச் செல்.

சுக:—என்மேல் கோபிக்கும் வண்ணம் யான் உனக்கு இழைத்த தீங்கென்னையோ? அறிகிலேன்? இந்திராவின் கரத்தையும் அங்ககளிங்க மிரண்டையும் அரசன் அளிக்கின் யான் ஏன் பெற்று வாழக்கூடாது? உன் கோபம் என் செயும்!

சுந்:—அடே! நீ அகிலமெல்லாம் ஆளும் அரசர்க்கரசனாயினும், நீ பேசித் தோன்றும் வண்ணம் நிகரற்ற வீரனும், பகரவொண்ணாத் தீரனும், புரையற்ற ஆண் சிங்கமுமாய் உண்மையில் இருப்பினும் உன்னை எளிதில் விடேன்!

வீர:—என்னையிது! இவனுக்குப் பைத்தியமே பிடித்தது. அரண்மனை வைத்தியரை அழையுங்கள்.

பிர:—அப்படி யான் நினைககவில்லை.

புரு:—உண்மையுரைக்கின், உன்மத்தன் என்றனன்! பார்ப்போம் இவன் தன்மனப்படி நடப்பதை!

சுத:—நாமெல்லோரும் ஒரே மனத்தினரே. சும்மாவிரும்.

சுந்:—சுகப்பிரிய! யான் சொன்னது விளங்கிற்று?

வீர,—(கோபித்து) போதும்! போதும்! சும்மா அளவற்று வார்த்தையாடாதே.

மர:—ஆகா! சுந்தரவள்ளால்! என்ன கம்பீரத்தோற்றம்! என்ன சீரிய சிற்றம்! எவ்வளவு கூரிய மாற்றம்!

மோக:—சீ! என்ன கர்வம்! என்ன அகங்காரம்! அரசனெனச் சிறிதும் அச்சமில்லை!

வீர:—உன் விருப்பங்காளென்னே! உரையாய்.

சுந்:—தனித்துவரின் அறிவிப்பல்.

[வீரகேசரியும், சுந்தரவதனனும் தனித்துப் பேசுகின்றனர்.]

சுத:—அரசன் திடீரெனப் பயந்து பின் வாங்குவதைப்பார்.

புரு:—அவனை இகழ்வதிற் பயனென்? பாவம்! சுந்தரவதனன் சொல்வன அவன் மனதைப் பிளக்கின்றன போலும்! ஆ! அவ்வன்னியனைப்பார். தன் நாட்டைக்கேட்கினும் கொடுத்தோடும் பேதைப்பதரைப் போல் தோன்றுகிறான்!

வீர:—என்சொனாய்! அச்சமின்றி அச்சொல் அறைந்தாய்! என் விருப்பம் போல் நடப்பாய். இல்லையேல்—

சுந்:—யான் இறந்தேன்! அல்லவா? ஆம்! என் உயிர் உம்முடைய கையிலுளது. என் விதியும் நீரே.

வீர:—ஓ! பேய் பிடித்தவன் போல் பிதற்றுகிறான்!

சுந்:—ஆம்! நான் பேய் பிடித்தவனே! என் தந்தை என்னும் பேயே என்னைப்பிடித்து ஆட்டி இப்படிப் பேசச் செய்கின்றது!—அல்ல. என் தந்தையே பேசுவதாகக் கொள்க. அவர் என் மனத்திருந்து "நீயே களிங்கத்தின் காவலன். அதனைக்கோள்க. அதன் குடிகள் நின்குடிகளே. காலந் தாழ்த்தாது செய்வன செய்" என்று இடித்திடித்து, அடுத்தடுத்து, எடுத்துக்கூறி என்னைத் தூண்டி, என்மனவமைதியை இழக்கச்செய்கின்றார்.

வீர:—சுந்தர! செல்வாய் இக்கணமே! உன்னை முன்னமேயே சிறையிலிட்டிருக்க வேண்டும். இம்முறை மன்னித்தோம். இனி இப்படி நடவேல்.

[சுந்தரவதனன் செல்கின்றான்.]

புரு:— (தனக்குள்) நீசிறையிலிடாத காரணம் யாவரும் அறிவர்! சனங்களை மறவாதே!

வீர:—சுகப்பிரிய! என்ன! யோசனையிலமூழ்ந்தினாய்? அவனைப் பொருட் படுத்தாதே. அவன் மொழிந்தன முற்றும் மற. பொழுதாயிற்று. போவோம். வா.

[யாவரும் போகின்றனர்.]

## மூன்றுங்களம்.

இடம்: இராஜ வீதி.

காலம். பிற்பகல்.

பாத்திரங்கள்: சுதர்மன், புருஷோத்தமன், பிரதாபன்.

பிர;—இன்றுகாலை அவைக்களத்து நடந்ததைப் பார்க்கின் சுந்தரவதனன் இனிச் சும்மா விரானெனத் தோன்றுகின்றது. நாமும் இத்தகைய சமயம் எப்பொழுது வாய்க்குமோவென எதிர்நோக்கி யிருந்தோம். அவன் சொன்ன சொற்கள் அரசனை எப்படி வாட்டி வருத்தியிருக்கும்!

புரு:—ஆம். அதிற் சிறிதும் ஐயமின்று. எல்லாம் நம் மனம்போல் நடக்கவேண்டுமே! சுந்தரன் சொல்லிய மொழிகள் வீரகேசரி நெஞ்சைப் பிளந்தன

'தீயினாற் சுட்ட புண்ணுள்ளாறு மாறாதே
வாயினாற் சுட்ட வடு'

எனபதன்றோ பொய்யா மொழி.

சுத:—ஆம். அவன் மொழிகள் அரசன் மனதை என்றும் வாள்போல் அறுத்தவண்ண மிருக்கும். வேந்தனது வஞ்சமனமும் அஞ்சியது. அது நிற்க. நீங்கள் ஒன்று கவனித்தீர்களா? சுகப்பிரியன் பேசியபோது இந்திராள் முகஞ்சுளிக்கக் கண்டேன்.

பிர:—ஆம். யானும் கண்டேன். ஆனால் சுந்தரவதனனைக் கண்ணுற்ற அவள் கண்கள் ஒளிவீசி விளங்க, அவள் முகம் சுகிரவனைக்கண்ட கமலமென மலர்ந்து ஒளிர்ந்தது. அவன் வாய் பொழிந்த மொழிமாரியும் அவள் உள்ளத்தைக களிக்கச் செய்தது போலும்.

சுத,—மெய்யே! இருவரும் காதலரென யாவரும் சொல்லக் கேட்டேன். உண்மையாயிருத்தல் கூடுமோ?

புரு:—இருப்பினும் இருக்கலாம். இறும்பூதன்றே. இந்திராளோ இன்னிசைத் தேன்மொழிப் பேரழகினள். சுந்தரனோ அவளை மணக்கத் தக்கவன்.

[சுந்தரவதனன் வருகின்றான்]

அதோ! நம் சுந்தரவள்ளல் வருகின்றான்.—
வந்தனம் இளவரசே!

சுந்:—வந்தனம். (சிறிது நகைத்து) பொல்லாப்பாம்பை நல்ல பாம்பென்றும், காராட்டை வெள்ளாடென்றும். அமங்கள வாரந்தன்னை மங்கள வாரமென்றும் உலகர் நவில்வதே போல், நீரும் என்னை இளவரசே என்றீர் போலும்!

பிர:—எனப்படிச் சொன்னீர்? நீர் நினைத்தால் உம்காடு உம்முடைய தாகாதா?

புரு:—நீர்தான் வாளா விருக்கின்றீர்.

சுத:—பிரஜைகள் தங்கள் கட்டளையை எதிர்நோக்கி நிற்கின்றனர். தங்கள் நாவசையின் நாடே அசையுமன்றோ?

சுந்:—என் ஆருயிர் நண்பர்காள்! உங்கள் அன்பிற்கு மிகவும் கடமைப்பாடுடையேன். வந்தனம். 'அற்றகுளத்தில் அருநீர்ப் பறவை போல்' அல்லாமல், 'அக்குளத்தில் கோட்டியும் ஆம்பலும் போல், ஒட்டி உறவு கொண்டாடும்' உங்களுக்குப் பல்கோடி வந்தனம். ஆனால், அவசரப்பட்டு காரியத்தைச் சிதறச்செய்வது பேதமையாம்: காலம் வர வேண்டும்.

> "அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
> எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
> உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
> பருவத்தா லன்றிப் பழா."

என்று ஆன்றோர் வாக்குப் பிறந்துளது. மேலும், எதையும் ஆய்ந்தோய்ந்து செய்யவேண்டும்.

> "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
> எண்ணுவ மென்ப திழுக்கு."

என்ற அமுதமொழியை அசட்டை செய்யலாமா? ஆதலின் சமயம் நேர்ந்தபோது உங்கள் பேருதவியால் என்நாட்டை அடைய முயல்வேன். அது கிடக்கட்டும்.— புருஷோத்தமரே! உம்முடைய மகள் கமலா, எங்கே வெகுகாலமாகக் காணப்படவில்லை. எங்கு சென்றாள்?

புரு:—(துக்கித்துக் கண்கலங்கி) அவள் இருப்பதும் இறந்ததும் தெரியவில்லை. சிதம்பரஞ்சென்று சிற்சபேசனைக் கண்டுவருவதாகச் சென்ற என் செல்வி இன்னம் வந்திலள். என்ன வாயினளோ! அறியேன்.

சுந்:—ஆ! அப்படியா! பெரிதும் வருந்துகிறேன். வனப்பு வாய்ந்த வனிதையவள். மகளைக் காணாத் தந்தையின் துயரை யாரே தீர்க்க வல்லார்! ஈசனருள் உம்மிடம் அவளை விரைவில் சேர்க்குமாக.

[மரகதம் வருகிறாள்]

மர:—(சுந்தாவதனனை நெருங்கி) அரசிளங்குமாரா! உம்மை இந்திரா, காண விரும்பி என்னை அனுப்பி விடுத்தனள்.

சுந்:—(ஆச்சரியப்பட்டு) என்னையா!

மர:—சுந்தரவதனன் என்ற பெயர் பூண்டவர் நீரே யாயின் உம்மையே.

சுந்:—அப்படியா! நல்லது. இதோ வந்தேன். முன்சென்று என் வந்தனமளிப்பாய்.

[மரகதம் போகிறாள்]

புரு:—என்ன செய்யப் போகின்றீர்?

சுந்:—ஒரு பெண்ணரசியைக் காணச் செல்கின்றேன்.

சுத:—அதனால் நேரும் அபாயமின்னதென யோசித்தீரா?

சுந்:—அபாயமா? அவ்வழகிய வதனத்திலா?

பிர:—மேலும், அவள் அனுப்பினளென எப்படித்தெரியும்! தங்கள் உயிரை விரும்பி இச்சூழ்ச்சி செய்திருப்பின் என் செய்வது?

சுந்:—நீர் சொல்வது விந்தையே! காரிகையார் அவ்வளவு கொடியரோ? கருணைக்கும் இரக்கத்திற்கும் இருப்பிடம் பெண்களே யென்பது என் துணிபு. மேலும் இந்திரா நற்குண மங்கையர் திலகமன்றோ? அவளைப் பார்ப்பதில் அபாயமென்னை? அவள் தன் வாள்ன கண்களால் என்னை விழுங்கலாம். என் மனதையே கொள்ளை கொள்ளலாம். அவ்வளவே அபாயம். அவள் பெயரொன்றே என்னைக்காக்குமே? இதோ காற்றினுங் கடுகிச் செல்வேன்.

[போகிறான்]

சுத:—பளா? பளா! கைப்புண்ணிற்குக் கண்ணாடியும் வேண்டுமா? இருவரும் இப்போது காதலரெனச் சொல்லவும் வேண்டுமோ?

புரு:—செல்வோம், வாருங்கள். அரசன் வஞ்சனை செய்யாமலிருக்க, நம் நண்பர்களிடம் சொல்லி வேண்டியன செய்வோம்.

[போகின்றனர்]

## நான்காங்களம்.

இடம்: இந்திராவின் அறை.
காலம்: பிற்பகல்.
பாத்திரங்கள்: இந்திரா, மரகதம்.

இந்:—அவன் வருவதில்லையா?

மர:—அம்மா!

இந்:—சுந்தரவதனன் வருவனோ?

மர:—இந்திரா! நீ என்னை எப்பொழுதும் நம்புவது வழக்கம். இப்போது ஏனோ இப்படி நம்பவில்லை!

இந்:—வருகிருனென்றனேயா? ஆ! மறந்தேன். மன்னிப்பாய். பின்னேன் இன்னம் வந்திலன்—அடி! மாகதம்! வருவதாகக் கூறியபோது எப்படித் தோன்றினன்!

மர:—என்? நன்கே தோன்றினர்.

இந்:—இல்லே. சிறிது அஞ்சியதாய்க் காணவில்லேயா?

மர:—அச்சமா! அதை யின்னதென அறியாரே அவர்!

இந்:—நீங்கள் யாவரும் அவனேப் புகழ்வதில் சலிப்பதேயில்லே. யானறிவேன். சிறிது அச்சமே அவனுக்கு இங்குவர.

மர:—இல்லே! இல்லே! அவர் முகம் அப்போது காதலேக் காட்டியதேயன்றி வேறில்லே.

இந்:—காதலா? யாரிடம்? உன்னிடமா? ஓ! யான் சொல்லிய சாதாரண மொழியை அவன் உன்னேக் காதலிக்குமாறு அவ்வளவு இனிமையுடன் இசைத்தனே போலும்!

மர:—என்னிடமா காதல்! உன்னிடமே!

இந்:—அந்தோ! ஒன்றும் அறியாமல் ஏதோ உளறுகிருய்! நாங்கள் இருவரும் பகைவரென்பதை மறந்தாய்!

மர:—அதோ! அவர் வருமொலி கேட்கின்றது.

இந்:—சரி. அழைத்து வா:—(தனக்குள்) ஆ! கடவுளே! நீயே கதி! காப்பாய்!

[சுந்தரவதனன் வருகிருன்]

மர:—இதோ வந்தார் அம்மணி!

இந்:—நல்லது நீ போவாய்—

[மாகதம் செல்கிருள்]

சுந்தரவதன! வருக.

சுந்:—என்னே! இந்திரா! என்னே இங்கு அழைத்தது எதற்கோ?

இந்:—உன்னேக் காணவே.

சுந்:—என்ன விசேடம்? எவர் செய்த தவமோ இன்று உன்னைத் தனித்திங்கே காணக்கிடைத்தது?

இந்:—அது கிடக்கட்டும்.—சுந்தரவதனு! யான் உனக்கு இழைத்த இடையூறென்னையோ?

சுந்:—(திடுக்கிட்டு) என்ன! இடையூறு? யார் சொன்னது? ஒன்று மில்லையென யான் சொல்லவும் வேண்டுமோ?

இந்:—பின்னேன் என்னுடன் வழக்குனக்கு?

சுந்:—(ஆச்சரியத்துடன்) வழக்கா? உன்னுடனு? என்னையிது! நீ சொல்வதொன்றும் விளங்கவில்லையே!

இந்:—என்மேற் கோபமும் என்னுடன் வழக்குமின்றேல் களிங்க நாட்டை என் கவர எண்ணினுய்?.

சுந்:—ஆ! இந்திரா! யானதைக் கவருவதாகக் கருதவில்லை. அது எனக்குரியதாம். ஆனல், என் இன்னுயிர் காக்க வேணும், நின்னுடன் என்றும் வழக்கிடேன். வேண்டின், களிங்கத்தை நீயே இனி இனிதே ஆள்வாய். அது உன் வயம் இன்றே ஆகும். என் உரை சிறிதும் குன்றேன். என் உயிரையே விரும்பா எனக்கு நாடேன்? நகரேன்? இராஜாங்கமேன்? ஒன்றிற்கும் உதவாத அன்னியன் ஒருவன் அதனைக் கைப்பற்றுவது நினைந்து மனம் பொறுது அப்படிப் பேசினேன் நீ வேண்டின் அதைக்கொள்வாய்.

இந்:—(மனமுருகி) நின் இன்சொற்கு எண்ணில் வந்தனம். யான் அங்கம் களிங்கம் இரண்டையும் ஆள அவாவுடையேன். என்ன சொல்கிறுய்?

சுந்:—இப்பொழுதே ஈந்தேன்.

இந்:—(சிரித்து, சிறிது தயங்கி) நாடுமட்டும் யான் நாடினேனல்லேன்.

சுந்: மற்றென் வேண்டும்? உரைப்பாய். (யோசித்து) ஓ! ஒருவேளை யான் உயிருடன் இருப்பின் வழக்கு நேருமென சங்கை கொள்கின்றனை போலும். அப்படியாயின், என் ஆருயிரையும் நின்னடி மலர்க்கு அர்ப்பணம் இக்கணம செய்வேன்.

இந்:—அப்படியன்று. உன்னுயிர் வேண்டிலேன். ஆனால் உன்குற்றம் முழுவதும் உரைத்துத் தக்க தண்டனை விதிக்க விரும்புகிறேன்

சுந்:—என்ன குற்றம்?

இந்:—பெரிய களவொன்று இழைத்துளாய்!

சுந்—களவா? யானறிய ஒன்றுஞ் செய்திலேன்! அப்படி இருப்பின் நீ விதிக்கும் தண்டனையைத் தாங்கத் தயாராயுளேன்.

இந்:—நீயேன் என்—(தயங்குகிறாள்)

சுந்:—என்ன? சொல்வாய்.

இந்:—சொல்லவா?

சுந்:—ஆம் விரைவில் விளம்பாய்.

இந்:—சொல்லின் முனிதியோ.

சுந்:—முனியேன்! முனியேன்!

இந்:—ஆயின்—என் உள்ளம் கொள்ளை கொண்ட கள்வா! அதனை மீண்டும் அளித்திடுவாய். (நாணி நிற்கின்றாள்)

சுந்:—(ஆச்சரியத்தால் திடுக்கிட்டு) என்ன சொன்னாய்? உண்மையிலா? யான் காண்பது கனவோ? நனவோ? (இந்திரா தலைகுனிந்து முகஞ்சிவந்து நிற்றல் நோக்கி) அன்று! யான் காண்பது கனவன்று! உண்மையே! என் இனபரசமே! யான் காதலிக்குமாறு நீயுங் காதலிக்கின்றாயோ? ஆம்! ஆம்! உன் கமலக்கண்கள் காதல் ததும்பி நிற்கின்றன! — என் இன்பமே! இதுவரை பேசியநின் செவ்வாய் என் இப்போது மூடி மூங்கை போல் உள்ளாய்?

இந்:—(தலை நிமிர்ந்து, புன்முறுவலுடன்) என் சுந்தர! நின்னைத் தனித்துக் கண்டு பேசவேண்டுமென்ற அவா வெகு நாட்களாக உண்டு. அயினும் நாணத்தாற் சிறிது தயங்கினேன். இறுதியில் ஆசையே வென்றது.

சுந்:—இன்னுயிர் இந்திரா! யான் சொல்லவேண்டுவது வெகு சிறிதே! அல்லும் பகலும் நின்னையன்றி வேறெ.

வரையும் மனத்தால் தொட்டறியேன். நின் நினைவே என்மனத்தை நிரப்பி நிற்கும். ஆ! இன்றே இன்புற்றேன்!

[கிட்டநெருங்கி இந்திராளைக் கட்டியணைத்து முத்தமிட்டு]

ஆ! என் இன்பமே! என் இன்பமே!

[மாணிக்கம் வருகின்றாள்]

இந்:—ஏடி! என்ன?

மாணி:—இந்திரா! சுகப்பிரியர் நின்னைக் காண்பான் வந்துளார்.

இந்:—(திடுக்கிட்டு) சுகப்பிரியனா! (சற்றுயோசித்து) நல்லது. வரச்சொல்.

[மாணிக்கம் போகிறாள்]

என் சுந்தரனே! என் செய்வாய்? எங்கொளிப்பாய்? அதோ! அம்மஞ்சத்தின் கீழ் ஒளிந்து கொள்.

சுந்:—என்னே! இவனுக்குப் பயந்தோ ஒளியச்சொன்னாய்? வெகு நன்று! சுகப்பிரியனுக்கு அஞ்சி சுந்தரன் மறைந்தனன் என்ற வசைக் காளாக்கவோ எண்ணினாய் கண்மணி! அப்படிச்செய்யேன். நிகழ்வது நிகழ்க.

இந்:—ஆயின் என்பொருட்டு அவன் சொல்வன பொறுப்பாய்.

[சுகப்பிரியன் வருகிறான்]

வாரும், சுகப்பிரியரே!

சுக:—என் அன்புடை இந்திரா! உன்னைக் காணும் அவா பெரிதும் வாட்டியதால் இங்கு வந்தேன் விரைந்து. சுகமோ?

இந்:—அரசே! சுகமே.

சுக:—(சுந்தரவதனனைக்கண்டு திடுக்கிட்டு, பின் சற்று நிதானித்து) என்ன! என் முகம் பார்த்துப் பேசாது புறக்கணித்து நிற்கிறாய்! என் கண்மணி!

சுந்:—அடே! நிறுத்துவாய் அத்துடன் நின்னுரை.

சுக:—என்னே! இங்குமா வந்து இப்படிப் பேசினாய்?

சுந்:—பேசினேன்? கண்மணியாம்! யாரோவது?

சுக:—யாரா? இதோ இருக்கும் இந்திராவே!

சுந்:—நின் காதலி இங்கில்லை. செல்வாய் வேறெங்கேனும்.

சுக:—என்ன! சிறிதும் மரியாதையின்றி என் காதலிமுன் பேசுகிறாய்! இத்துணைத் துணிவுடன் பேச உனக்கு இங்கு அதிகார முண்டோ? என் பெருமை சிறிது முணர்கிலை.

சுந்:—உன் பெருமையா? இதோ உன் பெருமையை இப்படி (அங்கையை விரித்து மூடிக் காண்பித்து) என் அங்கையாற் பற்றியே அடக்குவேன். பெருமையாம் இவனுக்கு!

சுக:—யாது பகர்ந்தாய்?

இந்:—இருவரும் தயை செய்து சும்மா விருங்கள். சுந்தர வதனரே!

சுந்:—நல்லது. இந்திரா! உன்பொருட்டு இத்துடன் விடுத்தேன். போகிறேன். விடை தருதி.

[செல்கின்றான்]

சுக:—அம்ம! பித்தன் சென்றான்! நம் மணம் முடிந்தபின் அரண்மனையில் ஏதேனும் ஓர் உத்தியோகம் அவனுக்குக் கொடுத்து அவன் வாயை மூடவேண்டும். இந்திரா! உன்னை யான் நாடி ஓடிவந்தும் நீ பேசாதிருப்பதின் காரண மென்னை? நின்காதலால் வாடினேனென்பதை அறியாய் கொல்?

இந்:—ஐயா! அப்படி யெல்லாம் என்னிடம் பேசாதிருக்க வேண்டுகிறேன்.

சுந்:—என்ன! கோபமோ? பிரியே! என்னருகில்வா. நம் திருமணம் முடிவடைகப் போதோ? உன் தந்தை என்

காலந்தாழ்க்கின்றாரோ? அறிகிலேன். அது நடக்கும் போது நடக்கட்டும். நம் மனம் ஒத்திருப்பின்—இந்திரா! கேட்டாயோ!—நம் மனம் ஒத்திருப்பின் நாம் இன்புறுதற்குத் தடையென்னே?

இந்:—(கடிந்து) நீர் இப்படிப் பேசின் இங்கிரேன் யானே!
[சரேலென மறைகின்றாள்

சுக:—ஆ! மறைந்தனள் மின்னலென்ன! இதற்கென் செய்வேன்! இவளை நம்புவது வீணே!
[போகின்றனன்.

முதலங்கம் முற்றிற்று.

---

## அங்கம்—உ

### முதற்களம்.

இடம்: சுந்தரவதனன் அறை.
காலம்: காலை.
பாத்திரம்: சுந்தரவதனன்.

சுந்:—(தனக்குள்) என்னே! நேற்றிரவு உறக்கமே வந்திலது! கண்கள் இந்திராவின் எழிலுறு உருவத்தைக் கண்டவண்ண மிருந்தனவே யன்றி கணமும் துஞ்சில! உடல்மட்டும் பஞ்சணை மெத்தை மீது கிடந்ததே யல்லாமல், உள்ளம் இந்திராளிடம் துள்ளிக்குதித்தோடியது! ஆ! இந்திரா! காதல் ததும்பும் கண்ணுடன் நின் கமலமுகம் கவிழ்ந்த வண்ணம் நின்று, நின் கனிவாய் திறந்து "என் உள்ளங் கொள்ளை கொண்ட கள்வா!" என இனிய குரலில் உரைத்து, என்உடல் சிலிர்க்கச்செய்த நீ, இப்பொழுதும் என் முன் நிற்கின்றாயே! உன்னருகிலிருந்த போது வானுலகின் இன்பந்துய்த்து உன்மத்தனைகவன்றோ இருந்

தேன்! என் மனத்தைச் சூறையாடிய மரகதமே! உன்னை மறுபடியும் காண்பதெப்பொழுதோ? முத்துக்களினிடையே மெல்லெனத் தவழ்ந்தோடும் சிறு அருவியை யொத்த நின் தேன்மொழியை இன்னுஞ் சற்று நேரந்தான் பருகினேனு! அதற்குள் அப்பாவி சுகப்பிரியன் வந்தனனே! (மௌனம்). ஆ! என்னைப் போன்ற துர்பாக்கியன் எவனுமில்லை! இளம் பருவத்திலேயே இன்னுயிர் அன்னையை யிழந்தேன். பின், அப்பனும் அம்மையுமாயிருந்து ஆதரித்து வந்த என் தந்தையையும், நாடு நகரையும் பறி கொடுத்தேன். அம்ம! அம்மட்டோடு நின்றதோ என் தலைவிதி! பிறக்கும்பொழுது கொண்டுவந்த தொன்றுமில்லை, இறக்கும்பொழுது கொடுபோவது மொன்றுமில்லை, இடையில் இருக்கும்வரை மனதிற்கிசைந்த மாதை மணந்து இனிதே வாழலாமென்றால், அதற்கும் வகையில்லை! இந்திராவின் தந்தையோ என் கொடும் பகைவன்! எப்படியோ எங்கள் மனவிருப்பம் நிறைவேறுவது? ஈசா! உன் திருவுளந்தான் என்னையோ? எனக்குரிய நாட்டைக்கவர்ந்து என்பால் கடிய பகைமை பூண்டு, தன் மகளை ஒரு அன்னியனுக்கு மணஞ்செய்ய எண்ணியிருக்கும் வீரகேசரியோ, என் இன்னுயிர் இந்திராளை எனக்களிப்பவன்! ஆ! இதற்கென் செய்வேன்! என்செய்வேன்!

[மரகதம் வருகின்றாள்]

ஆ! அதோ மரகதம் வருகின்றாள். என்ன விசேடமோ?—என்ன? மரகதம்!

மர:—சுந்தரவள்ளால்! இதோ! இந்திராள் ஈந்த நிருபம். நிற்க நேரமில்லை. போகின்றேன்.

[கடிதமளித்துச்செல்கின்றாள்]

சுந்:—(கடிதத்தைக் கண்ணில் ஒத்திக்கொண்டு முத்தமிட்டு, நெடுநேரம் அதன் மேற்புறத்தில் வரைந்த தன்

பெயரை உற்றுநோக்கிப்பின் விரித்துவாசிக்கின்றான்]

"என் இன்னுயிர் சுந்தர!

நின்னைக் கண்டதுமுதல் கண்துஞ்சிலேன். உருவிலி மாரன் உருவொடும் போந்தாலென்ன, நின்னைக் காண அவாவி, கண்கள் நாற்புறமும் நாடித்திரியும். காணாது வாடும். உள்ளம் உன்னையே உன்னி உன்னி உருகும். உயிரொடு வதைகின்றேன். இன்று மாலை பூங்காவிற் காணப் பெரிதும் விழைகின்றேன். வந்தென் உயிரைக் காப்பாய்.

இங்ஙனம்,

இன்னுயிர்க் காதலி,

"இந்திரா."

ஆ! என் கண்ணிற்கிசைந்த கட்டழகி! கருத்திற்கொத்த காரிகையே! உயிர் உய்ந்தேன்! உய்ந்தேன்! சுகவாரியைக் கண்டேன்! அதிற்படிந்து மூழ்கித் திளைக்க ஆசை கொண்டேன்! கரும்பு தின்னக் கைக்கூலி கேட்குநருமுளரோ? நின்னைக்காண நீ வேண்டவும் வேண்டுமோ? இதோ வந்தேன்! இப்போதே வந்தேன்!

[ஓடுகின்றான். பிறகு சற்று நிதானித்து]

ஆ! என்ன பேதமை! இப்பொழுது காலைப் பொழுதன்றோ! இன்றுமாலையன்றோ தன்னைக்காண வரைந்தனள்! அந்தோ! மாலைவரை என் செய்வேன்? எப்படிப் பொறுப்பேன்?

[போகின்றனன்]

## இரண்டாங்களம்.

---

இடம்:—அரண்மனையடுத்த பூஞ்சோலை.

காலம் மாலை.
பாத்திரம் இந்திரா.

இந்:—(தனக்குள்) சுந்தரனைக்காண இங்கு வந்து வெகு நேரமாயிற்று. என் காதலனை இன்னம் காண்கிலேன்! ஒருவேளை யான் விடுத்த நிருபத்தை மறந்திருப்பனோ? இருப்பின் ஐயோ! என் செய்வேன்! சீ! மறவான் மன்னன்! பின்னேன் இங்கு இத்துணை நேரமாகியும் வந்திலன்?(அருகிலிருந்தவோர் ஆசனத்தமர்கின்றாள்)

[சுந்தரவதனன் சந்தடியின்றி பின் புறஞ்சென்று அவள் கண்களைக் கரங்களால் பொத்துகின்றான்]

(திடுக்கிட்டு) ஆ! யாரிது?—என் சுந்தரனு?

சுந்:—ஆம். நின் சுந்தரனே, சுந்தரி! [கரங்களை யெடுத்து] என்னே! சோதிடம் அறிவையோ? தப்பாமற் சொல்லிவிட்டனையே! (சிரிக்கிறான்)

இந்:— (கோபங் கொண்டாள்போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு) இங்குற இத்துணை நேரமோ? என்னைக் காதலிப்பது உண்மையெனின் காலந்தாழ்ப்பாய் கொல்?

சுந்:—கண்மணி! கோபியேல்! நின்னைமறந்திலேன்! காதலியாதொழிந்திலேன்! நண்பனொருவனுக்கு நிருபமொன்று எழுதினேன் சற்று நேரமாயிற்று. இன்பமே! முனியேல்! மங்கையே! முனியேல்! மாகதமே! முனியேல்!

[இந்திராவைக் கட்டித்தழுவி முத்தமிடுகிறான்]

இந்:—(புன்னகை புரிந்து) ஆருயிர் சுந்தா! உன்னையுங் கோபித்து உயிர் வாழ்வனோ? யான் கொண்ட

வெருளி இடைக்குறை வெருளியேயன்றிவேறில்லை. அவ்வெருளியாலன்றோ விலையற்ற உன் முத்தம் கிடைத்தது.

சுந்:—முத்தமென ஒருமையிற் சொல்வானேன்? பன்மையிற் கொள்க.

[பன்முறை முத்தமிடுகிறான்]

முத்தத்திற்கு வறுமை யென்பதில்லை வஞ்சியே!

இந்:—என் சுந்தரமே! சுகவாரியே! இப்பூங்காவிற் சற்றுலாவுவோம். வருகியோ!

சுந்:—வந்தேன்! வந்தேன்! வனிதையே!

[ஒருவரை யொருவர் தழுவிய வண்ணம் உலாவி ஓர் குளத்தைக் காண்கின்றனர்]

இந்:—காதலா! இக்குளத்தையும் இதனைச்சுற்றிலுமுள்ள வானுறவோங்கி வளம்பெற வளர்ந்த மரங்களையும் காண்பாய்! எவ்வளவு அழகாய் உள்ளதிவ்விடம்

சுந்:—என் இன்பமே! ஆம். வெகு நேர்த்தியாயுளது இக்காட்சி! இனிய தென்றல் மெல்லெனத் தவழ்ந்து இன்பம் பயக்குகின்றது. பூக்களின் நறுமணம் எங்கணும் பரவி பரிமளிக்கின்றது. பக்ஷிகள் பாடுகின்றன. இக்குளத்தில் தாமரை மலர்கள் நிறைந்துள. இன்னங்கொஞ்சநேரத்தில் மலர்கள் மடல் குவிந்து மலைவாய்ப்படும் சூரியனைக் கைகூப்பித் தொழும் அதோ! பார்! தாமரைப் பூக்களின் மேலெலாம் கணக்கற்ற சங்கங்கள் தங்கிக் கிடக்கின்றன! அச்சங்கங்களின் பக்கங்களில் தேன்மிகுந்து வழிந்த வண்ணமிருக்கிறது! வண்டுகள் தேனையுண்டு, களிகொண்டு, மீண்டும் மொண்டு மொண்டு மட்டின்றி உண்டு, உன்மத்தங்கொண்டு, அதிற்குடைந்து விளையாடுதலால் உண்டாம் ஒலியைக் கேட்டனையா? காற்று நீர்மேல் மோதியும், மலர்களின் மகரந்தப்பொடிகளைத் திருடிக்கொண்டேகியும், அவற்றை எங்ஙும் வீசித்தூவியும், வாவியில் விளையாடுகின்றது!

இந்:—பளா ! பளா ! என்ன அற்புத வருணனை ! நின்கல்வித் திறம் அத்தகைத்து !-

சுந்:—என் அன்பே இன்னுங்கேள். இவ்விடத்தின் அழகு அத்துடன் நிற்கவில்லை ! சுற்றிலுமுள்ள வானளாவிய மரங்களைக்கண்டு, மேகங்கள் கொண்டாட்டங் கொண்டு அவைமேல் அமர்ந்துள்ளன ! முகிலைக்கண்ணுற்ற மயில்கள் அதோ ! பார் ! தம்தோகை விரித்து ஆடிக்களிக்கின்றன ! மயில்கள் நடன மாதரென நடிக்க,குயில்கள் குதூகலத்துடன் பாடுவதைக்கேள்? குளத்தின் நீர் கரைமேல் மோதி மோதி உண்டாகும் சப்தமானது, ஆடல் பாடல் இரண்டிற்கு மொத்தவாறு தாளம் போடலை யொக்கும் ! இவற்லறைக்கண்டுங் கேட்டுங் களிப்பன போன்று, மரங்கள் தலையசைத்து நிற்கின்றன ! இவ்வளவு அற்புத அழகமைந்த பூஞ்சோலையை யான் எங்குங் கண்டிலேன் !

இந்:—பூங்கா வெகு நேர்த்தியானதே ! ஆயினும், அதன் அழகை எடுத்துரைக்கவல்ல என் சுந்தரனுலன்றோ, இன்றுயான் அதன் வனப்பை முற்றுங் கண்டு களித்தேன்.

சுந்:—தெள்ளிய நீரிற் சிறிது அள்ளி அருந்துவம் வாராய்.

[இருவரும் இறங்கி நீர் பருகுகின்றனர்]

இந்:—ஆகா ! என்ன இனிமை !

[அங்கைகளைச்சேர்த்து நீரை நிறையமுகந்து பார்த்து]

ஆ ! என் நாதா ! இங்கு நோக்குவாய் ! கெண்டை ! கெண்டை !

சுந்:—எங்கு ! எங்கு !

இந்:—இங்கு ! இங்கு ! என் அங்கை நீரில் !

சுந்:—(அவள் அங்கை நீரைப்பார்த்து) ஆம் அழகிய கெண்டைகள் இரண்டுள. நீரை மெல்லப் போகவிட்டுக் கெண்டைகளைப் பிடிப்பாய், கண்டு மொழியாளே !

இந்:—(நீரை விட்டு) அந்தோ ! நாயக ! கெண்டைகளிரண்

டும் எங்கோ போயினவே! என்செய்வேன்.? (ஏங்கி நிற்கின்றனள்)

சுந்:—(இளநகையரும்பி) என்னே! எங்கு போயின? ஆ! இதுபெரும் இறும்பூதே! நின்காத்திருந்த இருகெண்டைகளும் நின்முகத்திரண்டு கண்களாய் அமைந்தனவே!

இந்:—(வெட்கித்தலை குனிந்து) இன்ப நாயக! இதோஇரத்தினக்கம்பளம் விரிக்கப்பட்டு, இருமருங்கும் பலவகை மரங்கள் அமையப்பெற்று, இலங்கும் இப்பாதைஇப் பூஞ்சோலையைச் சுற்றிவரும் நாமும் அதன் வழியே சென்றுலாவுவோம்.

சுந்:—அப்படியே செய்வம்.

]இருவரும் பாதை மேல் நடந்து செல்கின்றனர்]

அதோ! பார்த்தனையா! ஓர் மயிற்குழாம் ஆடுகின்றது!

இந்:—ஆம் எவ்வளவு நேர்த்தியான தோகை! அங்கேசெல்வோம் வாராய். (அருகுற் சென்றபின்) என்னே! மயில்கள் நம்மைக்கண்டு ஆடலொழிந்தன! பாடிய குயில்களும் பாடல் நிறுத்தி வாளாவிருக்கின்றன!

சுந்:—(நகைத்து) இது ஆச்சரியமன்றே! என் பக்கல் வரும் மயிலின் சாயல்கண்டு மயில் வெட்கித் தலைகவிழ்தலும், என்னுடன் பேசும் குயிலின் இன்குரல் கேட்டுக் குயில் பாடல் தவிர்த்தலும் ஓர் விந்தையோ?

இந்:—(இளநகை செய்து) என்செல்வமே! என்ன கற்பனையலங்காரங்கள் அமைத்து அற்புதமாய்ப் பேசுகின்றனை! நம்மைக்கண்டு பயந்து அவைகள் ஆடல் பாடலை நிறுத்தியதை நின் அறிவின் ஆற்றலால் இப்படியெல்லாம் கூறினுய்!

சுந்:—இன்னென்று கவனித்திலையே! இம்மாக்கிளைகளில் உள்ள கிள்ளைகள் குலாவிப் பேசுவதை விடுத்து உன் மொழிபயில்வான் உற்றுக்கேட்டலைப்பார்!

இந்:—சுந்தர! இப்படி யென்னை இனிப் பரிகசித்தால்

யான் நின்னுடன் பேசேன்.

சுந்:—கண்ணே! யான் பரிகசித்திலேன், உள்ளதை யுரைக்கின் உனக்கேன் வருத்தம்? அதோ! பார்! நீ நின் பொன்னடி பெயர்த்து மெல்லென நடக்கும் நேர்மையை நோக்கிய அன்னப்புட்கள் நாணிப் பின்னடைந்து போகின்றன! கண்டதைச் சொல்லாமல் இருப்பது எப்படி.

இந்:—அது கிடக்கட்டும். மேற்செல்வர் வருதி. அந்நாவல் மரத்தை யடைவோம். (அங்குற்று) அந்தோ! உண்பாரற்று எத்துணை நாவற்பழங்கள் கீழே கிடக்கின்றன!

[குனிந்து சில எடுக்கிறாள்]

சுந்:—எங்கே? எனக்குச் சில தருவாய்!

இந்:—(சுந்தரன் முகம் நோக்கிப்பின்) ஆ! இதென்னே? நாவற் பழங்கள் பறந்தோடினவே!

சுந்:—(நகைத்து) கண்ணே! அதோ! நின் நாவற் பழங்கள் வண்டுகளாய் மாறிப் பறக்கின்றன! தேனுண்டு மயங்கிக் கிடந்தவை இப்போது பறந்தன.

இந்:—ஆம்! கண்ணிமைக்குள் கையினின்றோடின!

சுந்:—உயிருய்யவே அப்படிப் பறந்தோடின!

இந்:—அவற்றை யாரே இங்குவதைப்பார்?

சுந்:—நீயே.

இந்:—(வியப்புடன்) நானா! நீ மிக்கக் கொடியான்.

சுந்:—நீயோ? நானோ? காணுதி! நின்முகம் நோக்கிப் பின், நின்கை நோக்கிப் பயந்தே பறந்தன வண்டினம்.

இந்:—ஏன்?

சுந்:—(சிரித்து) உன் கைத்தாமரை எங்கு உன் வதனமதி கண்டு குவியுமோவென வஞ்சியே வண்டினஞ் சென்றன வஞ்சியே!

இந்:—சுந்தர! நீ கடுமனத்தான். என் மேல் எதற்கும் பழி சுமத்துகின்றனை. யான் என்ன அவ்வளவு கொடியளோ? (சிரிக்கின்றாள்)

சுந்—(நகைத்து) ஆம். நீ மிகக் கொடியளே! என்னையே வாட்டுகின்றாய்! அத்துடன் நில்லாமல் நின் கண்களால் விழுங்கவுஞ் செய்கின்றாயே! மேலும், இங்கு நிகழ்ந்த ஒவ்வொன்றும்—மயில் ஆடல் ஒழிந்ததும், குயில் பாடல் விடுத்ததும், கிள்ளை வெள்கிக் குலாவல் வெறுத்ததும், அன்னம் பின்னடைந்ததும், வண்டு கண்டோடியதும்—அங்கையங்கனிபோல் நின் கொடுமையை வெளிப்படுத்தவில்லையா?

இந்:—அம்ம! எவ்வளவு கொடியளாக்கின என்னை நின் மொழிகள்! நின்னுடன் வாதாடி வெல்ல வல்லார் யாரே?—அதோ! அச்சல்வைக்கல் மேடைமீது சிறிது உட்காருவோம் வா.

[இருவரும் மேடைமீதுஉட்காருகின்றனர். ஒருவரை யொருவர் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரித்து உவகையடைந்து, சில நேரம் தங்களையும் தரணியையும் மறந்து, காதல் வசமாகி விளையாடுகின்றனர்.]

(சரேலென எழுந்து) ஆ! ஆருயிர் சுந்தர! என் செய்வேன்? நாம் வெகுநேரம் வேடிக்கை பேசி விளையாடியிருந்து விட்டோம்! நேரம் நிரம்ப ஆய் விட்டது! தோழியர் தேடுவர். யான் செல்லவேண்டுமே!

சுந்:—(திடுக்கிட்டு) என் கண்ணே! கரும்பே! தேனே! அமுதே! (கட்டி முத்தமுடுகிறான்) பொழுது போயினதுண்மையே! மீண்டும் நின்னைக் காண்பது எங்ஙனம்?

இந்:—அந்தோ! என் செய்வேன்? அடிக்கடி நாம் சந்திக்க இயலாது! சுகப்பிரியன் எப்பொழுதும் என்மேல் கண்ணுயிருந்து வருகிறான்!

சுந்:– (யோசித்து) ஆயின், ஒன்றுகேள். என்னிடம் ஓர் வாலிபன் உள்ளான். அவனை நின்னிடம் அனுப்புவல். இட்டவேலையை இட்டமுடன் செய்வன். அழகுறு

தேகன். அரிய விவேகன். பழுதறு பாலன். வேண்டியபோழ்து அவனிடம் நின்நிருபம் கொடுத்தனுப்புவாய் என் இன்பமே!

இந்:—நல்ல யோசனைதான். அப்படியே செய்வேன். அப்பையன் யார்?

சுந்:—அவன் சரிதை விந்தை மிகநிறைந்தது. சொல்லக் கேள். ஒருநாள் வேட்டையாடச் சென்று, தண்ணீர் வேண்டி, ஓர் சிற்றாறு நண்ணினேன். அதன் கரையில் இச்சிறுவனைக் கண்டேன். ஆ! எப்படிக் கண்டேனென்கயான்! சிவந்த மேனியன். சிறந்தநோக்கினன். அழகொழுகு வதனத்தான். அழுத கண்ணினன். தொழுதகையினன். பலவகை நறுமலர் சேர்த்துப் புனைந்த மாலை யொன்று அவன் பக்கலிற் கிடந்தது. செவ்வாம்பல் பழித்த செவ்விய அவனிதழ்கள், குமுதமொழி சில இசைத்திருந்தன. கண்களிரண்டும் விண்ணினை நோக்கிய வண்ணமிருந்த இத்தகைப் பாலனைப் பார்த்துப் பேசல் விழைந்தேன். யாரெனக் கேட்ட என்னைக் கண்ணுற்றுக் களிசிறந்தானெனத் தோற்றினன். தாயிலியாம். தந்தையுமிலியாம். உற்றார் உறவினர் அற்றவனும். அவன் எழிலும், தமிழ் மொழியும், பாலொழுகுவதனமும், பவளவாயும் என்மனத்தைக் கவர்ந்தன. என் உள்ளமும் துள்ளியே அவன்பாற் சென்றது. தன் கண்ணீரால் காலிடையோடும் சிறுநதியின் தண்ணீரைப் பெருக்கியிருந்த அச்சிறுவனைக் கண்டார் யாரே மனமிரங்கார்? அன்று முதல் இன்றுவரை என்னிடமே உள்ளானவன். ஆகா! அவன் என்மீது வைத்துள்ள அன்பையும் விஸ்வாசத்தையும் என்னென்பேன்!

இந்:—நீ செப்பியயாவும் அதியற்புதமானவையே! நல்லது. அவனை அனுப்புவாய்.—அந்தோ! என் சுந்தரநாதா! யான் செல்லவா? எப்படிப் பிரிவேன் நின்றனை யானே?

[கண்ணீர் விடுகிறாள்]

சுந்—(கண்ணீர் துடைத்து) கண்மணி! வருந்தேல்? (கட்டி யணைத்து) என் கனியே! அழேல்! (முத்தமிட்டு) ஈசன் நம்மிருவர்க்கும் விரைவில் திருமணம் முடியாது விடான். யான் போய் வருகின்றேன்.

[பிரிவாற்றாது இருவரும் இறுதியில் பிரிந்து செல்கின்றனர்.]

## மூன்றாங்களம்

இடம்: சுந்தரவதனன் அறை.
காலம்: காலை.
பாத்திரம்: சுந்தரவதனன்.

சுந்:—(தனக்குள்) இந்திராவிடம் சத்திய சேனனை அனுப்புவதாகச் சொல்லி வந்தேன். அவனும் தன் பெயருக்கேற்றபடி உண்மையாயும், உள்ளன்போடும் எதையும் செய்து வருகின்றான். அவனே நம் கருத்திற்கும் விருப்பத்திற்கும் ஒத்தபடி நடக்கும் குணத்தினன். இந்திராவிடம் இருக்க இசையவேண்டுமே! அவன் இஷ்டத்தை யறிவோம். (வெளிப்படையாய்) சத்தியசேனா!—சத்தியசேனா!

[வருகின்றான்]

சத்:—ஐயா! வந்தேன்.

சுந்—சத்தியசேனா! உள்ளே என் செய்தனை?

சத்:—தங்கள் சட்டையைத் தயார் செய்து, வேண்டிய உடுப்புகளை யெடுத்து வைத்தேன், மன்னவ!

சுந்:—(தனக்குள்) எப்பொழுது பார்க்கினும் எனக்குவேண்டிய உடுப்புகளை சுத்தி செய்து, சீர்திருத்தித் தயாராய் வைத்து, மற்ற எனக்குவேண்டிய சௌகரியங்களைச் செய்வதிலேயே கருத்தாயிருக்கும் இவன் அன்பை என்னென்பது! (வெளியில்) நல்லது. நின்னை யோரிடம் அனுப்ப எண்ணியுளேன்.

சத்:—எங்கோ பகர்வீர் ஏந்தலே! செப்பிடில் தப்பாது செல்வேன் இப்பொழுதே!

சுந்:—சிறுவ! நின்குணம் நிரம்ப நேரிதே! பணித்தவை பழுதறப் பண்ணுவாய் பாலன் நீ, அணுவும் ஐயம் நான் கொண்டிலேன் அப்பனே!

சத்:—அரச! நம் அன்பினிற் கடியனேன் அளிப்பதென்னே! உயிருள்மட்டும் உரைத்ததைச் செய்துமே மரித்கலே என் கடன்.

சுந்:—வந்தனம் நின் அன்புறு சொற்கு-நிற்க. அரசன் அருந்தவப் புத்திரி இந்திராளை அறிவையன்றே?

சத்:—அறிவேன், அண்ணலே!

சுந்:—அவளென் அன்பிற்குரியாள். என் காதலி. என்னுயிர், என்னுடல், என்பொருள், என்சுகம் எல்லாமவளே! அவளிடம் உன்னை அனுப்பவேண்டுகிறேன்.

சத்:—நல்லது இறைவ! நாயேன் செய்யவேண்டியது யாதோ?

சுந்:—சொன்ன சொற்றவறாத சிறுவ! நினக்கு யான் அளிக்கும் கைம்மாறென்னோ?—இந்திராளிடமே இனி நீ இருப்பாய். அவளிடும் பணியைச் செவ்வனே செய்வாய்.

சத்:—(திடுக்கிட்டு) இனியான் அவ்விடவே இருக்கவா? (கண்கலங்கி) எளியேன் இழைத்த பிழையென்னோ என் இறைவனே? ஒன்றும் உணர்கிலனே!

சுந்:—பிழையேதும் செய்தாயில்லை. உன்மேல் எப்போதேனும் குற்றம் கண்டு குறை கூறியிருக்கின்றேனா?

**சத்:**—பின்னேன் என்னை வேறிடம் அனுப்புவது? ஐயோ! எசமானே! என்னை நீக்கவேண்டாம்.

**சுந்:**—யான் உன்னை வேறெங்கும் அனுப்பவில்லை. வேலையினின்றும் நீக்கவேயில்லை. இந்திராளிடமிருப்பது என்னிடமிருப்பதே போலும். மேலும் என்காரியம் கருதியே அங்கு நீ போவது.

**சத்:**—(அழுத கண்ணுடன்) என் ஆருயிர்த்தலைவ! தங்களிளிடமே இருக்கப் பெரிதும் ஆசையுடையேன். தாய் தந்தையற்றுத் துணையின்றி தனித்துத் தவித்துத் திரிந்த அனுதையான எளியேனை ஏற்று அன்புடன் காத்தளித்த கருணைமூர்த்தியே! என்னை வேறெங்கும் அனுப்பவேண்டாம்.

**சுந்:**—(மனமுருகி) அப்பா! சத்தியசேனு! அழவேண்டாம். நீ யெங்கு போகிருய்? இந்திராளிடந்தானே. அதற்கு வருந்துவானேன். அவளுன்னை மிக்க அன்புடன் நடத்துவள். என்பொருட்டே அங்கு செல்கின்ருய் அவள் கொடுக்கும் கடிதமேனும், அல்லது சொல்லும் சங்கதியேனும் அவ்வப்போது என்னிடம் வந்து கொடுத்தும் சொல்லியும் வருவதற்கே உன்னை அனுப்ப விரும்புவது. வேறில்லை.

**சத்:**—ஐயா! தங்களை விட்டுப்பிரிதல் சகியேன். இறப்பினும் இறப்பனேயன்றி தங்களை விட்டுச் செல்லேன். உலகில் வேலையாள் குற்றமது செய்திடில், அடித்தும் திட்டியும் திருத்த முயல்வதில்லையோ? திடீரென நீக்குவதோ? அப்படியான் அறிந்தும் அறியாதும் குற்றம் செய்திருப்பின் என்னைத்தண்டிப்பீர்!

**சுந்:**—அந்தோ! சத்தியசேனு! வீணில் வருந்ாதே! ஈசனறியக் கூறுகிறேன். உன்மேல் குற்றமில்லை, உன்னிடம் யான் எவ்வளவு நன்றியுடன் இருக்கிறேனென்பதைக் கடவுளறிவான். நான் சொன்னது போல், இந்திராள் உன்னை மிகவும் தயவாய் நடத்துவள். நீ

சென்று அடிக்கடி என்னிடம் வருவாய். அங்கிருப்பினும் நீ என் சத்தியனே யன்றி வேறில்லே. இது சத்தியம்.

சத்:—என் துரையே! தங்களேயொத்த எசமான் எனக்கு கிடைப்பார்? வேறு வழி யிலேயோ! யான் போயே தீரவேண்டும் போலும்?

சங்:—அப்பா! சத்திய! நீதான் அங்கு தங்கியிருக்கத் தக்கவன். எவ்வளவு சொல்லியும் நீ நம்பமாட்டேன் என்கிறுய். உன்னே நீக்கி யான் எப்படி சகிப்பேன. நீ போகாவிடில் என் செய்வேன்?

சத்:—ஐய! இதோ போகின்றேன். தாங்கள் வருந்தவேண்டாம். அப்பனும் அம்மையும் அய்யனுமாய் என்னே ஆதரித்து வந்த உம்முடைய கட்டளேயை மீறி நடப்பனே? இதுவரை ஏதோ மூடத்தனமாய் பேசியதை மன்னித்தருள்க. என் தெய்வ மன்ருே நீர்? இதோ செல்கிறேன். விடையுங்கொண்டேன்.

[தொழுது செல்கிருன்]

சங்:—(மனமுருகி) அப்பா! சத்தியசேனு! இங்குவா

[மீண்டும் சத்திய சேனன் வருகிருன்]

வருந்தாதே! களிப்புடன் சென்றுவா. அடிக்கடி என்னிடம் வருவாய்.

சத்:—என் உயிரே! போகின்றேன். கடவுள் உம்மைக் காப்பாராக. கடையனேச் சிறிதேனும் நினேப்பீர்கொல்? அன்றிமறப்பீரோ?—மறவேல்! மறவேல்!

சங்:—மறவேன்! நீ அன்புடன் இட்டவேலேயை அழகுறச் செய்ததை யாரே மறப்பார்? மேலும் அடிக்கடி என்னிடம் வருவதாலும், என்னேச்சார்ந்த வேலேயைச் செய்வதாலும் நீஎன்னிடமிருப்பது போலுமேயல்லாமல் வேறில்லே. சென்றுவா செல்வச்சிறுவ! உனக்கொரு குறையுமிராது. வருந்தேல்.

[சத்திய சேனன் அழுதவண்ணம் போகின்ருன்]

என்னே! இச்சிறுவன் நடத்தை விந்தையினும் விந்தையே! வேலையாள் இத்தகை அன்பும் நன்றியும் காட்டலை எங்குங் கண்டிலேன்! கேட்டுமிலேன்!

[போகின்றான்]

## நான்காங்களம்.

---

இடம்: அரண்மனையின் ஒருபுறம்.

காலம்: மாலை.

பாத்திரம்: சுகப்பிரியன்.

சுக:—(தனக்குள்) இந்திராளோ நம் இஷ்டத்திற்கு இசைந்திலள். நாடோறும் இந்நேரம் இங்கு மங்குந்திரியும் பெண்கள் எல்லோரும் இன்று எங்கு சென்றனர்? இந்திராளின் தோழிகள் நல்ல அழகிய பெண்களே! அவர்கள் அவள் அறையிலும் காணோம்! வேறு எங்கு போயிருக்கக் கூடும்?—அதோ! ஒருமாது வருகின்றாள். அவளிடம் நம் மனத்தை அறிவிப்போம்.

[மாகதம் வருகிறாள்]

ஆ! சுந்தரமாதே! எது இவ்வளவு விரைந்து செல்வது?

மர:—ஐயா! சேரநாட்டதிபரே! அவசரமொன்றுமில்லை. என் இல்லிற்கே செல்கிறேன்.

சுக:—ஆயின் உன்னுடன் சிலவார்த்தைகள் பேச விரும்புகிறேன். இவ்விடம் பொழுது போவது வெகு கடினமாயிருக்கிறதே! நீங்களெல்லோரும் எப்படி பொழுது போக்குகிறீர்களோ அறியேன்!

மர:—மன்னவ! என்னை மன்னிப்பீர். யான் இப்பொழுது தங்களுடன் பேச முடியாது.

[போகப் பார்க்கின்ருள்.]

சுக:—(குறுக்கிட்டு) சற்று நிற்பாய். ஆகா! நீ எவ்வளவு அழகாயிருக்கிரு யென்பதை அறிவையோ? உன் முகத்தைக் கண்டு சந்திரனும் வெள்கி ஒளிகுன்று வான்.

மர:—இராசகுமார! என்னையிது? ஆச்சரியமாயிருக்கிறது உம் நடத்தை? செல்பவளை வழிமறித்து என்னென்னவோ பேசுகின்றீர்!

சுக:—பெண்ணே! கோபியேல்! இந்நாட்டில் ஆடவர்கள் பெண்களைக் காதலிப்பது கிடையாதோ?

[கிட்ட நெருங்குகிருன்]

மர:—(கோபித்து) ஐயா! சற்று எட்ட நில்லும்? அரசிளங் குமரனென்று சிறிது மரியாதையாய்ப் பேசியது. வரம்பு கடந்து பேச வேண்டாம்.

சுக:—இல்லை. இல்லை. கோபம் வேண்டாம். யான் சொல் வதைக்கேள். கண்ணே! யான் உன்னைக் காதலிக்கி றேன்—

மர:—அடே! துஷ்டா! எட்டிச்செல்! உனக்கேற்றவள் பின்வருகின்ருள்.

[போய் ஓர் திரை மறைவில் ஒளிந்து கொள்கின்ருள்]

சுக:—(திகைத்து) என்னே! கல்லேனுங்கரையும் இவள் கன்னெஞ்சம் கரைந்திலதே! என்ன தேயமோவிது? புதுமையாயுள்ளது! அரசன் விருப்பத்திற்கு இசை யாத அணங்குண்டோ! காவலன் கருத்திற்குடன் படாக் காரிகையுமுண்டோ? இன்னுளை யொப்பார் பலரிருப்பின் தொலைந்தேன் யான்!—ஆ! அதோ! வேறொருத்தி வருகின்ருள்! முன் சென்ருள் பின் வருபவள் நினக்குகந்தவளென்றனளே! அது இவ ளைக்குறித்தோ? பார்ப்போம்—

[மோகன வருகிருள்]

எங்தெழில் அணங்கே! எங்கு கடிதே செல்கின்ருய்?

மோக:—இளவரசே! எங்குமில்லை. என்னிருப்பிடமே ஏகுகின்றேன். ஏது தாங்கள் இன்று தனித்திங்கே யிருப்பது?

சுக:—(தனக்குள்) இவள் இசைவளெனப் புலப்படுகின்றது! தானே நம்மைக் குறித்து விசாரிக்கின்றனள். (வெளியில்) ஆம். தனித்தே தவிக்கலானேன்! என்செய்வது?

மோக:—தவிப்பரோ தங்களையொத்த அரசர்கள்?

சுக:—இந்த நாட்டில் எவரும் தவிக்க வேண்டியதே! பொழுது போம் வழியொன்றுங்காணேன்!

மோக:—தங்களுக்கே கடினமாயின் என்செய்வது? எவ்வளவோ வகை விளையாட்டுகளும், வேடிக்கைகளும் இருக்கின்றனவே!

சுக:—அவற்றில் என்மனம் செல்வதில்லை. ஏனெனிற் யான் ஒரு கன்னல் மொழிக் காரிகையைக் காதலிக்கிறேன். அவள் இசைவளோவென்று சஞ்சலப்படுகிறேன்.

மோக:—ஆ! அனங்கனைப் பழிக்கும் அழகுடைய தங்கள் மனதிற் கிசையாத மாதருமுளரோ? யாரோ அவள்?

சுக:—(உளமகிழ்ந்து) நீயே! என் சொல்கிருய்?

மோக:—(திடுக்கிட்டு) நானு? கேலி செய்கின்றீர்.

சுக:—இல்லை. இல்லை. உண்மையே! உன் செவ்விய இதழும் மதுர மொழியும், யாரைத்தான் மயக்காது?

மோக:—(தனக்குள்) நம் மனம் போல் வாய்த்தது. (வெளியில்) நானும் தங்களை அரண்மனையிற்கண்ட அக்கணமே காதல் கொண்டு வாடினேன்.

சுக:—ஆ! ஆ! அப்படியா! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று! நம்மிருவர் மனத்திலும் ஒரே நினைவும், ஒரே காதலும் குடிகொண்டிருப்பது என்ன அருமை!

மோக:—ஆனல்—(தயங்குகிருள்)

சுக:—(கிட்ட நெருங்கி) ஆனாலென்ன? சொல்வாய் பைங் கிளியே!

மோக:—இந்திராளல்லவா உங்கள் காதலி?

சுக:—சீ! அவளை யான் காதலிப்பதில்லை. மனதிற்கிசைந்து நடவாள். அவளை அவள் நாட்டிற்காக மணப்பதே யன்றி காதலுக்காக வல்ல.

மோக:—அவளை மணந்தபின், என்னை மறந்து தள்ளிவிடு வீர். அல்லவா?

சுக:—இல்லை. மறவேன். என்றும் மறவேன். எங்கே ஒரு முத்தம் தா.

[முத்தமிடுகிறான்]

மோக:—(தனக்குள்) எவ்வளவு இனியகுணவான்!

சுக:—மோகனா!—ஆ! எவ்வளவு அழகிய பெயர் வகித் தாய்!

மோக:—(ஆச்சரியத்துடன்) என் பெயர் எப்படி தெரிந்து கொண்டீர்?

சுக:—ஒருவன் தன் உயிர்க்காதலியின் பெயரைத் தெரிந்து கொள்ளாமலோ இருப்பான்?—என் கண்ணே! என் சொல்கிறாய்?

மோக:—உம் இஷ்டம் எப்படியோ அப்படியே நடப்பேன். நீர் மட்டும் என்னை உண்மையாய்க் காதலிக்க வேண் டும்.

சுக:—எப்பொழுது சந்திப்போம்?

மோக:—கள்ளிருள் எங்கும் படர்ந்தபின் உம்மறை அடை வேன். அதுவரை—

சுக:—இதை வைத்துக்கொள்.

[பணப்பை யொன்றைக் கொடுத்து முத்தமிடுகிறான்]

மறவேல்!

மோக:—மறவேன், மன்னவ!

சுக:—அம்ம! எவ்வளவு கடினம் நம் விருப்பம் நிறைவேறல்! இந்த பெண்மணி வாய்த்தது நம் நற்காலமே!

[போகின்றான்]

மா:—(மறைவிடத்திலிருந்து முன் வந்து) நினைத்தபடியே நிகழ்ந்தது. நல்லது. இந்திராளிடம் சென்று இப்பொழுதே இயம்புவல் இதனை!

[போகின்றனள்]

## ஐந்தாங்களம்.

இடம்: இந்திராளின் அறை.
காலம்: மாலை
பாத்திரங்கள்: இந்திரா, மாணிக்கம்.

இந்:—மாணிக்கம்! அப்பையன் எங்கே?

மா:— அம்மா! உள்ளே உளான்.

இந்:—நல்ல உடுப்புகள் வாங்கிக்கொள்ள வேண்டிய பணம் கொடுத்தனையா?

மா:— கொடுத்தேன்.

இந்:—வாங்கி வந்தனனா?

மா:— ஆம். அம்மா! அவற்றை அணிந்து கொண்டிருக்கின்றான்.

இந்:—நல்லது. அழகிய பையன். துயரங்கலந்த மொழிகள் பகரும் சிறுவன். அல்லவா? அவன் பெயரைக் கேட்டனையா?

மா:— இல்லை. மறந்தேன்.

[மரகதம் வருகிறாள்]

இந்:—ஆ! மரகதம்! வா! என்ன விசேடம்? இவ்வளவு விரைந்தோடி வந்தனை?

மர:—அம்மணி! நல்ல விசேடமே! நாம் நினைத்தபடியே எல்லாம் நடந்தது. சுகப்பிரியன்—

இங்:—(களித்து) அப்படியா! போதும். மேற்சொல்ல வேண்டாம். அறிந்தேன்.

மர:—காலமும் இடமும் கூட அறிவேன்!

இங்:—(ஆவலுடன்) எப்பொழுது? எங்கு? உரைப்பாய் விரைந்து!

மர:—இன்றிரவு! அவன் இருப்பிடம்.

இங்:—என் பொருட்டு எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு வந்தனம். சரி. நீ சென்று ஏனையரோடு கலந்து கொள். மற்றதை யான் பார்த்துக் கொள்கிறேன்.

[மாரகதம் செல்கிறாள்]

மாணிக்கம்! அப்பையனை யழைப்பாய்.

மர:—இதோ! அழைத்து வந்தேன்.

[சென்று சத்தியசேனனுடன் வருகிறாள்]

இங்:—சிறுவ! வருக. (தனக்குள்) என்ன அழகிய பையன்! பால்வடிகின்றதே! சுந்தரன் சொன்னது உண்மையே! (வெளியில்) என்னே! விசனந்தங்கிய வதனந்தாங்கினாய்! சுந்தர வள்ளலை விட்டு வந்ததாலேயோ?

சத்:—(கண்கலங்கி) அவரை யான் விட்டு வந்ததாகக் கருதவில்லை. அவர் பொருட்டே இங்கு இருப்பது.

இங்:—(தனக்குள்) எசமானிடம் இவ்வளவு பிரியமும் அன்பும் வைத்துள்ள வேலையாள் எங்குமில்லை. (வெளியில்) வருந்தாதே. உன்னை அன்புடன் யான் காப்பேன். உன் பெயரென்னை?

சத்:—சத்தியசேனன்.

இங்:—சங்கீதம் அறிவையோ? நன்றாய்ப் பாடுவாயென்க் கேள்வியுற்றேன்.

சத்:—துயரம் மனத்தைத் துன்புறுத்தலை விட்டு விடையளித்தபோது சிறிது பாடுவேன்.

இங்:—அந்தோ! பாவம்! உன் இளம் பருவம் என்ன

துயரைக் கண்டிருக்கும்? பள்ளியில் உனக்குக் கற்பித்த ஆசான் உன்னைக் கொடுமை செய்தனனோ? வேறெவ்வித விசனம் உன்னை வருத்தக் கூடும்? துன்பத்திற் கிருப்பிடமாயும், துயரத்திற்குறைவிடமாயும், துக்கத்திற்கு களஞ்சியமாயும் இருக்கும் இவ்வுலக வாழ்க்கையில் பலவகை இடருற்றுச் சலித்து வாடுவாரின் கோடுகள் பிளந்த நெற்றியை யன்றே விசனம் தன் இல்லமாக்கிக் கொள்ளும்.—சத்தியசேனா! நீ விசனமுறுவது ஆச்சரியத்தை விளைவிக்கின்றது! வருந்தாதே! நீ இனி என் தம்பியை யொப்பாய். வேலையாளென நினையாதே!

சத்:—(கண்கலங்கி) அம்மணி! கல்லுங்கரையும் கனிமொழி புகன்று என்னை ஆற்றுதல் செய்யும் உனக்கு யான் அளிக்கும் கைம்மாறு என்னவோ!

இந்:—அது கிடக்கட்டும். யானொன்று உன்னைக்கேட்க விரும்புகிறேன்.-சுந்தரக் காவலன் என்னைக் காதலிக்கின்றானா?

சத்:—காதலா? அம்மா! அது என்னவோ யான் அறிகிலேன்!

இந்:—என்னே! காதலின்னதென்ன அறியாயா! விந்தையே! கடுந்துன்ப மறிந்த உனக்குக் காதல் இன்னதென்று தெரியாதது பெருவியப்பே!—போகட்டும். சுந்தரன் என்னைப்பற்றி நினைப்பதுண்டோ?—பேசுவதுண்டோ? சொல்வாய்.

சத்:—அம்ம! உணவு உறக்கமின்றித், தன்னையும் தன்னைச் சார்ந்த ஆருயிர் நண்பர்களையும் மறந்து, உன்வதன மதியொன்றையே நினைத்த வண்ணம் இருத்தல் காதலாயின்; அயர்ந்து, சோர்ந்து, துணைக்கரம் கட்டியிருந்து, பேயெனவிழித்துப் பேசாதிருந்து, நாற்புறம் பார்த்து, நாவெழாதிருந்து, பெருமூச்செறிந்தே நாளைக்கழித்தல் காதலாயின்; அனல்வாய்ப்பட்ட இல்லக்கிழவோன், கனத்த குரலில் கதறுவது போன்று, நின் பெயருரைத்து, நின்னைப் பன்முறை விளித்தல்

காதலாயின் ; எவரேனும் பெண்ணொருத்தித் தன் புற்றுளெனின், பெரிதும் திடுக்கிட்டு, மனங்கலங்கி, நீயோவென அஞ்சிநடுங்கி, அழுதவண்ண மிருத்தல் காதலாயின் ; துயிலுமுன்னும், துயின்றபின்னும், துயிலொழியுங்காலும் நின் பெயரையே யுரைத்தல் காதலாயின் ;—அவர் உன்னைக் காதலிக்கின்றாரென உறுதியாய்ச் சத்தியம் செய்வேன் !

இந்:—(தனக்குள்) சுந்தர ! என்னே, நின் காதல் ! பன்னரும் அன்பின் பண்பு அத்தகைத்தோ ? (வெளியில்) பளா ! சத்தியசேன ! இப்படிச் செப்பிடச் சுந்தரன் பணித்ததோ ? நன்கே நவின்றாய் ! உள்ளம் உருக்கும் சொற்களைச் சேர்த்தே, இன்புறப் புனைந்தாய் இனியதோர் சொன்மாலை ! நீ இயம்பியவாறு காதலிப்பாருமுளரோ ?

சத்:—அப்படிச் செப்பிடேல், ஒப்பிலாமணியே ! பொய்யுமறியேன். புனையவுமறியேன். மெய்யேயுரைத்தேன். மெல்லியளே ! மனக்கொராய் !

இந்:—வருந்தற்க, அருங்குணச் சிறுவ ! விளையாட்டிற்கு அப்படிக்கேட்டதேயன்றிவேறில்லை. வா,போவோம். அரசனை நாடி யான் செல்லவேண்டும். நேரமாயிற்று.

[போகின்றனர்

## ஆறுங்களம்.

இடம் : சுகப்பிரியன் அறைக்கு முன்.
காலம் : இரவு.
பாத்திரங்கள் : புருஷோத்தமன், சுதர்மன், பிரதாபன்.

சுத:—நம்மை எதற்கோ இவ்விடம் வரும்படி அரசன் கட்டளை யிட்டான்?

பிர:—அதுதான் எனக்கும் விளங்கவில்லை. இரவில் இந்நேரத்தில் இவ்விடம் தன்னை சந்திக்க விரும்பியதின் காரணம் என்னையோ?

புரு:—எல்லாம் சிறிது நேரத்திற்குள் தெரியவரும். இந்நேரம் அரசன் வந்திருக்க வேண்டுமே!

சுத:—அதோ! வருகின்றான்!

பிர:—இந்திராளும் தோழியுடன் வருகின்றாளே!

புரு:—காவலாளர் புடைசூழவன்றோ வருகின்றான்! என்ன விசேடமோ தெரியவில்லை.

[வீரகேசரி, இந்திரா, மாரகதம், காவலாளர், முதலியோர் பிரவேசிக்கின்றனர்]

வீர:—இந்திரா! நீ சொல்வது உண்மையா? நிச்சயமாய்த் தெரியுமா?

இந்:—ஆம். பிதாவே! மாகதத்தை வேண்டுமாயின் கேளுங்கள்.

வீர:—என்னே! மாகதம்! உண்மையா?

மர:—அரசே! நானே நேரில் கண்டேன்.

இந்:—பிரிய தந்தையே! அத்தகைய அயோக்கியனுக்கு என்னை மணமுடிக்க மனமொப்பீரென நம்புகிறேன்.

வீர:—நல்லது. எல்லாம் வெகு விரைவில் வெளிவரும். நீங்கள் உங்களறைக்குச் செல்லுங்கள். மேல் நடக்க வேண்டியதை யான் கவனிப்பேன்.

[இந்திராளும், மாரகதமும், செல்கின்றனர்]

புருஷோத்தமரே!

புரு:—வேந்தே!

வீர:—நீர் தயை செய்து மோகனை தன் அறையில் இருப்பதும் இல்லாததும் அறிந்து வரவேண்டும்.

புரு:—இதோ சென்றேன்.

[போகிறான்]

வீர:—(காவலாளரை நோக்கி) அடே! சுகப்பிரியன் அறையை நாற்புறமும் சூழ்ந்து நன்கே காவல் புரியுங்கள்.

காவ:—மகராஜ்! வெகு கவனமாய்க் காப்போம்.

[காவலாளர் சுகப்பிரியன் அறையைச் சூழ்கின்றனர்]

வீர:—(தனக்குள்) என்னேயிது! நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததே! நம் எண்ணம் நிறைவேறுவதில் சர்வேசுவரனுக்குச் சம்மதமில்லை போலும்! (வெளிப்படையாய்) என்ன, இன்னம் புருஷோத்தமர் மீண்டிலர்?

[புருஷோத்தமன் வருகிறான்]

அதோ! வருகின்றார்! புருஷோத்தமரே! என்ன சமாசாரம்?

புரு:—அரசே! மோகனையின் இருப்பிடஞ்சென்று அவள் தோழிகள் சிலரைக்கண்டு கேட்டேன். அவள் இல்லையென்பாள் ஒருமாது. இருக்கிறாள் யென்பாள் மற்றொருமாது. ஒருத்தி "மோகனை வேலையாயிருக்கிறாள் வாமுடியாதாம்." என்றனள். மற்றொருத்தி "மோகனை உறங்குகின்றாள்" என்றுரைத்தனள். இவ்வாறு பலர் பல்வேறு விடைவிடுத்துச் சிரித்தனரேயன்றி தக்க விடை எவரும் தந்திலர். அவள் அங்கில்லை யென்று நினைக்கின்றேன்.

வீர:—சரி. அடே! யாரடா! சுகப்பிரியன் அறைக் கதவைத் தட்டடா!

[யாவரும் கதவைத் தட்டுகின்றனர்]

என்ன? இன்னம் காது கேட்டிலதோ? நன்ருய் இடியுங்கள். இன்பக்கடலழுந்தி செவிடாராயினர் போலும்!

[பெருத்த ஓசை செய்கின்றனர்[

வெகுநன்றிது! அடே!—

சுக:—(மேல் மாடியில் சன்னலைத் திறந்து) யாரடா! அங்கே! இந்நள்ளிரவில் பெருத்த ஓசை செய்வது? சிறிதும் அச்சமின்றி அப்படிச்செய்பவனைக் கண்டால் துண்டமிரண்டாய் வெட்டுவன் வாள் கொண்டே! காவலாளர் எங்குபோயினர்? கசடர்கள் யாவரோ கதவைத் தட்டி ஓசை செய்கின்றனர்.

வீர:—சுகப்பிரியா!

சுக:—யாரடா! விளிப்பவன்?

வீர:—சுகப்பிரிய! யானே!

சுக:—(திடுக்கிட்டு) யார்? அரசனு?—

வீர:—ஆம்.

சுக:—வேந்தே! என் வேண்டும்? ஏது, இப்பொழுது இவ்விடம் வந்தது?

வீர:—கொஞ்சம் கீழிறங்கி வருவாய். அவசரக் காரியம் ஒன்றிற்கு உன்னுதவி வேண்டும்.

சுக:—இதோ! வந்தேன்! இறைவனே!

[கீழிறங்கி கதவைத் திறந்து நின்றுகொண்டு]

காவலராயிருந்தும் தாங்களே இரவில் இப்படி இம்சை அளிப்பது அழகேயோ?

வீர:—இம்சை செய்வான் வரவில்லை. ஒரு காரியம் கருதியே வந்தது. வழிவிட்டு நில்லும். உட்செல்வோம்.

சுக:—(முகம் வெளுத்து) வேந்தே! மன்னிப்பீர்! உட்செலவியலாது. வேண்டின் தங்கள் அறைக்கு யான் வருவேன்.

வீர:—இல்லை. அது சரிப்படாது. உள்ளே செல்லவேண்டும்.

சுக:—அதுதான் கூடாது! யாராயினும் சரியே!

வீர:—யாவரும் உள்ளே நுழையுங்கள்!

[எல்லோரும் உட்செல முயல்கின்றனர்]

சுக:—நில்லுங்கள்! (வாளை யுருவி) உட்செல்பவன் உயிர் மாய்வன்!

வீர:—அடே! யாரடா! காவலாள்! இவரைப்பிடித்துக் கட்டுவாய்.—போங்கள் உள்ளே? விரைவில்—

மோக:-(மேல் மாடியில் தோன்றி) சுகப்பிரியரே! வீண் சண்டை வேண்டாம்! என் மானத்தை பங்கஞ் செய்யவே வந்தனர். கூற்றினுங் கொடியரிவர். யானே இதோ இறங்கி வருகின்றேன்.

[வருகின்றாள்]

இதோ! வந்தேன்! என் செயவேண்டும்?

வீர:—(கோபத்தீ பொங்க) அடே! இவளைப்பிடித்து வதையடா!—ஏ! பெண் பேயே! உனக்கு நாணமில்லையா? நல்லறிவழிந்தாயா?, அச்சமறந்தாய்? மடம் பயிர்ப்புணராய்! நீ செய்த காரியம் உன் உயிரைப் போக்கிலதா? என் மருகனாக இருக்கும் இவன் தானு கிடைத்தான் உனக்கு?

மோக:-அரசே! அதிகம்பேசவேண்டாம்.

யாவரும்:—என்னசொன்னாய்? பயமின்றி அரசரை எதிர்த்து உரையாடவும் துணிந்ததோ உன் கள்ளமனம்?

வீர:—ஏனடா! நிற்கிறீர்கள்! கட்டுங்கள் இக்கொடியாளை! சிறையிலிடுங்கள் இச்சிறுக்கியை!

மோக:-சிறைக்கு, என்னை மட்டுமோ அனுப்ப எண்ணினீர்? உம்முடைய செல்வப் புதல்வியும் என்னுடன் வர வேண்டும்!

வீர:—என்ன சொன்னாய்?

மோக:-இந்திராணும் என் போன்றாளே! அவளுடன் இருக்கும் அழகிய வாலிபனை அறியீரோ? அந்தோ!

ஒன்று மறியாமல் மோசம் போயினீர்! அச்சிறு வனே அவள் காதலன் காணுதி காவலா!

வீர:—(திடுக்கிட்டுத் திகைத்து) என்ன? வாலிபனு? எவ் வாலிபன்? என்ன உளறுகிறுள்? யாரை உரைக்கின் ருள்? இந்திராளிடம் வாலிபன் ஒருவன் உள்ளனே?

புரு:—ஆம். இறைவ! உள்ளான். அழகுமிக்கான். நாங்கள் பார்த்துளோ மவனை. (தனக்குள்) என்ன ஆச்சரியம் அப்பையனு! அப்பச்சைப்பசும் பாலனு! ஏதோ தெரியவில்லை! இவள் சாமான்யமான பெண்ணல்ல! எப்படியோ இம்முறை தப்பினுள்!

வீர:—(ஒன்றுந்தோன்ருமல்) அவனை விட்டுவிடுங்கள். இம் முறை மன்னித்தோம். செல். நில்லாதேயிங்கு.

[மோகனு போகிறுன்]

சுகப்பிரிய! என்னகாரியம் செய்தாய்! வெகு நேரிது! வெகு நேரிது!

சுக:—(தலைகுனிந்து) என் தலைவ! மன்னிப்பீர். தெரியாமற் செய்தேன்.

வீர:—நல்லது. செல்வாய்—வாருங்கள் யாவரும்.

[யாவரும் செல்கின்றனர்]

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

## அங்கம் ரு.

### முதற்களம்.

இடம்: அரண்மனையில் ஓர் அறை
காலம்: காலை.
பாத்திரங்கள்: சுதர்மன், புருஷோத்தமன், பிரதாபன்.

சுத:—இல்லை! இல்லை! அது உண்மையே!

பிர:—ஆம். அதிற் சந்தேகமின்று. அரசன் இதைக்கேட்டு மனங்கலங்கி ஒன்றும் தோன்றாமல் திகைத்தது ஆச்சரியமேயில்லை.

சுத:—இளவரசி வெகு தூய்யளென்றல்லவோ நினைத்தோம். சனங்களும் அவள் நற்குண நங்கையென்றும், பரிசுத்த பாவையென்றும் நம்பி அவளை நேசிக்கின்றனர்.

பிர:—இனி அவளை யெல்லோரும் வெறுக்கத் தவறார். அப் பையன் ஒன்றுமறியாத குழந்தையென்றல்லவா எண்ணினோம்!

புரு:—அது நம்மதியீனமே! பசுபோல் இருந்து புலி போல் பாயும் இயல்பினரைச் சேர்ந்தவனாயிருக்கிறான். வயதிற் சிறியனாயினும் வஞ்சனையிற் பெரிதும் கைதேர்ந்தவனாய்த் தோற்றுகின்றான்.

சுத:—பாவம்! சுந்தரவதனன் இதைக்கேள்வியுற்றால் அவன் மனம் பெரிதும் கலங்கும். என்செய்வான்? பாவம்!

பிர:—ஆம். என் செய்வது?— ஆகா! கெடுமதியும், கடுமனமும் கொடுங்கோலும் பொருந்திய அரசன்; இனியகுண அரிய சீலம் வாய்ந்தாளெனக்காட்டி, வஞ்சனை சூழ்ச்சி நிறைந்த கள்ளமனமுள்ள இளவரசி; பறைபோன்று பேரொலியுடன் தன் புகழ்பேசி, நற்குண நற்செயல் நாயகனென நடித்துக்காமப்பேராழி ஆழ்ந்துகிடக்கும் சுகப்பிரியன்; தெளிந்தமுகமும்,

இளம்பருவமும், ஒன்றுமறியாத் தன்மையும், ஒருங்கேவாய்ந்த பழுதறுபாலனெனத் தோன்றி, தீமை நிறைந்த மனமும், மோசஞ்செய்யும் கபடமும் படைத்த அப் பையன்; — வெகு நேரிது! இவர்களுக்கும் சுந்தரவதனனுக்கும் எவ்வளவு பேதம்! மாசுமறுவற்றப் பொன்போலன்றோ பொலிந்து திகழ்ந்து விளங்குகின்றான்!

புரு:—ஆம். தடையென்ன! இப்பொழுது எல்லாம் வெளியானதால் தாமதஞ் சிறிதுமின்றி சுந்தரனிடஞ் சொல்லி வேண்டியதைச் செய்யவேண்டும் 'மன்னெப்படி மன்னுயிரப்படி' என்றபடி குடிகளின் சுகமும், ஒழுக்கமும் வேந்தனை யொத்ததால், இந்திராளும், சுகப்பிரியனும் நம்மையாளத் தகாதவராயினர்.

பிர:—இந்த விஷயத்தில் முயற்சியில்லா மனிதனைக் கடவுள் வெறுத்து, மறந்து தண்டிப்பார்.

சுத:—சுந்தரவதனன் சும்மா விருக்கின்றானே! அதற்கென் செய்வது? பிரபுக்கள் எல்லோரும் அவன் பிரியத்தை எதிர்பார்க்கின்றனர். குடிகளோ அவன் நடந்து சென்ற நிலத்தையுந் தொழுது, முற்றும் விளைந்து பருவமெய்திய நெற் பயிர்கள் காற்றால் தாக்குற்று ஒரே திக்கில் சாய்வன போன்று, பல்லாயிரம் மனங்களும் ஒன்றுபட்டு அவன் விருப்பத்தை வேண்டா நிற்கின்றனர்

புரு:—நீர் சொல்வது சரியே! இனியொன்றுந் தாமதமிராது. ஏனெனில், இந்திராளிடம் இருந்த காதல் பற்றி இளவரசு இதுவரை சும்மா விருந்தனன் போலும். இனி அவள் உண்மைக்குணத்தை உரைக்கின் எல்லாம் சரியாம்.

பிர:—ஒருகால் நாம் சொல்வதை நம்பாவிடின் என்ன செய்வது?

புரு:—யான் நம்பச்செய்கிறேன், பாரும்.

பிர:—எப்படி ?

புரு:—யானே கண்கூடாகக் கண்டதாகச் சத்தியம் வேண்டுமெனினும் செய்து நம்பச்செய்வேன். அதோ! தோன்றினன் தோற்றலும்! இங்கு வருகின்றான்!

[சுந்தரவதனன் பிரவேசிக்கிறான்]

வந்தனம் வேந்தே!

சுந்:—வந்தனம்.

பிர:—உம் வரவை எதிர்நோக்கிய வண்ணமிருந்தோம்.

சுந்:—அப்படியா? என்பிரிய நண்பர்காள்! என் கஷ்டகாலத்திலும் என்னை மறவாது நேசிக்கும் உங்களுக்கு எழுமையும் நன்றியுள்ளவனுவேன்.

புரு:—இளவரசே! மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்வதை மன்னித்தருள்க. நீர் வீண்காலம் போக்குகின்றீர். அன்னியனே உம் நாட்டையடைவது? அவனும் குணத்திற்கடையன். காமப்பேய் பிடித்துக் காரிகையார் மாயவலைப்பட்டு மாள்கின்றான். அன்னுன் அரசனுய்வரின் குடிகள் கதி என்னும்!

சுந்:—பல்கோடி வந்தனம் உங்கள் அன்பிற்கும் என் பொருட்டு எடுத்துககொள்ளும் சிரமத்திற்கும். ஆனல்—

புரு:—ஐயனே! காலம் வந்துவிட்டது. இதுவே சமயம். குடிகளோ அரசனை வெறுக்கின்றனர். சுகப்பிரியனே இன்ன குணத்தினனென்று எல்லோரும் தெளிவுற அறிந்தனர். நல்லாளென அவர்கள் நினைத்து நேசித்துவந்த இள்வரசியோ—

சுந்:—(திடுக்கிட்டு அவசரத்துடன்) என்? என்ன? அவளுக்கென்ன? சுகந்தானே? சொல்லும் விரைவில்!

புரு:—அவளையும் அவர்கள் வெறுக்கத்தலைப் பட்டனர்.

சுந்:—என்? இதுமிக விந்தையே!

புரு:—ஏனெனில், அவள் பெண்களுக்குரிய—

[தயங்குகிறான்]

சுந்:—உரைப்பீர் சீக்கிரம்!

புரு:—பெண்களுக்குரிய பேராபரணத்தை இழந்தன ளென்று கண்டு கொண்டதினால்.

சுந்:—நீர் சொல்வது விளங்கவில்லையே? விவரமாய்ச் சொல்லும்.

புரு:—(தனக்குள்) அந்தோ! இன்னம் எப்படிச் சொல்வது? இதையறியமாட்டானோ? (வெளியில்) அரசே அவள் கற்பழிந்தாள்!

சுந்:—(திடுக்கிட்டுக் கோபங்கொண்டு) என்ன சொன்னீர்!

புரு:—கோபியேல் கோவே! அவள் தூய்மை இழந்தது துண்மையே!

சுந்:—மறுமுறை அவ்வுரை உரைப்பீரேல் நீர் மாண்டீர்! (வாளையுருவுகிறான்)

புரு:—கோதில் குணத்தோய்! கோபியேல்! நானே கண்களால் கண்டேன்.

சுந்:—(வாளை வீசி) அப்படிக்கூறுபவன் உயிரைக் கூற்றுவனுக் கிரையாக்குவேன்.

[புருஷோத்தமனைத் தாக்குகிறான். ஏனையோர் அவனைக்கரம்பற்றி ஈர்க்கின்றனர்]

விடு, விடு, கரத்தை! அவன் நாவைத்துண்டியாது விடேன். பரிசுத்த பாவையைப் பழிப்போன் உயிர் வாழத்தகான். தையலார் பலரும் துன்புறுவர் இவனால்.

[திமிறிச்செல்ல, மீண்டும் யாவரும் தடுக்கின்றனர்]

எட்டி நில்லுங்கள்! தடுப்பார் தரைமிசை வீழ்வார். குன்றுகள் பல ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கிக் குறுக்கிடினும், அக்குன்றுகளுங் குன்றயான் குன்றி

வர்ந்து குன்றக் குமானென அப்பாதகன்மேற் பாய்ந்து குத்துவன் கைவாளாலே!

புரு:—(பின்வாங்கி) ஆ! இது அதிசயமே! காதல் அவன் கண்ணை மூடிற்று! எப்படி நம்புவன்?

பிர:—ஐய! பொறுத்தி! அப்ப! பொறுத்தி! அண்ணலே! முனியேல்! அரசனே முனியேல்!

சுத:—சுந்தரவள்ளால்! தயைசெய்து சற்று நிதானிக்க வேண்டும். அவர் கூறியதுண்மையே; மேலும் அவர் உம் ஆருயிர் நண்பரென்பதை மறந்தீர். மன்னித்தல் மாண்புடையோர் பெருங்குண மன்றோ?

சுந்:—(கோபந் தணிந்து, வாளை உறையிற்சேர்த்து) என் நண்பர்காள்! என்னை மன்னியுங்கள். ஏதோ கோபத்தால் கண் மூடிக் கடுஞ்சொல் பல பகர்ந்தேன். கற்பினுக் கணி கற்பழிந்தாலென்ற அற்புதச்சொல் அப்படிச் செய்தது. உங்களைப்பற்றி எவரேனும் தகாதன சொல்லின் இப்படியே முனிந்திருப்பேன். இனி முனியேன். உரைப்பன முற்றும் செவி சாற்றுவேன்.

புரு:—வந்தனம். சுந்தரவதனப் பெருந்தகையே! யனுரைத்தது மெய்யே! சத்தியம் சாற்றினேன்.

சுந்:—ஓ! அப்படிச் சொல்லவேண்டாம். அவள் அப்படியாயின் பெண்கள் எல்லோரும் கற்பில்லாதவர்களே!

புரு:—நான் சொன்னதில் தினையளவும் பிசகில்லை.

சுந்:—யாருடன் கற்பழிந்தாள்?

புரு:—அவளுடன் உள்ள சிறுவனை அறிவீரோ?

சுந்:—அறிவேன். அவனுக்கென்ன?

புரு:—அவனே அவள் கற்பைச் சூறையாடிய கள்வன்!

சுந்:—(நகைத்து) அவனா? அப்பச்சைப் பசுமபாலனா? பளா! பளா! நல்லமொழி நவின்றீர்! வெகுநன்று! நீங்கள் யாவரும் உங்கள் அறிவைப் பறிகொடுத்தீர்கள். அன்றேல், பாவமறியா அப்பாலனை, உலகின் வஞ்சனை யொருசிறிது முணரா அச்சிறுவனை அப்

படிச் செப்ப மனம் ஒப்பீர்!

மூவரும்:—இல்லை. அப்பாதகனே! அரசன் முதல் யாவரும் அறிவர்.

சுந்:—(தனக்குள்) அந்தோ! என்ன செய்வேன்? யாவரும் ஒரே மனத்தராய் உரைக்கலாயினர்!

புரு:—யானே நேரிற் கண்ணாரக் கண்டேன்!

சுந்:—ஐயோ! நீர் கண்டபோது உம் கண்களை மின்னல் சரேலெனப் பறித்துச் சென்றிருக்கலாகாதா? அன்றி, இடி உம் உயிரிற்கே உலைவைத்திருக்கலாகாதா? அல்லது, உடனே ஊமையாய் மாறியிருக்கக்கூடாதோ? என்னிடந்தான் சொல்லவேண்டுமோ? ஆ!-

சுத:—தூய்ய மனத்தோய்! வீணில் எங்கள்மீது கோபம் வேண்டாம். வருந்தவும் வேண்டாம். எல்லாம் விதியின் செயல்!

சுந்:—நல்லது: நண்பர்காள்! என்வயின் அன்பு பூண்டு உண்மையாய் நடந்ததற்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பாடுடையேன். யான் போகின்றேன். விடையளியுங்கள்.

[சரேலெனச் செல்கின்றான்]

பிர:—எப்போ-தேனும் இப்படிக் கடிந்து முனிந்தனைதக் கண்டிருக்கிறீர்களா?

சுத:—என்றுமேயில்லை!

புரு:—ஐயோ! பாவம்! சுந்தரன் மனம் உடைந்தனன். ஈசனே! அவனை யளிப்பாய்! அவன் நல்லன். தூய்யன். மெய்யன். மனம் பிளந்து மாளாமே காப்பது உன் கடன், வல்ல கடவுளே!— வாருங்கள். நாம் போவோம்.

[செல்கின்றனர்]

## இரண்டாங்களம்.

இடம்:　　　　சுந்தரவதனன் அறை.
காலம்:　　　　முற்பகல்.
பாத்திரம்:　　　சுந்தரவதனன்.

சுந்:—(தனக்குள்) *அந்தோ! ஈசா! என்னவுலகிது? நல்லொழுக்கமுள்ள யாவரும் நசித்துப் போயினரா? தூயமனத்தோரின்றி இப்புவி நிலைநிற்காதெனப் பெரியோர் கூறுகின்றனரே! பிறமனையைக் கண்ணெடுத்துப் பாராத ஆண்மக்களும், கற்புடை மாதர்களும் அடியோடு அழிந்துவிட்டார்களா? நாடு செழித்தோங்குவதெவரால்? நகர் சிறந்து விளங்குவதெவரால்? பல்வளமும் மலிந்து கிடந்தல் எவர் பொருட்டு? கோனின் செங்கோல் ஓங்குவதும் எவர்பொருட்டு? எல்லாம் விழுப்பமளிக்கும் ஒழுக்கமுடைய உத்தம சீலர்களாலன்றோ? — இத்தரை தானே இயங்குவதன்று, இறைவன் இயக்க நடைபெறுவதென நல்லோர் நவில்கின்றனரே! முற்றுமுணர்ந்த முன்னவன் இவ்வுலகையாள்வது உண்மையாயின், கொடியோர் கொடி பறக்கச் செழித்து வாழ்வரோ? அடாது செய்வார் அப்பொழுதே அழிந்து விழலாகாதோ? (மௌனம்) ஐயோ! இந்திரா! நீ உன் உயரிய நிலையினின்றும் இப்படி இழியவேண்டுமா? கனவிலும் கருதிலேனே! கொழுநனே தெய்வமெனக் கொண்டு, வேறு தெய்வமொன்றுந் தெரியாராய் வாழ்ந்து, தங்கள் கற்பின் வன்மையால் அற்புதச் செயல்கள் பலவியற்றி, தங்கள் புகழுடம்பை என்றும் அழியாதவாறு நாட்டிச் சென்ற சீதா, நளாயனி, சாவித்திரி முதலிய பெண்மணிகளில் நீயுமொருத்தியென வன்றோ உன்னை உச்சிமேல் வைத்து மெச்சி வந்தேன்! ஐயோ! உன் காதலென்னே! உன் அன்புறுக்*

68888

கும் அன்பெங்கே? உன் நாணமெங்கே? நல்லறி வெங்கே? சீ! உன்னை நினைத்தலும் பாதகமன்றோ? (மௌனம்) ஆ! அளவில் அன்பும், கரையில் காதலும், காட்டி வந்த சத்தியசேனனும் மகாபாதகனாக முடிந்தானே! அவன் செய்த காரியத்தை நினைக்கின் என் அங்கம் நடுங்குகிறதே! நாத்தடுமாறுகிறதே! வயிறு எரிகின்றதே! உயிர் சோர்கின்றதே! அடே! துன்மார்க்கா! இச்செயல் செய்யவோ காத்துக்கொண்டிருந்தாய்? இளநகை விளங்கும் உன் முகமும், பெரும் வஞ்சகத்தை மறைக்குந் திரையாயிருந்ததை யறியாது மோசம் போயினேனே!

[சத்தியசேனன் சேய்மையில் வருகின்றான்]

ஆ! அப்பாவி வருகிறானே! (பதறி) அப்படியே அடியற்ற மரம்போல் அழிந்து வீழானோ? ஐயோ? தெய்வமே! என் கட்டழகியின் கற்பழித்த காதகன் என் கண்ணெதிரே வருகின்றானே! அவன் முகத்தைப் பார்! கள்ளங்கபடமற்ற உள்ளத்தைப் பிரதிபலித்து சோதியுடன் விளங்குகிறதே! பாதகனாயின் அவன் முகம் பாவமறியாப் பாலன் வதனம் போன்று பிரகாசிக்குமா? (கோபத்துடன், பரபரப்பாய் வாளையுருவி வெட்ட நினைத்து பிறகு நிதானித்து, வெளியில்) ஆ! சத்தியசேனா!

சத்:—(அருகில் வந்து, அடிபணிந்து) பல்கோடி வந்தனம் என் ஆருயிர்த் தலைவ!

சுந்:—(தனக்குள்) அன்பு சிறிதும் குன்றிலதே! இவ்வளவு நன்றாய் நடித்தல் கூடுமோ? (வெளிப்படையாய்) என்னே! சத்தியசேனா! என்னவிசேடம்?

சத்:—என் இறைவயே! இதோ இளவரசியின் இன்டறு திருமுகம் (கடிதம் கொடுக்கின்றான்)

சுந்:—(வாங்கிவாசித்துப் பெருமூச்சு விட்டு) எதுபிள்ளாய்! விலையுயர்ந்த ஆடையணிந்து அதிசிறப்புடன் விளங்

குகிருய் ? மிகவும் களித்தனன் நின்னை இப்படிக்கண்ணுற !

**சத்:**—ஆம் ! ஐயனே ! எல்லாம் தங்கள் அருளே !— அதிருக்கட்டும் தாங்களென்னை ஒரு மாதரியாயிருக்கிறீர்கள் ? அருளொழுகு கண்ணும், நகையரும்பும் வதனமும் வாட்டமாயுள !

**சுந்:** —ஒன்றுமில்லை. யான் சுகமே — எப்படி என்னருளென்ருய் நல்லுடையணிய ?

**சத்:**—வீர ! அப்பெண்மணியின் அன்பை என்னென்பேன் ! பன்முறை மறுத்தும் இவ்வுடை தரிக்கச் செய்தனள்! அன்புக்கடலெனினும் ஒக்கும். இச்சுகம் பெற்றது தங்கள் தயவாலல்லவா ?

**சுந்:**—சரி. களிந்தேன் உன்னை மிகவும் வியந்து புகழ்ந்து வரைந்துள்ளாள் ! அவள் மனம் களிக்க நீ நடந்துகொண்டது மட்டில்லா மகிழ்ச்சியளித்தது.

**சத்:**—இந்திராளின் நல்லெண்ணத்தையும் நல்லறிவையும் எப்படிப் புகழ்ந்துரைப்பேன் ! ஆ ! பெண்கள் நாயகமே ! அப்படியா அளவற்றுப்புகழ்ந்துள்ளாய் ? சுந்தரவள்ளால் ! இந்திராளே இணையற்றமாதர் திலகம் !

**சுந்:**—(தனக்குள்) பார்த்தனையா ? இவனும் அவளைப் புகழ்ந்து பேசுகின்ருன். "பெண்கள் நாயகமாம் ! இணையற்றவளாம் ! மாதர் திலகமாம் !" ஆ ! இதைவிட வேறு சான்று வேண்டுமோ ? (வெளியில்) அவள் உன்னிடம் அன்புகாட்டுவது எனக்கு அளப்பருங் களிப்பை ஈந்தது. அன்ப ! உன்னை எப்படி நடத்துகின்ருள் ?

**சத்:**—வேந்தர் திலகமே ! வேலையாளென்று வேற்றுமையே சிறிதுமிலை. தம்பியைத் தயவுடன் காக்கும் தமக்கையே போன்றும் ; தன்னுயிர் மும்முறையும் அளித்துத் தனிப்பேருதவி தந்தானை நடத்துவது போன்றும் ; தனித்தனயனைப் படைத்து வளர்கும்

தனித்தாயே போன்றும் ; என்னை நடத்திப் புரக்கின்ருள்

சுந்:—(தனக்குள்) ஆ! அவ்வளவு அன்போ உன்னிடம்? (வெளியில்) அவள் உன்னை அப்படிக் காப்பது பற்றிக் களித்தேன். உன்னிடம் இன்பமாய்ப் பேசுகின்ருளோ? அன்றி கடிந்து பேசுகின்ருளோ?

சத்—ஐயனே! கடிய சொல்லொன்றும் கண்டிலேன்! அவள் இன்னிசைத் தேமொழிக்குக் கிள்ளை மொழியும் வெள்குறும், கன்னலுங் கைப்பெய்தும், தேனும் பாலும் இனிமையில் தோல்வியடையும் என்ருல் வேறென் சொல்வது? செல்வப் பெயர்கள் பலவால் என்னை விளிப்பள்.

சுந்:—(தனக்குள்) ஆ! இவை காதல்மொழியன்றிப் பிறிதென்னே? (வெளியில்) பளா! சத்தியசேனு! இவ்வளவு அழகாய்ப்பேச எப்பொழுது கற்ருய்? நல்லது, உன்னிடம் என்ன பேசுகின்றனள்?

சத்:—அரசே! என்னென்பேன்! தன் மனத்தகத்திற் பொதிந்து கிடக்கும் காதலைப்பற்றிய பல இரகசியங்களையும், என்னிடம் இயம்புவள். தங்களைப்பிரிந்ததால் வருந்தி யழவேண்டாமென்றும், என் உதவிக்குத்தக்க பரிசளிக்கப் படுமென்றும், குயிற் குரலோ, யாழிசையோ, குழலொலியோ என்று சங்கைதரும் மெல்லிய குரலில் என்னைத் தேற்றுவது கண்டு, உள்ளம் உருகி, உடல் சிலிர்த்து, என்பு நெக்கு விட்டுக் கண்ணீர் சுரந்து வழிந்தோட, முன்னிலும் பன்மடங்கு அழத்தொடங்குவேன்!

சுந்:—(தனக்குள்) அந்தோ! எல்லாம் உண்மையே! என் செய்வேன்? (வெளியில்) அப்படியா! உனக்கு உருசியான நல்லுணவு தேர்ந்தெடுத்துத் தருகின்ருளா?

சத்:—ஆம்! துரையே!

சுந்:—எப்பொழுதும் உன்னுடன் சிரித்து விளையாடுகின்ருளல்லவா?

சத்:—ஆம்! என்னுடன் விளையாடல் தங்களுடன் விளையாடலை யொக்குமென்றும், என் இன்மொழி தங்கள் மொழியே யென்றும், பலவாறு பேசி விளையாடுவள்.

சுந்:—(தனக்குள்) ஆ! வஞ்சகி! (வெளியில்) பெரிதும் சந்தோஷித்தனன். உன் மெல்லிய மஞ்சுநிகர் குஞ்சியையும், பஞ்சினும் மிருதுவான உன் ஒளிவிசும் கன்னத்தையும் தாமரைக் கையால் தடவித்தருகின்றாளன்றோ?

சத்:—(ஆச்சரியப்பட்டு) இதெல்லாம் தங்களுக்கு யார் சொன்னது? குறிசொல்லுவதுபோல் குறிப்பாய்ச்சொல்கின்றீரே! வெகு விந்தையேயிது! நீங்கள் சொன்னது போலவே செய்கின்றாள்!

சுந்:—சத்தியசேனா! நீ மிக்க பாக்கியசாலியே! முதலில் சொல்லேன் என்றனையே! யான் சொன்னபடியே செய்கிறாள் கண்டனையா? உன்னை முத்தமும் இடுகின்றாள் அல்லவா?

சத்:—(திடுக்கிட்டு) என்ன சொன்னீர்?

சுந்:—உன்னைக்கட்டியணைத்து முத்தமிடுகின்றாளா?

சத்:—சுவாமி! தாங்கள் ஏதோ கெட்ட எண்ணத்துடன் கேட்கின்றீர்கள். உங்கள் வதனமதியும் விகாரமுற்றதே!

சுந்:—அப்படியொன்றுமில்லை. — 'கேட்டதற்கு விடைபகர்வாய். அவள் முத்தமிட்டிருப்பாளென்று நிச்சயமாய்ச் சொல்வேன்! சத்தியமுஞ்செய்வேன்!

சத்:—(திகைத்துக் கண்கலங்கி) என் ஐயனே! துய்ய மனத்தவனே! அறிந்தேன்! எல்லாம் அறிந்தேன்! யாவரோ பாவியர் நின் மனம் கெட்டழியத் தகாதன சொல்லியிருக்கின்றனர். அந்தோ! —

சுந்:—சத்தியசேனா! உண்மையை உரைப்பாய்! (வெகு இனிய குரலில்) அப்பா! ஒளியாமற் சொல். அவளை யான் இதெல்லாம் செய்யக் கட்டளையிட்டிருந்தேன்.

ஆதலின் உன்னுடன் சுகித்துமிருப்பள். அப்பொழுதுதான் அவளன்பை யான் முற்று மறிவேனெனக் கூறியிருந்தேன். நீ இன்புற்றத்தின் அளவே அவள் காதலை அளக்கும் கோலாகும்.

சத்:—(கண்ணீருகுத்து) அந்தோ! ஈசா! துய்யமனம் மாசுற்றதே! கள்ளமறியா உள்ளமும் கறுத்ததே!— அடே! சத்தியசேனு! நீ யின்னம் உயிர் வாழவும் வேண்டுமா! இச் சொல்லை விட வேறு வேண்டுமா உன் உயிர் மாய? உன் வாணுள் வீணுளாயிற்றே!— அந்தமில் அன்புடைச் சுந்தா! என்னே இப்படிப் பேசியது? பாதகமொன்றும் பாவியேன் அறியேன்! இது சத்தியம்! சத்தியம்!

சுந்:—(இன்னம் இனிய குரலில்) அப்பா! சத்தியசேனு! ஏன் இதற்கழுகின்ருய்? யான் கோபிப்பேனென்று எண்ணினுயோ? ஒன்றுமில்லை அருகில் வா. உன்னிடம் ஒரு இரகசியம் சொல்லவேண்டும். — அவளை யான் காதலிக்கிறேன் என்று நினையாதே. அவளை வெறுக்கின்றேன். முன்னமேயே எனக்கு அவள் மேல் சந்தேகமுண்டு. அவள் நடத்தையைக் கவனித்து உண்மையறியவே உன்னை அனுப்பினேன். எல்லாம் வெளியாயிற்ருு? உண்மை உரை!

சத்:—(சரேலென அழுவது விடுத்துக் கண்ணைத்துடைத்துக்கொண்டு, சிறிது கோபங் கொண்டு) ஐயா! நீர் அனுப்பிய பையன் இயற்கையை அறியாமற் பேசுகின்றீர்!

அவள் கற்பெனுங் கருந்தனத்தைச் சொறிந்திட்ட அற்ப மாதாயிருப்பினும் யான் இசைவேனென்று எண்ணினீர் போலும்! ஆனுல் — ஐயோ! (மறுபடியும் கண்ணீர் விட்டு) அவள் கற்பினிர்கணி! அவள் மனம் நீர் குடிகொண்டிருக்கும் கோயில்! அவள் செயல் சிலம்! அவள் உரைவேதம்! இத்தகையாளை

அனியாயமாய் இப்படிப் பேசத்தகுமோ ? அதை நினைக்குந்தோறும் என்னால் சகிக்கமுடியவில்லையே !-

சுந்:—(கோபித்து) அடே ! துன்மார்க்கா ! இப்படியெல்லாம் அவளை புகழ்ந்துரைத்து இல்லாததை உண்டென நிலைநிறுத்த முயன்றால் உன்னைச் சும்மா விடுவேனென நினையாதே ! உள்ளதை விள்ளுவாய் ! இல்லையேல் உயிர் பிழையாய் ! கண்ணீர் நீ நினைத்த பொழுது வந்துதவும் வேலையாளோ ? இவ்வித்தை எங்கடா கற்றாய் கள்வனே !

சத்:—ஐயோ! நீர் வீணிற் கோபங்கொள்கின்றீர். உள்ளதை உரைத்தேன். குற்றம் ஒன்றுஞ் செய்திலேன் ! இது உண்மையென்று முற்றுமுணர்ந்த முழுமுதற்கடவுள் அறிவன் !

சுந்:—அடே ! கடையனே ! உண்மையைச் சொல்லாவிடின் இதோ இவ்வாளுக்கிரையாக்கி வானுலகனுப்புவேன்.

சத்:—அப்படியே செய்யும். உமக்குப் புண்ணியமாம். சொல்லத்தக்கன ஒன்றும் ஒளித்திலேன். கற்புத்தெய்வமாம் இளவரசியை வசைக் காளாக்கிய பின்னும் உயிர் வாழவேண்டுமா ?

சுந்:—அடே ! துஷ்டா ! உன் வாயாலேயே சொல்லத்தகாதன சிலவுளவென்று ஏற்பட்டதல்லவா ?

சத்:—என்னுயிர் மாயினும் அவள் சொன்ன சிலமர்மங்களை வெளியிடேன். நம்பிக்கை துரோகஞ் செய்ய என்றும் இசையேன்.

சுந்:—(கோபத்தீ பொங்கியெழ, உடல்நடுங்க, உதடு துடிக்க, கண்சிவக்க, உரக்க) அடே ! சத்தியசேனா ! நீ உரையாயேல் இதோ (வாளையுருவி,) இக்கூரியவாளால் உன் மார்பைத்துளைத்து, உன் இருதயத்தைப் பிளந்து, அதிற் பொதிந்து கிடக்கும் இரகசியத்தை இக்கணமே அறிவேன்.

[சத்தியசேனன் மேல் வாளோச்சி செல்கின்ருன். அவன்சிறிதும் அச்சமின்றி அசையாது நிற்றலேக்கண்டு, திடுக்கிட்டு, ஆச்சரியப்பட்டு]

ஆ! ஆ! அடே! உனக்கு இறப்பதென்ருல் உடல் நடுக்குற வில்லேயா? அச்சமறியாயோ? பாவமியற்றியவர் படும் நரகவேதனேகளே நினேந்து நீ மனம் கலங்க வில்லேயா?—அடே! நீ பொன்று மறியாச் சிறுவனே? இளங்கன்று பயமறியாது என்பது பெரியோர் வசனம். பிறர்மனே கற்பழித்த காதகர் இறந்தபின் படுந் துன்பங்களும், கஷ்டங்களும், இத்தன்மையன எனக்கண்டிருப்பின், நீ இவ்வளவு தைர்யமாய் இங்கு நில்லாய்! அடே! இப்பொழுதாகிலும் உண்மையைச் சொல்லி உய்வாய்!.

சத்:—ஐயா! தாங்கள் வீணில் கோபித்துத் தங்கள் சுந்தர வதனத்தை விகாரப்படுத்திக் கொள்ளவேண்டாம். அதுவே என் நெஞ்சைப் பிளக்கின்றது. கோபத்தைப்போல் கோரமளிப்பது ஒன்றுமில்லே.

சுந்:—அடே! போதும், உன் அன்பு!—ஆனுல் இறப்பதென்ருல் பயஞ்சிறிது மில்லேயோ?

சத்:—இறக்கப்பயப்படுவார் மூடர்களே! இறப்பில் பயப்பட யாதுளதோ யானறிகிலேன்! பிறந்தபோழ்தே இறப்பு உண்டன்ருே? பிறத்தலும், இறத்தலும், இவ்வுலகில் இயங்கும் இயற்கையான நிகழ்ச்சிகளன்ருே? மேலும் அவ்வுலகில், கோபம், பொருமை, கோட்சொல், ஆதிய தீக்குணங்கள் கிடையாவெனப் பெரியோர் சொல்வர். அத்தகை அரியவிடஞ்செல்ல அஞ்சுவதேன் அண்ணலே!

சுந்:—(வாளேத்தாழ்த்தி, மனமுருகி,) அப்பா! சத்தியசேனு! நின்சொல் என் என்னையும் உருக்குகின்றது! நீ நல்லனுயிருக்கினும் இருக்கலாம்! இவ்வளவு கோபித்துச்சிறி இளம்பிள்ளேயுன்னே இம்சித்ததை மன்னிக்க மன்ருடுகின்றேன். ஆனுல் நீ என் கண்ணெதிரே நில்

லாதே! என் வயிறு குமுறி குபுகுபு என்று பொங்குகின்றது! ஏதேனும் தீச்செயல் செய்யினும் செய்வேன். கண் காணாவிடஞ்சென்று உயிர்வாழ்வாய்! செல்!

சத்:—(கண்ணீர், கன்னத்தில் தாரைவிட்டோடக் கைகுவித்துத் தொழுது) என் ஐயனே! துய்யனே! தங்கள் தங்கமனம் இப்படிக் கெட்டுத்திரும்பியதின் காரணமறியேன்! என்தெய்வமே! என்னுயிர்த்துணையே! உம்மையன்றி உற்றதுணை ஒன்றறியேன்! ஆயினும், இத்தகைப்பெருங்குணமணி, அருமருந்தன்ன அண்ணல், வருந்த யான் கண்டு சிறிதும் தாளேன்! என்னால் துன்புறேல்! என் துரையே! இதோ போகின்றேன் எங்கேனும். இனி இவ்வாழ்க்கை வேண்டேன்! உயிர்வாழேன்! வாழேன்! உம்மை அருட்பெருஞ்சோதி அம்பலத்தாடுவான் என்றும் அளித்துக் காப்பானாக! ஆனால்,—ஒன்றுமட்டும் மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன். எப்பொழுதேனும், சத்தியசேனன், என்றும் உண்மையுடனும், விஸ்வாசத்துடனும் தங்கள்பால் நடந்தானென்றும்; துன்பத்தால் மனமுடைந்து மாண்டானென்றும், தாங்கள் கேட்கின், அனாதையான அவன் ஞாபகார்த்தமாகத் தாங்கள் ஒரு கணமேனும் அவனை அன்புடன் நினைத்துத் தங்கள் கமலக்கண்களால் ஒரு துளி நீர் விடின், அதுவே போதும். அவன் ஆவியும் அமைதியடைந்து ஆனந்திக்கும்! போகிறேன் இனி—(அடிபணிந்து அழுதவண்ணம் செல்கின்றான்.)

சுந்:—(பிரமித்து) ஆ! என்ன விந்தையிது! இப்படிப்பட்ட இளைஞனை யான் எங்கும் பார்த்திலேன்! ஈசன் திருக்கூத்து இருந்தவாறென்னே!—ஆ! எங்குமெரியும் இவ்வுடலை எங்கு போய்க் குளிரச்செய்வேன? மனத்துயரை மாய்க்க மருந்தொன்றும் இல்லையோ?—

[போகின்றான்]

## மூன்றுங்களம்.

:o:

இடம்: இந்திராளின் அறை.
காலம்: பிற்பகல்
பாத்திரம்: இந்திரா.

இந்:—(தனக்குள்) திருமுகம் கொண்டேகிய சத்தியசேனனைக் காணேன்! ஏன் இவ்வளவு நேரமோ அறிகிலேன்! ஒருவேளை சுந்தரன் வெளிச்சென்று வீடு மீண்டிலனோ? அவன் பொருட்டுக் காத்துக்கொண்டிருக்கின்றானோ? ஒருகால் இன்னம் இருவரும் உரையாடிக் கொண்டிருக்கின்றனரோ? என் நாதன் என் காதலைப்பற்றிப் பல கேள்விகள் கேட்பன். (புன்முறுவல் பூத்து) சத்தியசேனன் தக்கவிடையே தந்திடுவன். அதில் ஐயம் அணுவுமில்லை.—

[மாணிக்கம் வருகின்றாள்]

ஏடி! மாணிக்கம்! என்ன?

மா:—அம்மா! நின்தந்தை நின்னைக்காண விரைந்து வருகின்றார்.

இந்:—ஆ! அப்படியா! நல்லது. அழைத்து வருவாய்.

[மாணிக்கம் போகின்றாள்]

(தனக்குள்) ஏது இப்பொழுது தந்தை திடீரென இங்குவருவது? ஆச்சரியமாயிருக்கிறது! என்ன விசேடமோ? அந்தோ! அந்த சுகப்பிரியனைப்பற்றி அவர் பேச வாராதிருக்கவேண்டுமே! ஈசா!—

[வீரகேசரி பிரவேசிக்கின்றான்]

(எழுந்து, அடிபணிந்து) என் அருமை அப்பனே! ஏது இங்கருள் செய்தது?

வீர:—இந்திரா! உன்னிடம் ஓர் வாலிபன் உளனோ?

இந்:—(திடுக்கிட்டு) ஆம். தந்தையே! (தனக்குள்) எதற்காகக் கேட்டனரோ?

வீர:—ஓர் அழகிய பையன்?

இந்:—விகாரனல்லன் என்று நினைக்கிறேன். சொன்னதைச் செய்யும் நன்னடக்கையுள்ளவன். அழகுக்காக யான் அவனைத் தேர்ந்தெடுக்கவில்லை!

வீர:—அழகாய்ப் பேசவும், இனிமையாய்ப் பாடவும், தெரிந்தவனல்லவா?

இந்:—ஆம்! ஆனல், தந்தையே! என் இக்கேள்வி யெல்லாம்?

வீர:—பெண்ணே! அவனை உடனே அனுப்பிவிடு.

இந்:—அரசே! ஏன்?

வீர:—சொற்படி நட. என் மகளாயின் நீயினி அவனை இங்கு வையாதே!

இந்:—அப்பா! தாங்கள் சொல்வது ஆச்சரியமாயிருக்கிறது! காரணமின்றி ஒருவனை நீக்குவது நியாயமாமோ?

வீர:—காரணமா! இந்திரா! நீ யிப்படித்தடை சொல்வாயென்று நினைத்திலேன்! நீ செய்த காரியம் நாடெங்கும் காட்டுத்தீயெனப் பரவியது! உன்னைக்காண எனக்கே வெட்கமாயுள்ளது! அதிகஞ் சொல்லேன். உடனே அவனை நீக்கிவிட்டு வேறுவேலையைக் கவனிக்க. இன்றேல், என் முகம் விழியேல்.

[சரேலெனச் செல்கின்றான்]

இந்:—(திகைத்து) என்னையிது? என்ன நடந்திருக்கக் கூடும்? சத்தியசேனன் யானறியக் குற்றமொன்றுஞ் செய்திலனே! ஐயோ! அப்பா! நீ யெங்கு போய் பிழைப்பாய்? பாவியுன்னை ஆதரிக்க வகையற்றுப் போயினேனே! தந்தை சொல்லைக் கடக்கலாமா? தந்தை மட்டுமா அவர்? அரசனுயிற்றே! அரசன் ஆணையைத் தட்டி நடந்தோர் பிழைப்பரோ?—அந்தோ! என் செய்வேன்?—ஒருவேளை சத்தியசேனனைச் சுந்தரன் அனுப்பினனென்று தெரிந்து

விட்டதோ? ஐயோ! சுந்தரனுக் கொன்றும் நேராது காப்பாய் ஈசனே!

[மரகதம் வருகிறாள்]

மர:—அம்மா! இந்திரா! சுந்தரவள்ளல் போந்துளார் வாயலில்!

இந்:—யார்? சுந்தரனு? வரச்சொல்.

[மரகதம் போகிறாள்]

(தனக்குள்) என்னே! சத்தியசேனனைக் காணும்! சுந்திரன் வந்தனன் ஈங்கே! இருவரும் சந்தித்திலரோ? என்ன நிகழ்ந்ததோ?

[சுந்தரவதனன் பிரவேசிக்கின்றான்]

ஆ! என் காதலா! என் செய்வேன்?

சுந்:—(தனக்குள்) இவளும் துய்யள்போல் தோன்றுகிறாள்! நடித்தலில் வல்ல இவ்விருவரைப் போல் எவரையும் காண்பதரிது! (வெளியில்) இந்திரா! என்ன நடந்தது? ஏன் பதைபதைக்கின்றாய்!

இந்:—ஐயோ! சுந்தர! எப்படி யுரைப்பேன்? என் சத்தியசேனனை யிழந்தேன்!

சுந்:—(தனக்குள்) அவள் சத்தியசேனனும்! என்ன அன்பு அவனிடம் இவளுக்கு! (வெளியில்) ஏன்! அவன் இறந்தானு? எப்பொழுது? எப்படி? எங்கு?

இந்:—(திடுக்கிட்டு) ஆ! என்ன சொன்னுய்? இறந்தானுவென்று கேட்கலானுய்! என்னே! உன்முகம் ஒருவாறு கடுமையைக் காட்டுகின்றது!

சுந்:—ஒன்றுமில்லை—சத்தியசேனனுக்கென்ன நேர்ந்தது? உரையாய்.

இந்:—அவனை என்னிடமிருந்து அனுப்பிவிட அரசன் உத்தரவு பிறந்துள்ளது! என் செய்வேன்?

சுந்:—இவ்வளவுதானே! இதற்கோ வருந்துவது?

இந்:—ஆ! என் சொனுய்? நீயுமா கடுமனத்தான்? உன் சத்தியனைத் தூரத்தென வுரைத்திட எப்படி மனம்

வந்ததோ ?

சுந்:—அரசன் ஆணையைக் கடந்து நடப்பரோ எவரேனும்! மேலும் அவன் இன்று முதல் என் சத்தியசேனனு கான். யானே அவனை வேண்டாமென அனுப்பி விட்டேன்.

இந்:—(கண்ணீர் விட்டு) ஆ! அப்படியா? நீயும் அரசனும் சதியாலோசனை செய்தோ இப்படிச் செய்தீர்கள்?—அந்தோ! யாரோவினி என் காதலை உனக்கறிவிப்பார்? உன்புகழை என் மனங்களிக்கப் பாடுவது யாரினி? உன் குணத்தையும், காதலையும் வியந்து புகழ்ந்துரைத்து என் செவிக்குணவு யாரேயினி யளிப்பார்? ஐயோ! அவனுடன் விளையாடி உன்னுடன் களிப்பதாகப் பாவித்து இன்புற்று வந்தேனே! உன்னிடம் போந்து, இன்மொழிபேசி, என்மொழி மொழிந்து, கண்ணீர் விடுத்து, என் உண்மைக் காதலை உரைக்க இனியான் யரைத்தேடுவல்? தேடற்கரிய பெரும் பாக்கியத்தை இழந்தேனே! என்னிடம் வந்து. உன்போல் நடித்து, உன்னுரை உரைத்து, உன் காதல் தெரித்து, நீர விடும் கண்ணுடன் உன்னை உண்மையாய்க் காதலிக்க வாதாடிக் கெஞ்சவல்லார் யாரினி? ஐயோ! சுந்தர! நீ செய்ததின் பலனை ஓர்ந்து ஆய்ந்தனையா? ஆ! இரவில், என் பக்கல் இருந்து, வீணையிசைத்துக், குயிலைப் பழித்த இன் குரலில் இனிய கீதங்களை உள்ளம் உருகப்பாடி, பரவ சமாக்கி, என் துயர் நீக்கி, இனிதே துயிலச் செய்து, நித்திரையில் நின்னுடன் சுகிக்கக் கனவுகண்டு, "ஆ! சுந்தர! சுந்தர! ஆருயிர் சுந்தர!" எனச் சொல்லச் செய்வது யாரோவினி? என் இன்னுயிர்க் காதலா!—

சுந்:—(மனம் பதைத்துக் கோபித்து) அடி! உனக்கவன் அவ்வளவு உகந்தவனு? நீங்களிருவரும் இழைத்த காரியம் உலக முழுவதும் முரசறைந்தாற் போன்று பரவியதே! சீ! துன் மார்க்கி! உன்னை உத்தமி

யென உன்னி மோசம் போனேனே! உன் உண்மைக் குணம் வெளியாயிற்று! அடி! கள்ளி! உன் கபடமுற்றும் அறிவேன் யான்! பன்னிப்பன்னி அவன் புகழைப் பாடலானுய்! சீ! உன்முகத்தில் விழித்தலே மகா பாதகத்தை விளைக்கும்! ஈசனே உன்னைத்தண்டிப்பானுக! பெண்ணல்ல நீ! பேயே! சீ! இனியான் பெண்வாசனை வீசாத, மனிதர் வாழ்க்கையில்லாத, ஏகாந்தமான வனாந்தரமெய்தி, பக்ஷிகளுக்கும், மிருகங்களுக்கும், மாதரார் இத்தகையரெனப் பிரசங்கஞ்செய்து காலங் கழிப்பேன்!—

[போகின்றான்]

இந்:—(திகைத்துச் சிலைபோல் அசைவற்று நின்று) ஆ! ஈசுவரி! இதுவும் உன்னருளோ? ஐயோ! என் அங்கம் பதறுகிறதே! என் சுந்தரனு இப்படி உரைத்தான்? வயிறு எறிகின்றதே! இடிவிழுந்த சர்பம் போல் நடுங்கலானேனே!—அடி! இந்திரா! இன்னுமா உயிர்வாழ்கின்றாய்? உன் காதலன், உன்னுயிர், உன்னுயிர்த்துணைவன், உன்கண், உன்கண்மணி, உன் சுந்தரன் இக்கடுஞ்சொல் பேசியேகுவது, நீ கேட்டு உயிர் தாங்கி இருப்பதா?—(உடல் பதறி, கண்ணீர் ஊற்றெனப்பெருக) ஆ! இனியும் வாழ்க்கை வேண்டுமா? அந்தோ! ஒன்றும் அறிகிலேன்! யாதுந்தெரிகிலேனே! இருள் சூழ்கின்றது! உலக மேசுற்றுகின்றதே! என் ஆவியுந்தாவியே செல்ல அவாவியே அலைகின்றதே!—ஈசா! யான் என்ன பாவஞ்செய்தேனோ இவ்வசைக்காளாகித்துயருற? ஒருவேளை, அப்பாவி சத்தியசேனன் தகாதனவுரைத்து என் காதலன் மனத்தைத் திருப்பியிருப்பானோ? இருக்கலாம். ஆ! அதோ! வருகின்றானே அவனும்! அவனேயல்லவா இத்தனைக்கும் காரணம்?-

[சத்தியசேனன் வருகிறான்]

அடே! சண்டாளா! இன்னுமா உயிருடன் நடமாடுகின்றாய்? இவ்வளவுஞ் செய்த நீ இடி விழுந்

தழியாயா? அடே! நீ செய்த மோசத்திற்கு, நீ ஓடோடி, மலைக்குவியலின் கீழ், மனிதர் உன்னை நாடித்தேடித்திரிபினும், கிட்டா வண்ணமன்றோ உன்னை மறைத்துக்கொள்ளவேண்டும்?

சத்:—ஐயோ! அம்மணி! நீயுமா இப்படிக் கடுநெஞ்சளாயி னாய்! ஈசா! யார்செய்த சூதோ? விதியின் செயலோ? பெரியோர் சாபமோ? கடவுள் கோபமோ? ஆண் மக்களுட்சிறந்த ஆண் சிங்கமும், பெண்கள் நாயக மும் ஒரு குற்றமுமின்றி, என்மேல் இப்படிச்சீறிவிழ யான் செய்த பாவமென்னையோ? என் துர்பாக்கி யமே இவ்வொப்பிலா மணிகளை இப்படிச் செய்தது!

இந்:— அடே! இன்னுமா இங்குளாய்? காதகா! தூரவகல்? கண்ணெதிர் நில்லாதே! உன் வஞ்சனை வெளிவந்தது!

சத்:—சற்குணமணியே! பெண்கள் சிகாமணியே! போகி றேன் பாவியேன்! நீ யளிக்குந்துயர் கடலிடைக் கலந்த சிறு துளியே போலுமல்லாமல் வேறில்லை. குற்றமிழைத்தோன்போல் கூறுது போதலாகாதெ னக்கருதி, விடைகொள்ளவே வந்தேனிங்கு! இதோ! அகல்வேன் அனைத்தை! கடவுள் உன்னைக்காப்பாராக! கடிதே நடக்கும் கலிமா வென்னப் பறந்தேயோடும் காலமும் உண்மையை விரைவில் வெளியிடும்!—

[அழுதுகொண்டே செல்கின்றான்]

இந்.—ஐயோ! ஐயோ! சுந்தர! சுந்தர!

[மூர்ச்சையாய் வீழ்கின்றாள்]

மூன்றுமங்கம் முற்றிற்று.

## அங்கம் ச,

---

### முதற்களம்.

இடம்: அங்கதேசத்தையடுத்த அடவியின் ஒருபுறம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: வீரகேசரி, சுகப்பிரியன், இந்திரா, மரகதம், மோகனு, புருஷோத்த மன், சுதர்மன், பிரதாபன், காவ லாளர்.

வீர:—என்னே! வேட்டை நாய்களுடன் வேடர்கள் முன்னே சென்றனர்களா? நம் புரவிகள் சவாரி செய்யத்தயார் செய்யப்பட்டனவா?

புரு:—எல்லாம் தயார், மகா ராஜா!

வீர:—சுகப்பிரிய! என்னே வாட்டமாயிருக்கிறாய்? (அவன் காதில்) உன் குற்றத்தை மறந்தோம். இங்கு எவரும் அதைக் குறித்துப் பேசத்துணியார்.

புரு:—(ஒருசார்) அவன் பெண்களை வேட்டையாட வல்ல வீரன்! மிருகவேட்டையிற் பிரியமில்லைபோலும்!

பிர:—இல்லை. தான் இழைத்த பெரும் ஒழுக்க வழுவை நினைந்து வருந்துகின்றான் போல் தோன்றுகிறது.

சுத:—அப்படியொன்றுமிராது! அப்படி வருந்துவது அவன் இயற்கைக்கு மாறுபட்டதன்றோ?

வீர:—(ஒருபுறம்) இந்திரா! அப்பையனை அனுப்பிவிட் டனையா?

இந்:—பிதாவே! நும் பணிமறுப்பனே?

வீர:—நல்லது. களித்தனன். மேலும், என் கண்ணே! இங்குவா—

[இருவரும் தனித்துப் பேசுகின்றனர்]

சுத:—(ஒருசார்) அந்த மோகனுவைப் பாருங்கள். இப்பூனையும் பாலைக்குடிக்குமோ வென்றல்லவா தோன்றுகின்றாள்!

பிர.—ஆம். கபட நாடகத்தில் கைதேர்ந்தவள்.

புரு:—வாருங்கள் யாவரும். புரவியிவர்ந்து செல்வோம் விரைவில். காலைப்பொழுது வீணே கழிகின்றது!

[யாவரும் போகின்றனர்]

## இரண்டாங்களம்.

இடம்: அடவியின் ஒருபுறம்.
காலம்: முற்பகல்.
பாத்திரம்: சுந்தரவதனன்.

சுந்:—(தனக்குள்) நகர் வாழ்க்கை வெறுத்துக் கடும்புலி வாழும் காடு வந்துற்றேன். எங்கேகினேன்? நம் நிழல் நம்மையே தொடர்வதன்றி வேறில்லை. மனத்தை எங்கு விட்டுவருவது? இந்திராவின் நினைவே என் மனத்திற் குடிகொண்டுள்ளதே! என் மனக்கோயில் வாழும் தெய்வமெனவன்றோ அவளைக்கருதிவந்தேன்! இப்பொழுது அவளுருவத்தை என் உள்ளத்தினின் றும் பிடுங்கிப், பூமியிற் போட்டுக் காலால் தேய்ப் போமெனிலோ, இயலவில்லையே!—அந்தோ! காடு மலைகளில் ஆடுகளை மேய்த்தும், வெயிலிற் காய்ந்தும், மழையில் நனைந்தும், காலங்கழிக்கும் ஓர் பெண்ணை மணந்திருப்பின், எவ்வளவு சுகமாய் வாழலாகும்! கவலையின்றிக் காலங்கழிக்கலாமே! காய் கனிகளே உணவாகவும், தெள்ளிய ஆற்றின் நீரே பருகும் பான மாகவும், குடிசையே குடியிருக்கும் இல்லமாகவும், இலைதழைகள் பரப்பிய தரையே பாயலாகவும், கொண்டு இனிதே வாழ்ந்து வாலாமன்றோ? உலகின் கள்ளங்கபடுகளும், வஞ்சனைகளும் அறியா என் மலை-வாழும் மனைவியும் முழுமனதுடன் என்னைக்காதலிப் பளன்றோ? தன்பருமனுன குழவிக்குப் பருத்த முலைப்பால் கொடுத்தும், ஆடுமாடுகளை மேய்த்து அத

ரித்தும், மாலையில் விறகு சுள்ளிகளைத் தலையிற்றாங்கியும், குடிசைமீண்டு, எனக்குணவளித்துத் தானுமுண்டு, போதுமென்ற நிறைகுணமே பொன்செயும் மருந்தாய்ப்பெற்று, என் பக்கலில் பூமியின்மீது படுத்துறங்குவளே! இத்தகையாளுக்கும், அரண்மனை வாழ்க்கையும், அளவற்ற செல்வாக்கும், இட்ட வேலையைச் செய்யக் கணக்கற்ற வேலையாட்களும்; அறுசுவையுண்டியும், பஞ்சணைமெத்தையும் படைத்த பாவைக்கும் எவ்வளவு பேதமுள்ளது! தன்வாளன கண்களால் மயக்கிக் கன்னல் மொழியெனும் தேனை உண்ணச்செய்து, தலைதடுமாறும் வண்ணம் காதலைப் பெருக்கி, ஒருவனையே உன்னும் உத்தமிபோல் உபசரிக்கும் அக்கணமே, வேறொரு ஆடவனை நினைக்கும் உள்ளமுடைய மாதையும்; கூழைக் குடித்தோ, காய் கனியுண்டோ, சுத்தநீர்பருகி ஆடுமாடுகளையே தன் செல்வமாகவும், அவற்றைக் காத்தலே தன் தொழிலாகவும், கணவனே கண்கண்ட தெய்வமாகவும், கருதியொழுகும் மலைவாழ் மங்கையையும் ஒப்பிடலாகுமோ?—

[சத்தியசேனன் வருகின்றான்]

**சத்:**—(தனக்குள்) ஓ! பொல்லா மானிடர்காள்! குற்றமற்ற ஒருவன் பயமும் தீங்குமின்றி காடிபுலி சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் இடையில் திரியலாம்! அவைகள் அவனை, ஒன்றுஞ் செய்யாமல் விலகிச் செல்கின்றன! ஆ! அதோபார்! துன்பத்திற்கிரையான என் சுந்தரக் காவலனும், தன் ஆவி இப்பொல்லாவுடலைவிட்டேக ஏதேனும் ஏதுவைத் தேடுவது போல் தோன்றுகின்றான்! பசியின் கொடுமையோ பொறுக்கமுடியவில்லை! 'இவ்விடும்பைகூர்' என்வயிறும் என் நோவை உணர்கின்றதில்லை' அம்ம! இச்சாண்வயிற்றை வளர்க்கவேண்டிய 'இருநாழி அரிசிக்கு' நாம் எவ்வளவு கஷ்டமுறுகின்றோம்! அவரை

அணுகிக், கடைசி முறையாக அவர்மனதைச் சோதித்து, ஏதேனும் இரந்து பிழைப்போம். (சுந்தரவதனனையடைந்து, தொழுது, வெளிப்படையாய்) மன்னவ! மன்னிப்பீர் நும் கட்டளை கடத்தல் பற்றி. தண்ணளிசேர் அண்ணலே! அடியேனைக் காக்க வேண்டும், அரசே! பசிநோயால் மெலிந்துவாடும் ஏழைமேல் இரங்கி ஏதேனுங் கொடுப்பீர்!

சுந்:—(திரும்பிப்பார்த்து) இப்பாவியேன் இரங்குமாறு இடருற்றுழலும் மனிதனும் இங்குண்டோ?

சத்:—என் எசமானே! என்னைப்பாரும். பசியால் மெலிந்து வெயிலாலுலர்ந்து, கை கால் தளர்ந்து, உடலுயிர் சோர்ந்து தவிக்கும் இப்பாவி எளியேனின் கொடும், பசி தீர்க்கவேண்டும். இல்லையேல் இறத்தல் திண்ணம்.

சுந்:—(சிந்தனையிலிருந்து திரும்பி) நீயார்? (திடுக்கிட்டு) ஆ! நீயா? இங்குமா வந்தனை? அறவேயொழிந்தாய் எனவன்றோ விருந்தேன்!—உன் உயரிய உடுப்பை விற்று உண்பது தானே!

சத்:—துரையே! வாங்குவாரின்றித் தவிக்கின்றேன்! அரண்மனை உடுப்பைக் களவாடி வந்தேனோ வென ஐயுற்று அஞ்சிமறுக்கின்றனர் யாவரும்.

சுந்:—அடே! என் கண்ணெதிர் தோன்றிக் கவலையளிக்க இன்னம் உன்னை உயிர்வாழ விட்டுவரும் கடவுள் தன் கருத்துதான் என்னோவறியேன்! முன்போல் உன் மதிர்ந்த வித்தையெலாம் காட்டத் துவக்கினாய்! மறுபடியும் என்னை நீ ஏமாற்றுவதெவ்விதம்? முதன் முதல் உன்னைக்கண்ட போதும் இப்படி இருந்தாய்! கண்ணீர் வடிந்துக் கண்டார் மனதைக் கவரும் நோக்கை எப்படிப் படைத்தனை? நீ உணவின்றி மாள்வாய்! எனக்கென்? எவ்வழிச் செல்கின்றாய்? உன்னைப் பின்னையும் சந்தியா வண்ணம் சாற்றுவாய். இவ்வழியோ? அவ்வழியோ?

சத்.—வேந்தே! எவ்வழியேனும் சரி. ஆனால் என்சாவிற்கு

அழைத்தேகும் நல்வழியையே யான் நாடியோடு வேன்.

[இருவரும் இரு வேறுவழிச் செல்கின்றனர். மற்றொருபுறம் புருஷோத்தமனும், இரண்டு விறகுவெட்டிகளும் வருகின்றனர்]

புரு:—இது விந்தையே! ஏ!

1-வது விறகு வெட்டி:—ஐயா!

புரு:—பெண்ணொருத்திக் குதிரைமேல் இவ்வழிச் செல்லக் கண்டீர்களா?

2-வது விறகுவெட்டி:—நல்ல (கையைக் கழுத்தளவு உயர்த்திக்காட்டி) அம்மாஞ்சோடு பெரிய குருதைமேலே ஏறிக்கிட்டு? அளவாயிருப்பாள்ள?

புரு:—ஆம்! ஆம்! கண்டாயா?

2-வது விறகுவெட்டி:—இல்லேசாமி! காணலிங்களே!

[இரண்டு விறகுவெட்டிகளும் போகின்றனர். சுதர்மன் பிரவேசிக்கின்றான்]

புரு:—உன் கேள்வியில் இடிவிழ! பாழாய்ப்போயினாய் நீ! இல்லேயேல் இக்கேள்வியேன்? (சுதர்மனைக்கண்டு) என்னே! அகப்பட்டனளா?

சுத:—இல்லேயே!

புரு:—அவன் மகளை அவனே தேடட்டும்! நம்மாலாகாது! அவள் எங்கேனும் போவது, நம்மைப் பிடித்து வாட்டுவது! வெகு அழகு!

சுத:—இதற்குள், வதந்தியென்னும் வனிதைத் தன் ஆயிரம் நாவால் ஆயிரம் கதைகள் கூறிப்பரவிச் செல்கின்றனள். அவள் ஏறிச்சென்ற குதிரை மருண்டு வழி தப்பி எங்கோ ஓடிற்றென்பார் சிலர். புலியொன்று அவளைத்தூக்கிச் சென்றது கண்டோமென்பார் வேறு சிலர். அவளைக் கொல்வான் யாவரோ இழுத்துச்சென்றனரென்பார் இன்னுஞ்சிலர். ஆனால், அவள் தானேஎங்கோ போயினள் என்பதிற் சந்தேகமில்லே.

[வீரகேசரியும், பிரதாபனும் வருகின்றனர்]

வீர:—எங்கேயவள்?

சுத:—யானறியேன்!

வீர:—அதெப்படி? மறுபடியும் அப்படிச் சொல்லும் சொல்கிறேன்!

சுத:—அரசே! யான் பொய் சொல்லவா?

வீர:—ஆம். கண்டிலேன் என்பதைக் காட்டிலும் கண்டேனெனப் பொய்யேனும் உரைப்பீர்! -அவள் எங்கே? முணுமுணுக்காதேயும்!— புருஷோத்தமரே! நீர் சொல்லும்! இந்திராளெங்கே?

புரு:—எங்குந்தேடியும் கிட்டவில்லை!

வீர:—திரும்பவும் அப்படி உத்தரம் உரைப்பீரேல் தீர்ந்தீர் நீர்! எங்கே சென்றாள் அவள்? இதோ என்னைப் பாருங்கள்! யான் உங்கள் அரசன்! என் மகளையான் காணவேண்டும்! காண்பியுங்கள் அவளை இப்பொழுதே! என் குடிகளாய உங்களைக் கட்டளையிடுகின்றேன்.—என்ன? யான் உங்கள் காவலனல்லவா? ஆயின் சொன்னபடி செய்யீரா?

புரு:—அரசே! நாங்கள் என் செய்வோம்? ஓடியோடித் தேடித்திரிந்து, வாடி வருந்தியதன்றி வேறொன்றுமில்லை! முடியும் காரியத்தைச் சொன்னால் செய்யத் தவறோம்.

வீர:—என்ன சொன்னீர்? இக்கணமே என் இந்திராளைக் கொண்டுவரவேண்டும். இல்லையேல்—

புரு:—(தக்குள்) இருக்குமிடம் காண்பித்தாலன்றி இயலாது. (வெளியில்) அரசே! என் செய்வது?

வீர:—என் செய்வதா? என் செல்வத்தை, என் உயிரின் உறைவிடத்தை, என் இன்பத்தை இழந்தேன்! ஐயோ! அவள் எவ்விலங்கின் வாய்ப்பட்டு மடிந்தனளோ! ஏன் நிற்கின்றீர்கள்? கொண்டுவாருங்கள் அவளை! அரசன் பேசுகிறான். அரசனெனின் அஞ்சிலீரோ? காற்றை வீசாமற் செய்யவும், ஒளிந்திருக்

கும் இரவியை ஒளிவீசச்செய்யவும், கடலை அலையடங்கி, ஒலியொழிந்து, அசைவற்று நிற்கச் செய்யவும், அரசனால் முடியாதோ?

புரு:—முடியாது?

வீர:—என்ன! முடியாதா?

புரு:—முடியவே முடியாது!

வீர:—அந்தோ! அவ்வளவு அசட்டையோ அரசனெனின்? உங்களை நம்பலாகாது! வஞ்சநெஞ்சினர்! பொய் பேசும் நாவினர்! முகமன் மொழியும் காதகர்! அரசனை வணங்கியேத்தித் தெய்வமெனத் தொழுது, அவன் தலைசுற்றச் செய்பவர்களும் நீங்களே! பிறகு அவன் அசக்தன், அவனால் ஆவதொன்றுமிலை யென்பாரும் நீங்களே! போற்றுவாரும் நீங்களே! தூற்றுவாரும் நீங்களே!—(தனக்குள்) ஈசா! யான் பாவியேன்! ஆயினும் பாதகமறியாப் பாவை, என் பாக்கியமான, இந்திராவைத் தண்டியாதே!

[சுகப்பிரியன், மோகனை, மாகதம் மூவரும் பிரவேசிக்கின்றனர்]

என்னே! சுகப்பிரிய! கண்டனையா?

சுக.—இல்லை அரசே! என் செய்வேன்? கலிமாவைக்கண்டு பிடித்தோம். தனித்தோடியது! வஞ்சகர் சிலர் வநிதையை எங்கோ எடுத்துச் சென்றனரென அஞ்சுகிறேன்.—மாகதம்! நீ அவளுடன் சென்றாயே! ஏன் பிரிந்து வந்தனை?

மா:—அவள் கட்டளை அப்படி.

வீர.—கட்டளையா! எப்படி நீ அவளைத் தனியே விட்டு வரலாம்?

மா:—அரசே! இளவரசியின் ஆணையைத் தட்டலாகுமோ!

வீர:—கேட்டை விளைக்கும் உத்தரவை ஒட்டிநடக்கும் தன்மையர் நீங்கள்!

சுக:—இந்திரா மட்டும் இன்று கிடைக்காமற் போகட்

டும்! இந்த அங்க தேசம் எங்கு செல்லுமெனப் பாருங்கள்!

புரு:—(தனக்குள்) என்ன? அங்கதேசத்தைத் தன் அங்கச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு சேரநாடு சேர்வனோ இவன்?

வீர:—போங்கள் யாவரும். நன்றாய்த் தேடுங்கள். சும்மா நிற்கவேண்டாம். நேரம் பறக்கின்றது!

[யாவரும் பிரிந்து பல திசைகளிற் செல்கின்றனர்]

---

## மூன்றுங்களம்.

| | |
|---|---|
| இடம்: | அடவியின் ஒருபுறம். |
| காலம்: | முற்பகல். |
| பாத்திரம்: | இந்திரா. |

இந்:—(தனச்குள்) ஆ! ஈசுவரி! இப்போது யான் எங்குளேன்? அடவியிலோ வழியொன்று மறிந்திலேன்! என்செய்வேன்? மாரகதத்தை விட்டுப்பிரிந்த பின் மனம் போன போக்கெல்லாம் புரவியைப் போகவிட்டேன். பரிமாவும், அடர்ந்த புதர்களில் நுழைந்தும், குன்றுகளைக்கடந்தும், பள்ளத்தாக்குகளைத் தாண்டியும், சென்றது! ஆ! கதிரவனோ அதி கொடூரத்துடன் காய்கின்றான்! தாகவிடாய் தாங்கமுடியவில்லை! ஆவியோ சோருகின்றது! கால் அடியெடுத்துவையேனென்கின்றது! குதிரையையோ சும்மா செல்லவிட்டு வெகுநேரம் கழிந்தது!— என் செய்வல்?

[சேர்ந்து அங்கோர் மரத்தடியில் புற்றரை மேல் சாய்கின்றாள்]

ஆ! நமனே! என் உயிரை வாங்கிச் செல்லாயோ? காதலனால் இகழ்ந்து தள்ளப்பட்டும் இவ்வாழ்க்கை

வேண்டுமா? ஓ! கூற்றுவனே! உனக்கு எமதர்ம னெப் பெயராயிற்றே! அப்பெயர் உனக்குத் தகுமோ! சாவித்திரியும், சத்தியவானும், ‘கண்ணி ரண்டும் ஒன்றையே காண்’ பதுபோல், உடலிரண்டு உயிரொன்று படைத்தக் ‘காதன் மனையாளும் காத லியு’மாய் அமைந்து வாழ்ந்தகாலத்துச், சத்தியவான் உயிரைக்கொண்டுபோகவன்றோ வந்துற்றாய்! அப் படி மனமொத்து வாழ்வாரை வாட்டுவதன்றி என் போல் காதலனால் வெறுக்கப்பட்டு வருந்திவாடும் அனாதையைக் கொண்டுபோகின்றாயா? இல்லையே! இப்பொழுது என்னுயிர்கொண்டேகினனன்றோ உன் தருமம் விளங்கும்? காலனென்ற பெயரும் தாங்கி னாயே! இக்காலம் என் துயர் நீங்க என்னுயிர் மாய்த் திலையேல் நீ காலனென்ற காரணப் பெயரால் விளிக் கப்படுதல்தவறே! நாயகன் காதலிழந்த நாயகியும் வாழ்வளோ? கணவனே யல்லவா காரிகையர்க்குக் கடவுள்? தாய் தந்தை, தம்முன், தம்பி, குரு தெய் வம், யாவும் மாதர்க்குக் கொழுநனேயன்றோ? ஏ! எமனே! உன்னை எவ்வளவு முறை விளிப்பது? நடு வன் என்ற பெயரையும் வெட்கமின்றி வகித்த னையே! நடுவு நிலையினின்றும் பிறழாது நடப்பவ னென்றபொருள் தோன்றவன்றே அப்பெயர் நினக்கு வாய்த்தது? என்னுயிரும், என் காதலும், என் தெய்வமும், எல்லாமுமாகிய என் சுந்தரனால் இகழ்ந்து தள்ளப்பட்டுத் தள்ளாடும் டாவியைக்கொண்டு போகா நீயா நடுவன்? காட்டு மிருகங்கள் வாய்பட்டு மாள்வமெனிலோ, அவைகளும் விலகிச்செல்கின்ற னவே! ஆ! என் ஆவி மீகானில்லாக் கப்பலென்ன எங்கோ செல்கின்றதே!—

[கண்களை மூடுகின்றாள். சத்தியசேனன் பிரவேசிக்கிறான்]

சத்:—அந்தோ! ஈசா! என் செய்வேன்? எங்குறுவேன்? எவர்க்குரைப்பேன் என்குறையை? அதோ! இந்தி

சாள் போல் இருக்கின்றாள் அங்கு படுத்துறங்கும் மாது! இறப்பைத் தவிர வேறொன்றும் வேண்டிலே னாயினும், அவள் மனதையும் பார்ப்பேன்.

[அருகிற்சென்று இந்திரா மூர்ச்சையாய் இருப்பதைக் கண்டு]

அயர்ந்து நித்திரை போகின்றாள் போலும்!

[தொட்டுப்பார்த்து]

கட்டைபோலன்றோ அசைவற்றுக்கிடக்கின்றாள்! உயிர் உளதோ? இலையோ? இந்திரா! பேசவில் லையே!--மாண்டாயோ? ஐயோ! என்னுயிர் போகாதா? உன் சந்திரவதனமும் ஒளியற்றிருக்கிறதே! கமலக் கண்களும் மூடிய வண்ணம உள்ளனவே! கிள்ளை மொழியும் புளிக்கப்பேசும் உன்கனிவாய் மூடிப் பவ ளப்பெட்டி போன்று தோன்றுகிறதே! நீ பேசும் பொழுது, நின் செவ்விய இதழ்கள் மெல்லவசைந்து, முத்துவரிசையொத்த நின் பற்கள் ஒளிவீசிப் பிரகா சிக்குமே! இதோ! கொவ்வைக் கனியைப்பழித்த நின் இதழ்களோடு என் இதழ்களைச் சேர்த்து என் ஆவியை உன் உடலுட் செலுத்துவல்!

[குனிந்து முத்தமிடுகின்றான்]

ஆ! சுவாசமிருக்கின்றது! மூர்ச்சை போயினளே யன்றி வேறில்லை!

[அவள் முகந்துடைத்து, ஓர் மரக்கிளையால் விசுருகின்றான்]

இந்திரா! பேசாயோ? இந்திரா!

இந்:—(கண்விழித்து) ஈசுவரி! என் உயிர் போயிலதே!

சத்:—இந்திரா!

இந்:—ஆ! யார் விளிப்பது? எமனே! என்வேண்டுகோளிற் கிணங்கி இங்கு போந்தனையோ?—மெத்த வந்தனம். (திரும்பிப்பார்த்துத் திடுக்கிட்டு) நீயா? ஓ! நீ யென் கூற்றுவனே! என் உயிர்மாய்க்க வந்த எமனே யாவாய்! எப்படி வந்தனையிங்கு? என்னை வதைக்கவோ

எங்குந்தேடித் திரிகின்றாய்? ஆ! கன்னெஞ்சனே! என்னை எதற்கோ மூர்ச்சையினின்றும் தெளிவித்தாய்? தப்பியோட முடியாத குற்றுயிருடைய எலியொன்றை விட்டு விட்டுப் பிடித்து இம்சித்து விளையாடிக்களிக்கும் பூனையேபோல் என்னை விளித்தெழுப்பினாய்!

[சுந்தரவதனன் பிரவேசிக்கின்றான்]

**சுந்:**—நான் வீணில் கோபிப்பதிற் பயனில்லை! சாந்தமாய் அவளிடம் எல்லாம் கூறுவேன். உள்ளதை விண்டபின் அவள் உள்ளத்தை அறிவேன்—

**சத்.**—என் எசமானே! இளவரசியைக் காப்பாற்றக் கடிதே வாரும்!

**இந்:**—ஓ! நீ செல். எனக்கொன்றுமில்லை.

**சுந்:**—(திரும்பி இருவரையும் நோக்கி) ஆ! பாவிகாள்! என் கண் முன்பா? ஈசா! இக்காதகர்களை ஏன் கொல்லலாகாது? இதோ!

**இந்:**—என் இன்னுயிர் சுந்தரா! முனிவதொழிந்து யான் சொல்வதைக் கேட்டருள்.

**சுந்:**—சரி. இந்திரா! என்னை மன்னிப்பாய். இனிக்கோபியேன். காற்றால் மோதுறாது அமைதியாய் நிற்கும் ஆழியினும் சாந்தமாய் இருப்பேன். என் பிரிய இந்திரா! இதோ! இவ்வாள் கொண்டு, என் மார்பைப் பிளந்து, என் மனம் எவ்வளவு சாந்தமாயுள்ளதெனக் கண்டுகொள்! பின், நீயும், நின் பையனும் இன்பமாய் வாழலாம்!—சத்தியசேனா! நீயாகிலும் என்னைக் கொல்வாய். நீயோ ஏழை! என்னைக் கொன்று இன்புறுவாய்! என்ன? யான் கோபத்தால் பிதற்றுகின்றேனா?

**சத்.**—அந்தோ! சுந்தரப் பெருமானே! என்னையிது?

**சுந்:**—ஆனால், என்னைக் கொல்லச் சம்மதியீரா?

**இந்:**—உன்னைக் கொல்வதா!

சத்:—'சங்கநிதி பதுமநிதி யிரண்டும் பெற்று தரணியொடு வானுள' க்கிடைக்கினும், அது செய்யேன்!

சுந்:—நல்லது. உங்களைப் பழிசொல்வதிற் பயனென்னே!- சத்தியசேனு! இதுவே நம் கடைசி முறைச் சந்திப்பு! எங்களை விட்டுச்செல்.

சத்:—உத்தமனே! இதோ! சென்றேன்!

[போகின்றான்]

சுந்:—இந்திரா! இப்போது என்னுயிரை இவ்வாளால் போக்குவாய்! இல்லையேல் இறப்பாய்! சும்மாவிடேன். நம்மிருவரையும் இத்தரை ஓரே சமயத்தில் தாங்காது! என்னைக்கொன்று உய்வாய். அன்றேல் உயிர் மாய்வாய்! எது சம்மதம? (வாளை உயர்த்துகிறான்)

இந்:—என் அன்பே! நீ ஓங்கியவாளை என் மார்பிற் புதைத்தால் பெரும் புண்ணியவானுவாய். நின் தடக்கையால் இறப்பதைத் தவிர வேறு வேண்டேன்! ஆனல், நின்னை வேண்டுவதொன்றுண்டு. என் நெஞ்சைப்பிளந்து, என் இருதய கமலத்தில் நீ எழுந்தருளி யிருப்பதைக் கண்டாகிலும், என் உண்மைக்காதலின் தன்மையை உணர்ந்து என்னை அன்புடன் ஒரு முறையேனும் நினைப்பாய்! எனின்னம் தாமதம், துரையே!

சுந்:—அடி! நீ இறக்குமுன் நின்னைப்படைத்த கடவுளைக் கருதி, அவன் கருணையை வேண்டிக்கொள். உன் பாவத்தை மன்னிக்குமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்.

இந்:—என் சுந்தர! கடவுளென்னை யென்றும் காக்கத்தவறார். மேலும் உன்னைத்தவிர வேறு கடவுளை யானறியேனென்பதையும், என் உள்ளத்தில் நிகழும் ஒவ்வொரு எண்ணத்தையும், அறியும் முற்று முணர்ந்த முழுமுதற்கடவுள் என்னைக் கருணையுடன் காவாது கைவிடுவரோ? அனதைக்குத் துணை அனதையே யன்றோ? அதோ வானுலகம் என் மனக்கண்முன் தோன்றுகின்றது! அங்குள்ளவர்கள் எவ்வளவு களிப்புடன் வாழ்

கின்றனர்! சுந்தர! அங்கு பொறுமை, பொய், களவு, கோபம், கொலை, முதலியன கிடையாவாம்! உண்மையோ?

சுந்:—ஆம். உண்மையே!

இந்:—ஆயின் அங்கு செல்லும் வழியைக் காண்பித்தருள்!

சுந்:—தயார்தானே? (வாளை வீசுகின்றான்)

இந்:—யான் தயாரே!

[ஓர் விறகுவெட்டி வருகின்றான்]

விறகுவெட்டி:—(தனக்குள்) டே! எஞ்சாமி! ஊட்டைக் கோளி கூப்பிடவல்ல விட்டுவந்தேன்! பொளுது முளைக்கு முன் இங்கே வந்தும் ராசாவைப் பாக்கக் கிடைக்கலேயே! பொஞ்சாதிகிட்டே ராசாவைப்பாத் துக்கிட்டுத்தான் வரோணும் என்றல்லோ செல்லிவந் தேன்! இப்போ, சூரியன் தலைக்கி மேலேயல்லோ காய்றான். இன்னம் ராசாவைபுங்காணம், மந்திரியையு ங்காணம். எளவு ராசா எங்கே பூட்டான்? சோறுகூட வல்ல குடிக்காமே வந்துட்டேன்! கொஞ்சமின்னே! டேப்பா! எம்மாம் பெரியகுருதை வேவமா ஓடிச்சி!- ராசாமவளு மல்லவா ராளாம்! டேப்பா! எம்மா அள வா இக்கோணுமவள்?

[இத்திராவின்மேல் வாள்வீசி நிற்கும் சுந்திர வதனனைக் காண்கிறான்]

அடடே! அங்கொருபயல் வாளை ஞேங்கியல்ல நிக் கிறான்! டே! டே! கீளே ஒரு பொட்ட புள்ளேயல் ல படுத்திக்காள்!-ஓ! கொலையல்ல நடக்குது! (ஓடி) டே! டே! டே! நில்ராபயலே! வந்துட்டே! கொன்னுட்டே உன்னே!

[சுந்தரவதனன் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்து விறகுவெட்டி தடுக்கு முன் இந்திராவைக் குத்திக் காயமாக்குகிறான்]

(கோபித்து) அடே! யார்ரா இவன்! பொம்பளை யைக் குத்திட்டான்! ஆம்பளேயைப் பார்ரா! உனக்கு

முவத்திலே மீசையொரு கேடா! சி! நீயொரு மனசனு? (இந்திராளைப் பார்த்து) ஆ! நத்தமல்லவெருது!

சுந்:—அடே! தூரநில். இன்றேல் மடிந்தாய்!

விறகுவேட்டி:—டே! இவன் என்னமோ செல்ருனே! ஒன்னுந்தெரியலேயே! இங்கிலீசல்ல பேசராம் பேலவிக்குது!-டே! வாளைக்கிளேபோடு! இல்லாட்டி இதோ உன்னைப்பாரிப்போ—

[கையிலிருந்த கொடுவாளை வீசிச்செல்கிருன். இருவரும் சண்டை செய்கின்றனர்.]

இந்:—ஈசா! என் சுந்தரனைக் காப்பாய்!

சுந்:—சனியனே! இதோ! இதைப் பெற்றுக்கொள்!

[சண்டையில் சுந்தரன் விறகுவெட்டியை வாளால் காயப்படுத்துகிருன். விறகுவெட்டியின் கொடுவாளும் சுந்தரவதனனைக் காயப்படுத்தியது.]

விறகுவேட்டி:—டே யெஞ்சாமி! நத்தம் வந்துருச்சி! ஊம்-இன்னிக்கி என்னையுஞ் சரித்தான்! உன்னை வுட்டேனு சும்மா?

இந்:—அடே! அப்பா! நீ வழியிற் செல்பவன். உனக்கேன் கஷ்டம்? சும்மா போகாமல் சனியனையேன் விலேக்கு வாங்குகின்றனை?

விறகுவேட்டி:—இத்ரா! குட்டி யென்னமோ செல்ருள்! இந்த எளவுகோண வெளுத்தைத்தான் கொஞசங் கத்து கெட்டேனு? டே! என்ன அளவு இந்த குட்டி! எம்மா ஜோக்கா இக்கரா?

சுந்:—(சுகப்பிரியன் முதலியோர் சேய்மையில் வருமொலி கேட்டு) ஆ! அதோ! அவர்கள் வருகின்றனர்! இப்பாவியால் இரத்தம் பெருகுகின்றது. இவர்கள் கையில் விழாமல் தப்பியோடவேண்டும். யானே செத்தாலும் சாவேனேயன்றி அகப்பட்டு விழியேன்

[ஓடப்போம்போது விறகுவெட்டித் தடுக்கிருன். திமிறிக்கொண்டு ஓடுகின்ருன்]

விறகுவெட்டி:—அடேடே! ஓடறான்! ஓடறான்! புட்ரா புட்ரா! அவம் போவட்டும்! எளவு என்னாலே ஓட முடியாது! (இந்திராவை நோக்கி) ஏ! குட்டி! ரொம்ம நல்லாவல்ல இக்கரே! நாவாராட்டி உன்னை கொன்னல்லவிருப்பான்! எங்கே! ஒரு முத்தங்கொடு கெடஞ்சாவுது!

[சுகப்பிரியன், புருஷோத்தமன், சுதர்மன், பிரதான், காவலாளர், முதலியோர் வருகின்றனர்]

சுக:—அடே! யாரடா நீ? (இந்திராவைப்பார்த்து, இரத்தம் வருவதைக்கண்டு பயந்து) ஆ! இந்திரா! நீயா யிங்கு கிடப்பது! உதிரம் பெருகுகின்றதே! (விறகுவெட்டியை) அடே! தடியனே! நீயார்? என்னசெய்தாய்? உள்ளதைச்சொல்லடா?

விறகுவெட்டி:—இத்ரா! இவன் யார்ரா இவன்? அவம் பூட்டான், இவன் வந்தான். பலே சிப்பாய்ப்பேல பலே போடல்ல போடறான்?

சுக:—அடே! என்னடா! உளறுகின்றாய் நீ? யார் இராஜ குமாரத்தியைக் குத்திக் காயமாக்கியது?

விறகுவெட்டி:—(கைகொட்டிச் சிரித்துக்குதித்து) டே! டே! ராசா மவளா இந்த குட்டி? சரி. சரி. இன்னம் ராசாவத்தான் காணோணும்!

சுக:—(கோபித்து) எய்! இராச குமாரத்தியை என் காயப் படுத்தினாய் என்றால் ஏதேதோ பிதற்றுகின்றாய்!

விறகுவெட்டி:—இத்ரா! ஐயோ! சாமி! இதென்ன கங் காச்சியாவல்ல இக்குது! நானல்ல குட்டியைக் குத் திட்டனம்!

சுக:—யாரடா இவனைக்கட்டி உதையடா! கேட்டதிற்கு பதிற் சொல்லாது என்னென்னவோ பேசுகிறான்!

[விறகுவெட்டியை சவுக்கால் அடிக்கின்றனர்.]

விறகுவெட்டி.—(கதறி) டே! எஞ்சாமி! மவராசா! அடிக்காதெங்கள்! அம்மாடி! எம்பிட்டு நோவு நோவுது!

செல்றேன்! சும்மாவிருங்கள்! செல்றேன்! ஊம்-நான் ராசாவைப் பாக்கோணுமென்னு, ஊட்டைவுட்டு வந்தேன். வந்துகிட்டே இருக்கக்குள்ளோ, இந்த எளவு குட்டிமேலே ஒருத்தன்வாளை வெச்சிகிட்டு இருந்தான் நான் ஒடியாந்தேன். அவன் குட்டியைக் குத்திட்டு, என்னையுங்குத்தி நெத்தம் வரச்செஞ்சிட்டு திமிறிகிட்டு ஓடிட்டான். நானும் சும்மா வுட்டேணு பாத்துகிட்டேங்களா? கொடுவாட்டுகாயஞ்செஞ்சிட்டேன். இந்நேரம் கூப்புடு தூரங்கூட போயிருக்கமாட்டான்.

சுக:—ஆ! அப்படியா? கண்மணி! இந்திரா! யாரவன்? சொல்வாய்.

இந்:—எவனோ ஒரு பித்தன். செல்கின்றனவன்.

சுக:—அப்படியன்று. அப்பாதகனைப்பிடித்துக் கண்டதுண்டஞ் செய்யாது விடேன்!

இந்:—(பயந்து) அப்படி யொன்றும் செய்ய வேண்டாம். அவனைப்பிடித்தால் தயைகூர்ந்து என்னிடம்கொண்டு வரவேண்டும்.

சு:—கண்ணே! அப்படியே செய்வன்.

சுந்:—வாக்குறுதி செய்யவேண்டும்.

இ:—இந்திரா! சத்தியமாய்ச் சொன்னேன். அவனை உன்னிடமே கொண்டு வருவேன்.—அடே! இராசகுமாரியையும், இந்த விறகுவெட்டியையும், அரசனிடம் அழைத்துச் செல்லுங்கள்.—அடே! விறகுவெட்டி! நீ வெகு நல்லவன். உனக்கு அரசன் தக்க பரிசு அளிப்பார்.

விறகுவெட்டி:—டேப்பா! என்னை சும்மா விட்டா போதுண்டா சாமி! நான் போறேன் ஊட்டைப்பாக்க! ராசாவைப் பாக்காட்டிப் போவுது! இந்த எளவு சனி எனக்கேன்?

[சிலர் இந்திராவை பல்லக்கொன்றிலேற்றி, விறகுவெட்டியுடன் அழைத்துச் செல்கின்றனர்.]

சுக:—சரி, வாருங்கள். நாம் விறகுவெட்டி காட்டிய வழிச் சென்று தப்பியோடின கொலைகாரனைக் கண்டு பிடிப் போம்!

[யாவரும் செல்கின்றனர்.]

## நான்காங்களம்.

இடம்: அடவியின் ஒருபுறம்.
காலம்: பிற்பகல்.
பாத்திரம்: சத்தியசேனன்.

சத்:—(தனக்குள்) ஆ! கடவுளே! ஏன் இப்படி என்னை ஆட்டுகின்றாய்? யான் மட்டும் படும்பாடு போதா தென்றோ, என்னால் ஒரு பாவமுமறியாத இந்திரா ணும், ஆடவர் மணியாகிய சுந்தரனும் கொடுந்துன் பம் அனுபவிக்கின்றனர்? இப்பாவியேன் பிறந்து பயனென்னே? என் சுந்தரன் சுந்தரத்தை நாடோ றும் பருகிப் பருகியன்றோ உயிர் வாழ்ந்து வந்தேன்? என் தாய்தந்தையரை விட்டுப்பிரிந்த துயரத்தையும் மறந்தேன்! சுந்தரன் சந்திரவதனத்தையும், அவன் தாழ்ந்த கைகளையும், மணிவரையொத்த சுந்தரமார் பினையும், உயிரை உண்ணும் இளமுறுவலையும் கண்டு களித்தும்; அவன் அழகையும், புகழையும், குணத்தையும் பிறர்பேச, செவிவாய் கொண்டு உவ கை பூத்தும், அல்லும் பகலும் அனவரதமும் அவன் திவ்விய நாமாவே இராம நாமா வெனக் கருதிச் சொல்லியும்; வாழ்ந்து வந்த வாழ்க்கையைக் கருதி யன்றே, அன்னை தந்தை, சுற்றத்தார், மற்றியாவரை யும் முற்றும் மறந்து, என் உண்மை உருவத்தைக் காட்டிக் கொள்ளாமல் காலங்கழித்து வந்தேன்!

எத்தினம் என் சுந்தரனையும் என்னையும் பிரித்ததோ, அத்தினமே என் சுகமும் போயிற்று !— ஆ ! கண் சுழல்கின்றது ! பல நாட்களாய் உணவுறக்கமேயில்லை !-

[ஓர் மலையருவி ஓடுமிடத்தைக் கண்டு அதனருகிற் செல்கின்றான்]

ஆகா ! என்ன சுந்தரமான இடமிது ! மனதிற்கு எவ்வளவு மனோகரமாயுள்ளது ! இச் சிற்றாற்றின் கரையில் பசிய புல்லடர்ந்து மெத்தைபோல் இருக்கின்றது ! பலவகை மரங்கள் உயரவளர்ந்து நிழலைத் தந்து நிற்கின்றன ! பல்வகைப் புஷ்பச் செடிகள் பூக்கள் மலிந்து ஒருவகை அழகையும், மணத்தையும் தருகின்றன !

[புற்றரையில் படுத்துக்கொள்கின்றான்]

ஆகா ! தென்றலும் வெகு இனிமையாய் வீசுகின்றது ! ஆற்றின் நீரோ கற்களிடையிலும், ஆழ்ந்த பள்ளங்களிலும், மேடுகளிலும் ஒருவகை ஓசையுடன் ஓடிக்கொண்டு செல்கின்றது ! அங்கங்கே, ஊற்றுகளில், நீர் குமிழிவிட்டு வெளிப்போதலால் உண்டாம் ஒலியும், அக்குமிழிகள் உடைதலால் உண்டாகும் ஓசையும், ஒன்று சேர்ந்து நன்றாய் சப்திக்கின்றன ! உற்று நோக்கின், இன்ப துன்பங்கள், சுக துக்கங்கள், இடையிடையே விரவி வரப்பெற்ற “சில் நாள், பல் பிணி”யுடை இவ்வாழ்க்கைத் தன்மையை இனிதே விளக்கியோடும் இந்நதி ! — ஆ ! அதிக சோர்வாயுளது ! சற்று நித்திரை போய் எழுவேன் ! ஈசா ! இத்தூக்கம் மறுபடியும் நீங்காவண்ணம் அருள்புரியாயோ ? என்றும் ஒழியா உறக்கம் விழைகின்றேன் !-

[தூங்குகின்றான். சிறிது நேரம் சென்றபின், சுந்தரவதனன் பிரவேசிக்கின்றனன்.]

சுந்: —(தனக்குள்) அந்தோ ! என்ன காரியஞ் செய்தேன் ! என்மனம் என்னை இகழ்கின்றதே ! விறகுவெட்டி சொன்னதுபோல், என்னைக்கொல்ல மறுத்த பெண்

ணைக் கொல்ல முயன்ற யான் ஓர் ஆண்பிள்ளையோ? சீ! இத்தகை மதிகேடன் எங்கேனும் உண்டோ? ஐயோ! இந்திரா! விறகுவெட்டியுடன் யான் சண்டை செய்தபோது, என்னைக்காக்க ஈசனை வேண்டினையே!—அவள் நல்ல பரிசுத்தையாயிருக்கலாம்! யானொரு கடுமனக்கொடியேன்! அவள் உண்மைக் காதலியாயின், தன்னைக்காயப்படுத்தியவன் பெயரையுரையாள். விறகுவெட்டியும் காயமுற்றநால் என்னைத் தொடரான். இன்றுனென்ன என்னையுமறியான்.—(திரும்பி, உறங்கும் சத்தியசேனனைக்கண்டு அருகிற் சென்று) ஆ! இப்பாவியா? எவ்வளவு அயர்ந்து நித்திரை போகின்றான்! குற்றஞ் செய்தவனாயின் நல்ல உறக்கமும், மனவமைதியும் இருக்குமா? நான் ஊண் உறக்கமற்று அலைகின்றேனே! இவனெப்படி சஞ்சலமின்றி சயனித்துறங்குகின்றான்? ஈசன் செயலிருந்தபடியென்னே! இவனன்றோ, இத்துயரனைத்திற்கும் காரணம்! இவனை இப்பொழுதே இவ்வாளால் கொல்லுவேன்..

[வாளால் குத்தி உதிரம் பெருகச் செய்கிறான்.]

சத்:—(கண்விழித்து) ஆ! அச்சுந்தரக்கைக்கு அநேக கோடி வந்தனம்! கொடிய வாளென மதியிலார் உரைத்திடும் அக்கூரிய வாளுக்கும் பல்கோடி நமஸ்காரம்! வாள் கொண்டு குத்திய அக்கரம் என்றும் அழியாதிருக்க வேண்டும். இன்னமொருமுறை குத்தி யென் உயிர் மாய்ச் செய்யாதோ? யானும் இறந்து இனிய விண்ணுலகேகுவனே!

[சுகப்பிரியன் முதலினோர் வருமொலி கேட்கின்றது]

சுக:—ஆ! அவர்கள் அதோ வந்தனர்! யான் தொலைந்தேன்! அப்பாழும் விறகுவெட்டி செய்த காயத்தின் உதிரப் பெருக்காலும், பலநாள் உணவுறக்கமில்லாத் துன்பத்தாலும், கால் கைகள் ஓய்ந்து, ஓட முடியவில்லை!

[கீழே விழுகின்றான். சத்தியசேனனைப்பார்த்து]

இதோ! பார்! இது தான் தருணம்! உன்பழிக்குப் பழி வாங்கும் சமயம் இதுவே! உன்னைக்குத்தினேன்! இந்திராவையும் குத்திக் காயப்படுத்திவந்தேன்! என்னைத் தடுத்ததால் காயப்பட்டாயென வரும் அவர்களிடம் சொல்லி நீ உயிர் தப்பி வாழ்வாய்!

சத்:—என் ஐயனே! ஓடுங்கள்! ஒளியுங்கள்!

சுந்.—அதெப்படி யான் தப்பிப்போட ஒப்பினுப்? யான் உயிர் வாழவே விழைந்தாய்!

சத்:—இல்லையேல் யான் சன்மம் எடுத்துப் பயனென்னே!

சுந்:—(கண் கலங்கி) ஐயோ! சத்தியசேனு! உன் உயிரைப் போக்க எண்ணிய என்னை ஏன் இப்படி உயிர்பிழைக்க வேண்டுகின்றாய்? நீ உண்மையில் ஒரு பாவமுமறியா நல்லனு! ஆம்! ஆம்! அப்படி ந்தானிருத்தல் வேண்டும்! அன்றேல், உன் முகத்தில் குழவி முகத்தொளிரும் மாசற்ற துப்ப வொளியொன்று பொங்கித் ததும்பிப் பூரணமாய்த் தாண்டவஞ் செய்யுமா?

சத்:—ஐயோ! என் தலைவனே! ஓடிவிடுங்கள். தப்பிப் பிழையுங்கள்! ஆ! வந்தனரே எம தூதர்களென. அதோ அப்புதரில் ஒளிந்து கொள்ளுங்கள். சீக்கிரம்!

சுந்:—ஆ! என் அன்பான சத்தியசேனு! உன் காதலுக்குக் கரையில்லையோ? நீ பென்ன தெய்வப்பிறப்போ? மானிடனல்லையோ? என்னைக்காக்கவந்த கருணமூர்த்தியோ? உரையாய்! ஐயோ! உன் அன்பு என்னை உயிருடன் வாட்டுதே! உன்னுயிர் குடிக்கவந்த கூற்றுவனுகிய என்னை வருபவர்களிடம் காட்டிக்கொடுத்து நீ நன்கே வாழாயோ!

சத்:—ஐயோ! என்துரையே! என்னவிது? வந்துவிட்டார்களே! என் கண்மணியே! ஒளியுங்கள் விரைவில்!

[சுந்தரவதனன் சத்தியசேனன் உதவிகொண்டு ஒளிகின்றான். சுசப்பிரியன், சுதர்மன், புருஷோத்தமன், பிரதாபன், யாவரும் வருகின்றனர்]

சுசு:—வாருங்கள் விரைந்து இவ்வழியே!

சத்:—(தனக்குள்) என் இரத்தத்திலேயே என் வாளும் தோய்ந்தது நன்றாயிற்று!

சுக:—(சத்தியசேனனைக்கண்டு) அதோ! ஒருவன் தப்பியோட முயல்கின்றான்!

புரு:—அடே! நில்! யார் நீ?

சத்:—காட்டு விலங்குகள் காயப்படுத்திய ஓர் அனாதை.

புரு:—சுகப்பிரியரே! இவன் தான் இளவாசியைக் காயப்படுத்தியவன். அவளிடமிருந்த அப்பையன்!

சத்:—அந்தோ! யான் அகப்பட்டுக்கொண்டேன்!

சுக:—அடே! நீயா! அடே! நன்றி கெட்ட மடையா! அவளிடமிருந்த நீயா அவளைக்குத்தினாய்! அவள் சோற்றைத்தின்று அவளுக்கோர் அழியா வசை யைத் தேடிவைத்ததுமன்றி, இங்கும் வந்து அவளைக் கொல்லவா நினைந்தாய்? அடே!—

சத்:—ஐயா! ஏன் வீண் வார்த்தை பேசிக் காலதாமதம் செய்கின்றீர்? யானே அவளைக்கொல்ல முயன்றேன். வேறென் வேண்டும்?

சுக:—ஏன்?

சத்:—ஏனா? ஏழையாயிருந்த எனக்கு, நல்லுணவளித்து நல்லுடை கொடுத்து, நன்றாய் வளர்த்தவள், திடீரென என்னை யோட்டி, உணவுறககமின்றிச் சுற்றித் திரியச் செய்ததால் கோபங்கொண்டு கொல்ல நினைந் தேன்?

சுக:—அடே! துஷ்டா! நல்லது. அதற்குத் தக்க தண்டனையடைவாய். அடே! இவனை விலங்கிட்டு அழைத்து வாருங்கள் அரசன் முன்.

[சத்தியசேனனை இழுத்துச்செல்கிறார்கள்]

சுந்:—(மனம் பதைத்து, வெளியில் வந்து) ஏ! மடையர்களே! நில்லுங்கள்! யாரை இழுத்துச் செல்கின்றீர்கள்?

[யாவரும் திகைத்துத் திரும்பிப் பார்க்கின்றனர்]

சுக:—ஆ! யாரது?

புரு:—சுந்தரவதனன்!

சுந்:—ஆம். பானே இந்திராளைக் காயப்படுத்தினேன்! அதற்கு யாரை இழுத்துச் செல்வது? என் சத்திய னையா? அடே! அவனைக் கையால் தீண்டவும் தகுமோ நீங்கள்?—விடுங்கள் அவனை! ஆ! என் சத்தியசேனு! என் கண்ணே! கண்மணியே! (சத்தி யசேனனைக் கட்டித்தழுவி முத்தமிட்டு) என் மதிப் பில்லா மாணிக்கமே! மாகதமே! மாற்றறியா செம் பொன்னே! ஆகா! உன் விலையை இக்கசடரோ அறி வர்? அறிந்தால், உன்னை இப்படி இழுத்தேக மனம் ஒருப்படுவரோ? ஐயோ! அளப்பரும் அன்பின் உறை விடமே! என்னை ஆதரிக்க வந்த ஆண்டவனே! உன்னையா இவர்கள் கொடுமையாய் நடத்தினர்? அந்தோ! இப்பாவி என்னால் உன்னுடல் இரத்தம் பெருகுகின்றதே! அடே! நீங்கள் இன்னமா மரம் போல் சும்மா நிற்கின்றீர்கள்? அவனுடலினின்றும் உதிரம் பெருகுவது, நீங்கள் பார்த்து நிற்பதா? கல்மனத்தவர்களே! உங்களுக்கு இரக்கமில்லையோ? அடே! அரசர்களும், அரசிகளும், தங்கள் சதை யைக் கீறி இப்புண்ணை அது கொண்டடைத்து, இரத்தப் பெருக்கை நிறுத்த முன் வரவேண்டுமே! அவ்வளவு அருங்குணக் குன்றல்லவோ அவன்! (உதிரத்தைத் துடைத்து) ஆ! சத்தியசேனு! ஆயி ரம் அரசரும் உனக்கிணையாவரோ?

சத்:—ஐயா! இவர் யாரோ தெரியவில்லை! வெறி கொண் டார்போலும்! சொன்னது முற்றும் பொய்! நம்ப வேண்டாம்! நானே குற்றமிழைத்தோன்.

கர்:—ஐயோ! சத்தியசேனு! இம்மாதரிப் பேசேல்! உண்மை உரைத்திடு.

புரு:—(தனக்குள்) ஆகா! என்னையிது? காண்பதுண் மையோ? இப்பையன் எப்படி? இவனைப்பற்றி நினைத்

துப் பழி சுமத்தியதெல்லாம் தயறென அஞ்சுகின்றேன்!

சுக:—சரி. சுந்தரவதனனே குற்றமிபற்றியவன். அவனே ஒப்புக்கொண்டனன். இருவரையும் அழைந்து வாருங்கள். (தனக்குள்) சிக்கினன் சுந்தான். தொலையட்டும் நாம் இனி இந்திராளை மணந்து இனிதே வாழலாம். (வெளியில்) நடவுங்கள் விரைந்து!

[வீரகேசரி, இந்திரா, விறதுவெட்டி, காவலாளர் முதலியோர் எதிரே வருகின்றனர்]

வீர:—அகப்பட்டானா அப்பாதகன்? சுகப்பிரிய! யாரிது? சுந்தான் இங்கு எங்கு வந்தனன்? இச் சிறுவன் யார்?

இந்:—(தனக்குள்) ஐயோ! சுந்தான் சிக்கினன் இவர்கள் கையில்! இதென்ன விந்தை! சுந்தானும், சத்திபனும் வெகு அன்புடன் வார்த்தையாடுகின்றனரே!

சுக:—அரசே! இச்சிறுவன் இந்திராளிடமிருந்தோன். இவ்விருவரும் பெருவழக்கிடுகின்றனர். சுந்தரவதனன் இந்திராளைத்தான் கொல்ல முயன்றதாகச் சொல்கிறான்! இவனோ தானே குற்றஞ்செய்தோனெனச் செப்புகின்றான்!

விறதுவெட்டி:—(சுந்தானைச் சுட்டி) இவந்தான்! மவராசா! இவந்தான்! விடாதேங்கள்!

வீர:—(தனக்குள்) அம்ம! இறுதியில் அகப்பட்டான் சுந்தான்! இதுவே சமயம், இவனைக்கொல்ல. (வெளிப்படையாய்) அப்படியா? இருக்கட்டும் இருவரையும் பத்திரமாய்க் காவலில் வையுங்கள். நகர் சென்று தீர விசாரித்திடுவோம்.— இந்திரா, இவர்களை நீ தெரிந்துகொள்ளவில்லையா?

இந்:—பிரிய பிதாவே! இவர்கள் கண்டறிய முடியாதபடி மாறு வேடம் புனைந்திருக்கவேண்டும். யான் ஒரு வரம் தங்களைக் கேட்க விரும்புகிறேன். இப்பாதகர் இருவரும் சதியாலோசனை செய்து என் இன்னுயி

ரைப் போக்க முயன்றனரென்று இப்பொழுது தெளிவாயிற்று! அவர்களுக்குத் தக்கபடி நல்ல கடுந் தண்டனையை யோசித்து நானே சொல்ல விரும்புகிறேன். எங்கும் தப்பியோடாவண்ணம் யானே இவர்களைக் காவலில் வைத்துக் காப்பேன். தடை சொல்லாது இவ் வரம் தந்தருளுங்கள்.

வீர:—கண்ணே! நீ சொன்னதே சரி. அப்படியே செய்வாய் வா, போவோம். சூரியன் மேற்கில் மலைவாய்ப் படும் நேரம் நெருங்கியது. எல்லாம் நம் நகர் சேர்ந்து யோசித்துக்கொள்வோம்.

சுத:—(ஒருசார்) சுந்தரன் இதுபற்றி சனங்களின் அன்பை இழவா திருக்க வேண்டுமே!

புரு:—அதைக் குறித்து அஞ்ச வேண்டாம்.

[யாவரும் போகின்றனர்.]

நான்காம் அங்கம் முற்றிற்று

———ooo———

## அங்கம்—ரு

### முதற்களம்

இடம்: ஓர்வீதி.
காலம்: காலை.
பாத்திரங்கள்: புருஷோத்தமன், சுதர்மன் பிரதாபன்.

பிர:—என்னே! வீரகேசரி சுந்தரன் தலைவாங்க உத்தரவளித்திட்டனன்!

புரு:—ஆம். அவன் தன் விருப்பம் நிறைவேறுமென்று கனவிலும் கருதவேண்டாம். கடவுள் அவன் பக்கம் இரார்.

சுத:—நாம் காலம் தாழ்த்துகின்றோம் தலையாரிக்குச் சொல்லியனுப்பி ஒருமணி நேரம் ஆயிற்றே!

பிர:—சுந்தரன் காயங்கள் எல்லாம் ஆறிவிட்டனவா?

புரு:—ஓ! அவைகள் எளிதில் ஆறிவிட்டன. இரத்தப்பெருக்கால் களைப்பெய்தியதன்றி வேறில்லை.

சுத:—ஏன் இன்னம் தாமதம்?

பிர:—வாருங்கள் விரைந்து! சும்மா இருக்கச்சமயம் இது வல்ல.

புரு:—இதோ! செல்வோம்! நம்முயிர் உள்ளவரையில் சுந்தரனுக்காகச் சண்டை செய்வதே நம்கடமையும், கருமமுமாம்.

[செல்கின்றனர்]

## இரண்டாங்களம்.

| | |
|---|---|
| இடம்: | சிறைச்சாலை. |
| காலம்: | காலை. |
| பாத்திரங்கள்: | சுந்தரவதனன், இந்திரா, சத்தியசேனன். |

இந்:—சுந்தர! என்னவிது? எங்களுக்கு என்ன நேர்ந்தது? ஒன்றுமில்லையே! நீ ஏன் வீணில் வருந்துகின்றாய்?

சுந்:—ஐயோ! இந்திரா! சத்தியசேனா! உங்களன்பை விடுங்கள்! யான் அதற்கு அருகனல்லன்!

சத்:—எம்மரசே! தாங்கள் இப்படித் துயருறும்படி என்ன நடந்துவிட்டது?

சுந்:—அந்தோ! உங்கள் அன்பாலேயே என்னைக் கொல்ல நினைத்தீர்கள்போலும்! அல்லது யான் அறிவிழந்து பைத்தியத்தால் மாள்வேன்! என்ன? ஒன்றுமே

நடக்கவில்லையென சாதிக்கின்றீர்களே! யான் கனவு கண்டேனு?

இந்:—ஆம். நீ கனவுகண்டதாகவே கருதுவாய். அனைத்தும் அடியோடு மறப்பாய்.

சுந்:—என்னே! இந்திரா! குழந்தையிடம் பேசுவதுபோல் என்னிடம் பேசுகின்றனை! கனவா? இதுவரை நிகழ்ந்ததெல்லாம் கனவென்று சொல்கின்றனை? வெகு நன்று! பித்தரும் பேதையரும் பிதற்றிய வசை மொழியை உண்மையென நம்பியது கனவா? கற்புத் தெய்வமாம் உன்னையும், சத்தியத்தின் மெய்யுருவாம் சத்தியசேனனையும் படாத பாடு படுத்தித் தீவாய்ப் பட்டப் புழுவெனத் துடிக்கச் செய்ததும் கனவா? உங்கள் இன்னுயிர்க்கே ஓர் கூற்றுவனுய் வாய்த்துக் கொல்ல முயன்றதும் கனவோ? பின்னர், தன்னைக் கொல்லவந்தான் இன்னுனெனச் சொல்லாமல், என் பிழைபலபொறுத்து, வரையற்ற காதலும், புரையற்ற போன்பும் காட்டும் உன்னையும், என் குற்றந் தன் குற்றமென ஏற்று என்னைப் புரக்கவந்த புண்ணிய மூர்த்தியாய் விளங்கும் சத்தியனையும் கண்டு கைம்மாறு செய்ய வகையற்றுத் திகைத்து இன்னம் உயிர்வாழ்வதும் கனவேயோ?—

இந்:—ஆம். எல்லாம் கனவே! நடந்ததெல்லாம் கம் பிழையால் நடந்ததென்று நான் நினைத்திலேன்! எல்லாம் விதியின் பிழையே யாகும்.! ஆதலின், எனக்கு நீ அளிக்கும் கைம்மாறு என்னைக் காதலித்துக் காப்பதே!

சத்.—அண்ணலே! தங்களை என்றும் விட்டகலாப்பெரும் பாக்கியம் வாய்க்கப் பெற்ருல் என் வருள் வீணுகாது!

சுந்:—உன்னைக் காதலிப்பதா? ஐயோ! இப்பொல்லாக்குணத்தானை, இக் கல்மனக்கசடனை, இக்கொடுமையின் இல்லத்தை, இப்பொருமையின் இருப்பி

டத்தை, இனி நீ காதலனைக் கருதலாமா?

இந்:—என்னே ! சுந்தரா ! இப்படிப்புலம்பலைவிடு.

சுந்:—புலம்பலைவிடவா ? ஆ ! என் ஆயுள்காலமுழுமையும் புலம்பினும் இக்குறைதீருமோ ? ஐயோ !, "இன்னுசெய்தாரை யொறுத்தல் அவர் நாணநன்னயஞ்செய்து விடல்" என்ற தெய்வவாக்கைக் கைப்பற்றி நடக்க நீங்கள் பிறந்தீர்கள் ! யானோ, "நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லதன்றே மறப்பது நன்று" என்பதை அடியோடு மறந்து, நல்லது நீக்கித் தீயது செய்யச் சன்மம் எடுத்தேன் ! உள்ளத்தின் அழகைப் பிரதிபலித்துக்காட்டியொளிரும் உங்கள் முகத்தில் விழிக்க என்மனம் நாணுகின்றதே ! ஆ ! நான் உயிர்வாழத் தகுந்தவனோ ? இதோ ! —

[வாளையுருவி அதன்மேற் பாய முயல்கிறன்]

இந்:—(சரேலெனத்தடுத்து வாளைப்பிடுங்கியெறிந்து) என் இன்னுயிர் நாதா ! என் செய விருந்தாய் ? என்னை அனாதையாக்கவோ எண்ணினாய் ? என் கதி என்னாவது ? உயிரில்லா உடல் நிற்குமோ ? வெகு அழகு !

சத்:—ஆ ! வள்ளலே ! நல்ல காரியம் புரிய நினைத்தீர் ! அடியேன் யாரையோ அண்டிப்பிழைப்பது ? உங்களால் அல்லவா யான் இன்னம் உயிர் வாழ்வது ?

சந்:— ஐயோ ! என் கண்மணிகளே ! யான் உயிர் மாயவும் உடன்படீர்கள் ! அன்பால் உயிருடன் வதைக்கவுஞ் செய்கின்றீர்கள் ! யான் என்செய்வதோ அறிகிலேன். ! சரி. அரசன் என் தலையை வாங்கும்வரை காக்க வேண்டியதே !

இந்:—உன் தலையை வாங்க அரசன் துணிபின் என்னையும் இழக்கவேண்டியதே !

சத்:—அப்படியன்று ! நீங்களிருவீரும் மணந்து சுகமே வாழுங்கள் ! என்னுயிரால் யார்க்கு என்ன பலன் ? புவியையாளும் புரவலனும் தங்கள் ஆருயிரையும், கற்

பினுக்கணியாம் இந்திராளின் இன்னுயிரையும், இவ்வுலகம் இழக்கத்தகாது! யானே உங்களுக்காக இறப்பேன்! இது நிச்சயம்! நிச்சயம்!

சுந்:—(இந்திரா, சத்தியசேனன் இருவரையும் இருகரங்களால் கட்டியணைத்துக் கண்ணீர்வடித்து) ஆ! ஆ! வெகுநேரிது! என் பொருட்டு நீங்கள் மடிவதா? இதோ! என்னைப்பாருங்கள்! எனக்கு நீங்கள் ஏதேனும் பெருந்தீங்கிழைத்திருப்பின், அப்பொழுது என்ன செய்வீர்கள்? உண்மையாய் உரையுங்கள்.

இருவரும்.—மன்னிப்பு கேட்டுக்கொள்வோம்.

சுந்:—உண்மையிலா?

இருவரும்:—ஆம்.

சுந்:—அப்படியாயின் சரி.

இந்:—சரி. போவோம் வாருங்கள். இனி நாம் மூவரும் இறக்கத்தயாராயிருக்க வேண்டியதே!

[மூவரும் போகின்றனர்]

## மூன்றாங்களம்.

| | |
|---|---|
| இடம்: | அரசனவை |
| காலம்: | காலை. |
| பாத்திரங்கள்: | வீரகேசரி, புருஷோத்தமன், சுதர்மன், பிரதாபன், காவலாளர் ஏனையோர். |

வீர—புருஷோத்தமரே! சுகப்பிரியன் எங்கே? அறிவீரோ?

புரு—அரசே! எங்கோ யானறியேன்.

வீர:—எங்கு சென்றான்? இந்திரா தன் சைநிகளுடன் தயாராயிருக்கின்றனளா?

பிர:—தங்கள் கட்டளையை எதிர்நோக்கியுள்ளனள்.

வீர.—சரி. அடே! யாரடா அங்கே?

[காவலாள் ஒருவன் வருகின்றான்]

அடே! நீ சென்று இளவரசியிடம் நாம் காத்துக் கொண்டிருப்பதாய் உரைத்துவா. சீக்கிரம்!

[காவலாள் செல்கின்றான்]

புரு:—(தனக்குள்) அரசனே! பதறுதே! எல்லாம் உன் வசமில்லை.— அந்தோ! சுந்தரவதனா! உன் கதியிப் படியாயிற்று? குடிகள் ஏன் இன்னம் வாளா விருக்கின்றனரோ?

வீர:—அடே!—

[சுந்தரவதனனும், இந்திராளும் கரங் கோர்த்து, மாலையணிந்துவர, சத்திய சேனன் முன்வருகின்றான்]

(பிர்மித்து) என்ன கோலமிது?

சத்:—வேந்தே! கேட்பீர். இவ்விருவரும் இணைபிரியாக் காதலர். இரண்டுடல் ஒருயிர் உடையார். ஒத்தமனத்தினர். ஒப்பிலாக்குணத்தினர். செப்பரும் புகழினர். இருவரும் முதன் முதல் கண்டதும் காதல் கொண்டனர். காதற் கடல் திளைத்து விளையாடிவந்தனர்.— இப்படியிருக்குநாள், விதியின் பயனால் விளைந்தன பலதுன்பங்கள். தாங்கருந்துயரால் தயங்கித்துடித்தனர். பின்னர் பிரிந்தனர் பிரிவிலாதார். சின்னாட் சென்றபின், ஈசனருளால், பரிதிகாண் பனியெனப் பறந்தன பரந்த பரவையொத்த துன்பக்குழாம். பிரிந்தவர் திரும்பவும் கூடினர். மாலையும் கணையாழியும் மாற்றியே மணந்தனர் மாண்புற! காவல! இவர் தமைக்காப்பதுன் கடன்!

வீர:—(திகைத்து) இந்திரா! என்னையிது? இயம்பாய்!

இந்—தந்தையே! சத்தியன் சாற்றின முற்றுஞ் சத்தியமே! இன்னுயிர் சுந்தரன் என் கணவனே ஆயினன். ஒரு மனமுடையார் ஒன்றுதல் இயல்பேயன்றோ? எங்களை அளித்தருள் இறையே!

புரு:—(தனக்குள்) ஆ! ஆ! ஆச்சரியமேயிது! இத்தகை குணத்தினளையோ யாம் பழி சொன்னது?

வீர:—(சினந்து) அடி! உன்னைக் கொல்ல நினைந்த கொடியனையா மணந்தாய்? நல்லது செல்வீர்! பிரியாக் காதலரைப் பிரித்தல் பாவமேயன்றோ! ஆதலின் இருவீரும் இறப்பீர் ஒருங்கே! நின் மணக்கோலங் கண்ட கண்ணும் நின் பிணக்கோலங் காணப் பெரிதும் விழையும்! — அடே! சிறுவ! இச்செய்தி செப்பிய நீயும் மிரிப்பாய் அவர்களுடன். — இம் மூவரையும் சிறைச்சாலைக்கழைத்துச் செல்லுங்கள்—

சுங்:—அரசே! நீர் சொன்னதின் பலனை ஆராய்ந்து பாரும். என்னைக் கொன்றால் ஒன்றுமில்லை. நானும் இறக்கத் தயாரே! ஆனால் கோதில்லாக் குணமணிகளாம் இந்திராவையும், சத்தியசேனனையும் நீர் தண்டிப்பது வெறும் கொலையேயாகும். கடவுள் மனம் பொறார். நீர் விரைவில் அழிவீர். சாக்கிரதை

[மூவரையும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்கின்றனர்., காவலாள் ஒருவன் ஓடி வருகின்றான்.]

காவலாள்:—அரசனெங்கே?

வீர:—இதோ! என்ன வேண்டும்?

காவலாள்:—வேந்தே! விரைவில்சென்று சுகப்பிரியரைக் காப்பீர். குடிகள் சுந்தரவதனர்க்கு எங்கு தீங்கு நேருமோ என்றஞ்சி அவரைக் கைதியாக்கினர்.

புரு:—(தனக்குள்) ஆ! நன்றே செய்தீர், நல்வீரர்காள்!

[குடிகள் செய்யும் பேரொலி கேட்கின்றது.]

கத்துகடலொத்தீர்! விடாதேயுங்கள்! இடியென முழங்குங்கள்!

[மற்றொரு காவலாள் ஓடோடி வந்து பிரவேசிக்கிறான்]

காவலாள்:—ஓ! காவல! தயார்! தயார்! தயார்!

வீர:—இப்பாழுங்குடிகள் சுந்தரனைக் காதலிக்கும் வாறென்னே !

காவலாள்:—அரசே ! தாமதம் வேண்டாம். குடிகள் எழுந்தனர் போர்க்கே! பலவகை ஆயுதங்கள் ஏந்தியே கும்பல் கும்பலாய்க் குவிகின்றனர். சுந்தர வள்ளலைக் கொலை செயற்கென்றே மேடையொன்று அமைக்கச் செய்து அவ்வேலையைக் கவனித்துவந்த சேரநாட்டிளவரசைச் சூழ்ந்து இம்சிக்கின்றனர். சீக்கிரம் சென்று அவரைக்காக்கவேண்டும்.

வீர:—அந்தோ ! என்செய்வது ? அவர்களை அடக்க என்னால் இயலாது. மன்னனை மதியா மடையர்கள் அவர்கள் ! சுந்தரனே அவர்க்குகந்தான் ! அவனை அனுப்ப வேண்டியதே ! வேறுவழியில்லை !— சுதர்மரே ! நீர் சென்று இப்பொழுதே சுந்தரனை யான் வரவேண்டியதாய் இயம்புவீர் !

[சுதர்மன் போகின்றான்]

ஓ! எவ்வளவு ஓசை செய்கின்றனர். அவர்கள் தொண்டையடையாதா ? தொப்பையும் வெடியாதா ?

[சுதர்மன் சுந்தரவதனனுடன் பிரவேசிக்கின்றான்]

ஆ ! சுந்தர ! பிழைபல செய்தேன் யானே ! துன்பம் பல நுகர்ந்தாய் தூய நீ, நாயேனால்! என் பிழை பொறுத்தருளி, இனி யெனைக்காப்பாய் ஏந்தலே ! பொங்கு கடலென்னவே போர்க்கெழுந்த சனங்களின் கோபந்தணிப்பவன் நீயே ! சென்று நீ அவர் மனந்திருப்பியே வென்று வா ! இந்திராவை இனிதே மணந்து இன்புற வாழ்தி ! அங்கமும் களிங்கமும் உன்னதேயாகும். என்மருக்னும் மாண்புறு பெருந்துணைவனும் நீயேயாவாய் ! அப்பனே ! இப்போதே சென்று அன்னிய அரசிளங்குமரன் இன்னுயிர் காப்பாய் !

சுந்:—இறைவனே ! கொஞ்சமும் அஞ்சவேண்டாம். உடனே இந்திராவையும், சத்தியனையும் சிறையி

னின்று விடுக்க உத்தரவு செய்யும். யான் இக்கணமே சென்று குடிகள் மனதைக்களிக்கச் செய்து வருவல்! இன்றேல் அவ்விடமே மாள்வேன்!

வீர:—அவ்விருவரையும் விடுவிக்க நீயே பணித்தருள்! அப்பனே! ஒப்பிலாவீரனே! வென்றுவா! என்னுரை குன்றேன்! சத்தியம்!

[சுந்திரவதனன் போகின்றனன்]

வாருங்கள் உட்செல்வோம். காது செவிடுபடும்போல் கத்துகின்றனர்! வானமும் பிளவுபடும்போல் இருக்கின்றதே!

[யாவரும் செல்கின்றனர்]

## நான்காங்களம்

இடம்: அரண்மனே வாசல்.
காலம்: முற்பகல்.
பாத்திரங்கள்: சனக்குழாம், சுத்தவீரன், சுகப்பிரியன்.

சுத்:—(உரக்க) "ஜெய! ஜெய! சுந்தரா!— கத்துங்கள் என் வீரர்காள்!

[யாவரும் கத்துகின்றனர்)

பளா! ஆகாயத்துலாவும் இடியும் நடுக்குற முழங்குங்கள்! சொல்லுங்கள் சுந்தரன் சுந்தரப்பெயரை! "சுந்தரன் அந்தமில்காலம் வாழ்க" என்று கர்ச்சியுங்கள்!

[யாவரும் அப்படியே சுந்தரன் பெயரை உரக்க உரைக்கின்றனர்]

ஆ! ஆ! அப்படித்தான்! என் உள்ளங்களித்தது!— எங்கே அந்த அன்னியன்?

[ஒருவன் சுகப்பிரியனே இழுத்துவருகின்றனன்]

ஆ! இங்கு கொண்டுவா.— இவன்தானடா அரசனுய் வந்து நம்மை ஆளவிருக்கின்றவன்! தெரியுமா?— இவனுக்குத்தக்க மரியாதை செய்யவேண்டுமல்லவா? ஆதலின், இவன் கிரீடம், உடை, வாள் முதலிய வற்றைச் சூறையாடுங்கள்!

[அப்படியே செய்கின்றனர்]

சுக:—(கோபித்து) அடே! துன்மார்க்கர்களே! கொஞ்சமும் அச்சமின்றி இப்படிச் செய்தீர்களல்லவா? நல்லது. இதற்கு தக்க தண்டனையடைவீர்கள்!

சுத்:—அடே! என்னடா! அவனைப்பேசவிட்டு சும்மா நிற்கின்ருய்?

ஒருவன்:—(சுகப்பிரியனை நெருங்கி) டே! சும்மாவிரு! இல்லாவிட்டால் கொடுத்திடுவேன் சரியாய்!

சுத்:—நீயோ இளவரசியை மணக்கவிருப்பவன்?

சுக:—அடே! துஷ்டா! நானன்றி பின் யாரென மதித்தாய்?

சுத்: என்ன! சுகப்பிரியா! அதிகம் பேசுகின்ருய்?

சுக:—அடே! என்னையிப்படியும் மரியாதையின்றிப்பேசவுன் மனந்துணிந்ததல்லவா? இன்னம் சற்று பொறுத்துக்கொள். வீரகேசரிவள்ளல் இவ்வளவில் சேனையுடன் வந்துகொண்டிருப்பார். அவர் வரட்டும்.

சுத்:—அடே! பயல்களா! கொடுங்களடா பூசை! தலை சுற்றி ஆடுகிருன் பயல். சாமி வந்துவிட்டதுபோலும். கொடுங்கள் பூசை!

[யாவரும் நொய்யைப் புடைக்கின்றனர்]

ஒருவன்:—(சுகப்பிரியனையடித்து) டே! வாய்மூடு அப்பேன்! பேசினுல் தொலைந்தாய்! இப்படிக்கொடுத்தால் (அடிக்கக் கையை ஓங்கிச்சென்று) சும்மா சொக்கி சுந்து சுருளாய்ப் போய்விடுவாய் தம்பி! பத்திரம்!

மற்ருருவன்:—அண்ணுத்தே! சும்மா பேசாதே! காப்

பேத்திவிட்டு பின்னே பேசு! சும்மா தபாய்க்கிறானே!

[அடிக்கின்றான்]

சுக:—ஐயோ! ஐயோ! கொல்லுகிறார்களே! சண்டாளர்காள்! நில்லுங்கள்! பாவிகளே! நிறுத்துங்கள்! ஐயோ! கேட்பவர்யாருமில்லையா? எமதூதர்களைப் போல் இம்சிக்கின்றார்களே!

1ம்-மனிதன்:—அடே! இளவரசர் கதறுகின்றார்! நீங்கள் சும்மா மரம்போல் நிற்கிறீர்களே! கொடுங்களடா காணிக்கை கப்பமெல்லாம்.

[அதிகம் இம்சிக்கின்றனர்.]

சுக:—ஐயோ! ஐயோ!

2ம் மனிதன்:-அண்ணே! அண்ணே! அப்படியல்ல. இவனை அடிக்காதே! அடிக்காமற் கொல்!

3ம்-மனிதன்:—இல்லை அண்ணே! சுந்தர வள்ளலைக் கொலை செய்ய மேடையல்லவா அமைக்கச் சொன்னான்! இவனை சும்மா விடுவதா?

1ம்-மனிதன்:— ஆம். விடாதேயுங்கள்.

2ம்-மனிதன்:—அதிகம் செய்ய வேண்டாம். தலையை மட்டும் கிள்ளி எறிவோம்.

3ம்-மனிதன்:—அண்ணே! ஒன்றுசெய்வோம். நான்கு பேர்களாய்ச் சேர்ந்து சும்மா மரியாதையாய் அப்படியே அலக்கா தூக்கி (கையால் சாடை காட்டுகிறான்) கை கால்களைப் பிடித்திழுத்துப் பிய்த்துச் சூறையாடலாம் துண்டந்துண்டமாய் வெட்டிப் பந்தாடலாம். காக்கை கழுகு முதலிய பக்ஷிகளுக்கு விருந்திடலாம். என்ன சொல்லுகிறீர்கள்.?

2ம்-மனிதன்:—இல்லை. இல்லை. எனக்கு அவன் தலையை மட்டும் கொடுத்திடுங்கள். என் வீட்டுக்கொல்லையில் உள்ள பயிரைப் பறவைகள் நாசம் செய்கின்றன. இவன் தலையின் உள்ளே யிருப்பதைக் குடைந்தெடுத்து எறிந்து

விட்டு, பஞ்சு, மயிர், வைக்கோல், முதலியன அடைத்து, கொம்பில் மாட்டிவிட்டால், பக்ஷிகள் பயந்தோடிப்போம்.

1ம்-மனிதன்:—அண்ணே! இவன் எல்லாரையும்விட நிரம்ப உயர்ந்தவனும்! இவனே சொல்லிக்கொள்கிருன். இவனுக்கு கொம்புண்டோ? இருந்தாலதை எனக்குக் கொடுங்கள். அதைக்கொண்டு, ஊதிகளும், விளையாட்டு சாமான்களும் செய்யலாம்.

சுக:—ஐயோ! ஐயோ! என் வயிறு கலங்குகிறதே! உயிர் போம் போலிருக்கிறதே! இந்த எமபடர்கள் இடையில் அகப்பட்டுக் கொண்டேனே! என் செய்வேன்? (எல்லோரையும் பார்த்து) அப்பன் மார்களே! போதும்! என்னை இம்சிக்க வேண்டாம்! விட்டுவிட்டால், இனியொன்றும் பேசேன். தயவு செய்யவேண்டும். யான் தப்பி என் நாடு போய்ச் சேருகிறேன்.

சுத்:—அடே! போதும்! பாவம்! இப்பொழுதுதான் அறிவு வந்தது. அப்பன்மார்களே என்று கெஞ்சுகிருன். விட்டு விடுங்கள்.

சுக:—(சுத்தவீரனைப் பார்த்துக், கும்பிட்டு) அப்பா! நீ பரம தயாநிதி! நல்லவன். உனக்குப்பல்கோடி வந்தனம் பல்வகைச் செல்வமும் படைத்துப் பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்வாய்!

சுத்:—அடே! இதென்ன? இன்னும் சுந்தர வள்ளலைக் காணும்! பெருத்த முழக்கஞ் செய்யுங்கள்!

[பேரிரைச்சல்.

சுந்தரன் வேண்டும்! சுந்தரனே வேண்டும்! எங்கே சுந்தர வள்ளல்? எங்கே சற்குணமணி? சொல்லுங்கள் இப்படி!

[சனங்கள் யாவரும் இம்மாதிரி கூறுகின்றனர். சுந்தரவதனன் அரண்மனை மேன்மாடியில் ஓர் அறைசன்னலைத் திறந்துகொண்டு நிற்கின்ருன். யாவருங்கண்டு பெருங்குரலுடன் ஆரவாரிக்கின்றனர்]

சுத்:—ஜெய ! ஜெய ! சுந்தர !— வெளியில் வரவேண்டும். என் அப்பனே ! வெளியில் வரவேண்டும் !

யாவரும்:—ஆம். வெளியில் வரவேண்டும்.

சுந்:—(வெளியில் வந்து) என் அன்பர்காள் !— (பேரிரைச்சல்)

சுத்:—(கையமர்த்தி) யாவரும் கத்துவதை நிறுத்துங்கள் ! சுந்தரன் சொல்வதைக் கவனித்துக்கேளுங்கள் !

சுந்:—என் அன்பர்காள் ! உங்கள் அன்பிற்கு மெத்தவந்தனம் என்பொருட்டு நீங்கள் கொண்ட சிரமத்திற்காக யான் என் ஆயுள்காலம் முழுவதும் கடமைப்பட்டவன். போதும். தயவுசெய்து உங்கள் வீடுபோய்ச் சேருங்கள்.

சுத்:—ஐயனே ! நீ சௌக்கியந்தானே ?

சுந்:—ஆம். யான் சுகமே !

சுத்:—எல்லாம் நன்றாய் முடிந்ததா ? உன் நாடு உன்னதாயிற்று? இளவரசி உன் மனைவியா ? யாவரும் உன்னை வணங்குகின்றார்களா ? முடிசார்ந்த மன்னரும் உன்னடி பணிந்து படிமீது படிகின்றனரா ? சொல்லுவாய் துரையே ! இல்லையேல், இதோ இந்த சுகப்பிரியன் என்றும் நீங்காத நித்திரைக்கடலில் ஆழ்ந்தான் !

சுக:—ஆ ! யான் தொலைந்தேன் !— சுந்தரவதனா ! உத்தமரில் உன்னை யொப்பார் இத்தரையில் எவருங்கண்டிலேன் ! அப்பனே ! அன்புடன் என்னையளிப்பாய் ! என்பெயரை மறந்து என்பெருந்துயரை நினைப்பாய் !

சுந்:—ஆ ! சுகப்பிரியரா ? அன்பர்களே ! முதலில் அவரை என்னிடம் வரவிடுங்கள் ! பாவம் ! விலகுங்கள் !

[யாவரும் விலகிநிற்க, சுகப்பிரியன் சுந்தரனை யடைந்து வணங்குகிறான்]

என் பிரிய நண்பர்காள் ! எல்லாம் உங்கள் விருப்பப்படியே நடந்தன ! உங்கள் பேருதவியாலும், தயவாலும் என் நாடு நகரடைந்தேன். நிகரில்லா மங்கையர்

O-, 2MKI, K

மணியைக் கைப்பற்றினேன். என்னுயிர் இவ்வுடலில் உள்ளவரை உங்கள் நன்மையை நாடியே நடப்பேன். கடவுளும் அவ்வாறே கருணைபுரிவாராக!— இதோ! கொஞ்சம் பணமுள்ளது. இதைக்கொண்டு உண்டு களியுங்கள். மெத்தவும் வந்தனம்! வந்தனம்! ஆயிரம் வந்தனம்!

[பணத்தைக் கைநிறையப் பன்முறைவாரி இரைக்கின்றான். குடிகள் களிப்புடன் பணத்தை எடுத்துக்கொள்கின்றனர்]

நல்லது!—நண்பர்களே! யான் செல்ல விடை தந்திடுங்கள்!— வாரும் சுகப்பிரியரே!

சுத்:—சென்றுவா, சுந்தரவள்ளலே! நீடூழிவாழி நீ அப்பனே!

[சுந்தரவதனன் சுகப்பிரியனோடு செலகின்றான். யாவரும் அவனை வாழ்த்தியேகுகின்றனர்]

## ஐந்தாங்களம்.

இடம்: அரசனவை.

காலம்: முற்பகல்.

பாத்திரங்கள்: வீரகேசரி, இந்திரா, மரகதம், மோகனை, சுதர்மன், புருஷோத்தமன், பிரதாபன், சத்தியசேனன், வேலையாட்கள், காவலாளர், ஏனையோர்.

வீர:— அம்ம! இரைச்சல் ஓய்ந்தது! சுந்தரன் அவர்கள் மனதை நக்களிக்கச்செய்து அனுப்பியிருப்பானென நம்புகின்றேன்.

புரு:—அதிற் சந்தேகமுண்டோ? சந்தடியடங்கி நடு இரவைப்போல் நிசப்தமாயுள்ளது!

[காவலாள் ஒருவன் ஓடிவருகின்றான்]

வீர:—ஏடா! என்னே?

காவலாள்:—அரசே! சுந்தரவள்ளல் குடிகளையனுப்பிவிட்டு சுகப்பிரியருடன் இதோ வருகின்றார்! அதை அறிவிக்க வந்தேன்.

வீர:—நல்லது.—

[சுந்தரவதனன் சுகப்பிரியனோடு பிரவேசிக்கயாவரும் எழுந்து வந்தனமளித்து நிற்கின்றனர். சுந்தரன் அரசனை வணங்கி நிற்கின்றான்]

(எழுந்த) என் அருமை மகனே! சுந்தர! வருக! இத்துணைக்குணப்பெருங் குன்றத்தை என் குமாரனெனக் கொண்டாட நேரிட்ட இத்தினமே சுதினம். என் கண்கள் இதுவரை நின்னை வருந்தியதற்காகத் துக்க நீரையும், இனியான் துன்பந்துடைக்கச் செய்யவிருப்பது நினைந்து இன்பவெள்ளத்தையும் ஒரே சமயத்தில் வழியவிட்டு நிற்கின்றன. அப்பனே! உன் உரிமைபூண்டு, உன் இந்திராவை இனிதே காம்பற்றி என் தீமை மறந்து மன்னிப்பாய்!

சுந்:—ஐயனே! நீர் சொல்வதை அன்றே மறந்தேன். கனவு போல் மனத்திருந்து மறைந்தது.

வீர:—வந்தனம் (இந்திராவைப்பார்த்து) கண்மணி! இங்குவா!

[இந்திரா வந்து வணங்கி நிற்கின்றாள். சுந்தரன், இந்திரா இருவர் கரங்களையும் சேர்த்து]

நீங்கள் இருவீரும் ஒருவீராய் ஒன்றி பல்லாண்டு வாழ்ந்து இன்பந்துய்த்து இருக்க ஈசன் அருள் வருக! இன்றே என் கண்கள் குளிர்ந்தன! உள்ளம் உவகை பூத்தது!

[சுந்தரவதனனும், இந்திராளும் கைகோர்த்த வண்ணம் அரசனை வணங்க, யாவரும் ஆசி கூறுகின்றனர்]

(சுகப்பிரியனை நோக்கி) சுகப்பிய! இங்குவா. நீ வருந்

தற்க. உன் செயலால் இந்திராணி இழந்தனையேயன்றி வேறில்லை. உன் நாடுற்று இனிதே வாழ்வாய்.

சுக:—வேந்தே! வருத்தமேயுற்றிலேன். சுந்தரன் பெருமையை உணர்ந்து களிக்கின்றேன். என் நாடுபோய்ச் சேருவேன்யான்.

சுத: —வேண்டுமாயின் (மோகனனைவச்சுட்டி) இவளையும் அழைத்துச் செல்வாய்.

மோகன:—ஏன், நான்மட்டும்? இந்திராணியும சத்தியசேனனையும் சேர்த்து அனுப்பவேண்டாமா?

வீர:—என்ன சொன்னாய்?—

[இந்திராணிப் பார்த்துக் கோபத்துடன்

நீ இவ்வவைசை நீங்கும் வழியைத் தேடிக்கொள்! இல்லையேல் என்முகத்தில் விழியேல்!

இந்:—(கண்ணீர்விட்டு) ஆ! தெய்வமே! என் செய்வேன்? என் சொல்வேன்? எப்படி என் தூய்மையை இவர்கள் முன் நிலைநாட்டுவேன்? என்னையீன்ற என் தந்தையே சங்கை கொண்டனரே! ஆ! கார்முகவண்ணா! கமலக்கண்ணா! என்னைக்காவாயோ? மானமிழக்க விருந்த மங்கையினைக்கூவ அவள் மானங்காத்தனையே! முதலைவாய்ப்பட்ட குஞ்சரம் உன்னை முதல்வா! எனவிளப்ப ஒடியதை அஞ்சேலென அளித்திலையோ? பாவியான் கதறும் பொழுது எங்கொளிந்தாய்?

சுந்:—(இந்திராணி இறுகத்தழுவி) கண்ணே! வருந்தாதே! (அரசனைநோக்கி) தாங்கள் இன்னம் சந்தேகிப்பதேன்? இவள் நல்லள். மெய்யள். துய்யள். யானறிவேன்.

வீர:—சுந்தர! ஆயின் ஒருவரந் தந்தருள்!

சுந்—என்னையோவது? இந்திராளின் இன்னுயிரும், சத்தியனின் ஆருயிரும், நீங்க வேறெது கேட்கினும் மறுக்கேன்.

வீர:—(சத்தியசேனனைச்சுட்டி) இச்சிறுவனை, எல்லாவற்றிற்கும் காரணமாகிய இத்துஷ்டனைத் தக்கபடி தண்டனை செய்ய உத்தரவளிப்பாய்.

சுந்:—ஆ! மோசம்போனேன்! வேந்தே! அவ்வரம் ஒன்று நீங்க வேறு கேட்டருளும். அவனைத் தண்டிப்பதால் என் புகழையும், பெயரையும் ஒருங்கே இழக்கச் செய்வீர்!

சத்:—ஆ! சுந்தரவள்ளால்! காத்தருள்! என்னைக்கை விடேல்! கைவிடேல்!

சுந்:—(சத்தியசேனனை யணைத்து) அஞ்சேல்!—அரசே! இவன் சத்தியன். பொய்யாமொழித் தெய்வம். ஐயு றேல்.

வீர:—சுந்தரனை மறுத்தல் தகுமோ? சுந்தர! விடு அவனை!—புருஷோத்தமரே! இச்சிறுவன் ஆடையைக்களைந்து வேண்டிய தண்டனையைச் செய்யும்.

புரு:—அடே! இங்குவா!

[சத்தியசேனன் கையைப்பிடித்து இழுக்கின்றான்]

தப்பவோ வெண்ணினுய்?

சத்:—(பதை பதைத்து, உடல்நடுக்குற, கைகூப்பித்தொழுது கண்ணீர் விட்டு) அரசனே! என்னைக்கொல்ல உத்தரவளித்திடும்! இச்சபையில் இம்சை செய்யவேண்டாம். தாளேன் தனியேன். ஆடையைக்களைவதொன்று நீங்க வேறெவ்வித தண்டனை விதிக்கினும் சரியே!

சுந்.—ஐயோ! சத்தியசேனு! என்செய்வேன்? பாவியேன் செய்ததன்றோவிது? பூனையிடம் கிளியை ஒப்படைத்தவண்ணம் அரசனிடம் உன்னைக்கொடுத்தேனே! ஐயோ! என்போல் நன்றிகெட்டார் எவருள்ளார்? அந்தோ! நீ செய்த பேருதவிக்கு இதுவோ கைம் மாறு? ஆ! யான் உயிர்வாழ்ந்து பயனென்? இதோ—

[வாளையுருவிப்பாய முயல்கிறான்]

இந்:—(அவன் கரம் பிடித்துத்தடுத்து) என் அன்பே! என்னையிது? பொருத்துக்கொள்வாய்!

வீர:—என்னே! புருஷோத்தமரே! சும்மா நிற்கின்றீர்? நேரமாயிற்று.

புரு:—அடே! என்னடா சாலமிது? வா, விரைந்து!

[சத்தியசேனனைப் பிடித்திழுக்கின்றான்]

சத்:—(பதைத்து) கொற்றவ! யான் உண்மை உரைப்பேன். என்னை விட்டுவிடுங்கள. (தனக்குள்) ஆ! ஈசா! வேறுவகையொன்றறியேன். ஆதலின், என் சபதம் வீணுகில் என் குற்றமாகாது.

வீர:—என்ன? உண்மையுரைப்பாயா?— புருஷோத்தமரே விடுமவனை. அடே! சீக்கிரம் செப்பிடு.

சத்:—(புருஷோத்தமரைச்சுட்டி) தனித்திவரையனுப்பின் சொல்வேன் எல்லாம்.

வீர:—புருஷோத்தமரே! அப்படியே செய்யும்.

[புருஷோத்தமனும், சத்தியசேனனும் ஒரு புறம் பேசிக்கொள்கின்றனர்]

புரு:—அடே! சொல் சீக்கிரம். ஏன் பேசாமலிருக்கிறாய்.

சத்:—ஐயா! என் முகத்தை அறிவீரா?

புரு:—அறியேன்.

சத்:—இம் முகத்தையாவது அல்லது இதைப்போன்ற வேறு முகத்தையாவது நீர் கண்டதாக நினைவில்லையா?

புரு:—ஆம். இதைப்போன்ற முகத்தை எங்கோ கண்டதாகத் தோன்றுகிறது! ஆனால் எங்கு கண்டேனென நிச்சயமாய் விளங்கவில்லை.

சத்:—அடிக்கடி உம்முடைய மகளைப்பற்றிக் கேள்வியுற்றுளேன். சனங்கள் யான் அவளைப் போன்றுளேனெனவுரைத்து என்னை மகிழ்விப்பார்கள்

புரு:—(யோசித்து) ஆ! ஆம். உற்று நோக்கின் அப்படித்தான் புலப்படுகின்றது!

சத்:—ஐயா! யாத்திரைசென்ற அவள் ஞாபகத்திற்காக வேனும் என்னை மன்னிக்க மன்னனிடம் மன்றுடும்.

புரு:—(திடுக்கிட்டு) ஆ! அவள்போல் இருப்பதுந்தவிர அவள் குரலாலேயே பேசுகின்றாயே! அவள் யாத்

திரை செய்வது எங்ஙனம் அறிவாய்?

சத்:—அறியேன். கேள்வியுற்றேன்.

புரு:—ஓ! இதென்ன? உண்மையிலா? அருகில்வா! நன்கு நோக்கட்டும். (உற்றுநோக்கித்திடுக்கிட்டு) நீயார்? அவளேயோ! அல்லது அவள் அருவமா! உரைப்பாய் விரைந்து!

சத்:—தந்தையே! யானே அவள்! அவளே யான்!

புரு:—ஆ! என்கண்ணே! என் செல்வமே! நீயா! இவ்வளவு நாள் இங்கேயிருந்தும் யான் உன்னைக்கண்டு கொள்ளாமற் போனேனே!

வீர:—என்ன! புருஷோத்தமரே! எவ்வளவு நேரம்?

புரு:—எல்லாம் வெளியாயிற்று!

சுந்:—பின்னேன் இன்னம் என்னைத்தடுப்பது? எல்லாம் வெளிப்பட்டது. யான்—

[வாள்மேல் பாயப்போகிறான்]

வீர:—சுந்தரனைக் கவனியுங்கள்!

இந்: என்ன வெளியாயிற்றென்றீர்?

புரு:—என், என் மானம்!

சுந்.—எப்படி? சொல்லும்!

புரு:—(சத்தியசேனனைத்தொட்டு) ஆணல்ல, பெண்ணே!

[சத்தியசேனன் தலைகவிழ்ந்து நிற்கிறான். யாவரும் ஆச்சரியப்படுகின்றனர்]

சுந்:—ஆ! ஈசா! எல்லாம் உன்னருள்! எல்லாம் உன்செயல்! பெண்கள் என்றும் பீடுடையாரே! மாதரார் என்றும் மாண்புடையாரே? கேட்டீர்களா? பெண்! பெண்!

வீர:—(சத்தியசேனனைப்பார்த்து) புருஷோத்தமர் மானம் வெளியானதெப்படி? உரையாய்!

சத்:—நான் அவர் மகள் கமலா.

[யாவரும் திகைக்கின்றனர்]

இந்:—(ஓடி கமலாவைக்கட்டி முத்தமிட்டு) என் அன்பான கமலா! நீயா இவ்வுருக்கொண்டாய்?

சுந்:— கமலா! நீயோ என் வேலையாளாய் இருந்து வந்தனை? அந்தோ! என்னவிது?

[துக்கிக்கின்றான்]

வீர:— இதென்னவாச்சரியம்! கமலா! யான் இம்சித்ததை மறந்து மன்னித்தருள். நிற்க. நீயேன் இக்கோலம், தாங்கினாய்?

கமலா:— அரசே! எல்லாம் இச்சுந்தரனாலேயே!

சுந்:—(ஆச்சரியப்பட்டு) என்ன! என்னாலேயோ?

கமலா:—ஆம். (அரசனை நோக்கி) என் இளம்பருவந் தொட்டு, என் தந்தையால் சுந்தரன் அருங்குணத்தையும், பெருந்தன்மையையும் நன்கறிவேன். அவன் புகழைப் பாடுவதே அவர் தொழில். பின்னர் அவன் எழிலுறு உருவத்தைக் கண்டேன். காதல் கொண்டேன். அக்கணமுதல், என் சிந்தனைமுற்றும் சுந்தரனைப்பற்றியே. என் கண்கள் அவனையே கண்டிருக்க விரும்பும். அவன் இன்சொலை மடுக்கவே என் செவி இச்சை கொள்ளும். என் மனம் உண்ணுங்காலும், உறங்குங்காலும், எக்காலும் அவனையே எண்ணி யெண்ணி யேங்கி வாடிவருந்தும். காதற்றீயின் கடுந்துன்பம் பொறுக்கமுடியவில்லை. அவனைமணந்து இன்புறவோ வகையில்லை. ஆதலால், ஒன்றுந்தோன்றாமல், வாழ்க்கை வெறுத்துச் சிதம்பரஞ் செல்வதாய்த் தந்தையிடம் செப்பி, இவ்வுருக்கொண்டு, கால் சென்றவிடமெலாஞ் சென்று, கடைசியில் ஓர் சிற்றாற்றின் கரைமேல் அழுதுகொண்டிருந்தேன். சுந்தரன் அங்கெனைக்கண்டு தடுத்தாட்கொண்டு அழைத்து வந்தனன். அன்றுதொட்டு அவன் வேலையாளாய் அமர்ந்து அவனைக்கண்டும், அவன் மொழிகேட்டும், அவனருகிலிருந்தும், களித்து வாழ்ந்து வந்தேன். பிறகு நிகழ்ந்த சம்பவங்கள் சகலரும் உணர்ந்ததே!

சுந்:—ஆ! கமலா! என் பொருட்டோ இத்தகைத் துன்புற்றாய்!

[துக்கிக்கின்முன்]

வீர:—வெகு விந்தையே நின்காதல்!—கமலா! உனக்குகந்த காதலனைத் தேர்ந்தெடுத்துக்கொள். வேண்டிய சீதன மளித்து யானே மணமுடிக்க விரும்புகிறேன்.

கமலா:—காதலனைத் தேர்ந்தெடுப்பதா? (கண்ணீர் வழியக் கடைக்கண்ணால் சுந்தரனை நோக்கியபடி) அரசே! இனியா யான் காதலனைத் தேர்ந்தெடுக்கப் போகின்றேன்? இனி மணம்புரிய மனமில்லேன்.

வீர:—பின் என் செயப் போகிறாய்? உன் அரிய அழகை வீணாக்கவோ வெண்ணினாய்?

கமலா:—இந்திராளும் சுந்தரனும் அன்புடன் விடையளிக்கின் என் வாழ்நாள் வீணாகாது. யானும் சுகமடைவேன்.

சுந்:—(யோசனையிலிருந்து, திடுக்கிட்டு) எப்படி?

கமலா:—நீயும், இந்திராளும் இன்புற்று வாழ்தலைக் கண்டுகளித்தும், உங்கள் மக்களை வளர்த்துச் சீராட்டித் தாலாட்டி உவகை கொண்டும், தனித்தே உங்களுடன் இருந்துவாழ அவாவுடையேன்; இவ்வரம் இருவரும் ஈந்தருள்வீர்.

இந்:—(சுந்தரவதனன் தலைகுனிந்து வாளாவிருப்பது கண்டு முன்வந்து கமலாவைக்கட்டியணைத்து, முத்தமிட்டு) என் பிரிய கமலா! எனக்குப் பொறாமையென்பது ஒரு சிறிதுமில்லை. உன் வாழ்வை அப்படிப் போக்க யான் ஒருபோதும் சம்மதியேன்! ஆ! உன் காதலைக் காணின் என் காதல் ஒரு அணுவளவாய்ச் சுருங்கும்! சுந்தரன் உன்னையும் மணந்தால் நாமிரு

வரும் இணையில்லா இரு சகோதரிகளைப் போன்று ஒன்றுபட்டு வாழலாம். நீ சத்தியசேனனாயிருந்த பொழுது உன்னையான் காதலிக்கவில்லையா? (யாவரையும் பார்த்து நகைக்கின்றாள்) நாம் சேர்ந்து வாழின் மறுபடியும் முன்போல் காதலித்துக் களித்து வாழலாமல்லவா?—என்னே சுந்திர! என் சொல்கின்றாய்? என்ன யோசனையிலமுழ்ந்தினாய்?

சுந்:—(இந்திராளையும் கமலாவையும் இரு கரங்களால் இறுகத்தழுவிக்கொண்டு) என் இன்னுயிற் இந்திரா! உன் குணம் மிக்க உயரியதே! யானும் என் இளம்பருவத்தில் கமலாளைக் காதலித்ததாக எண்ணினேன். பின்னவள் மறைந்தனள். உன்னைக்கண்டு அவளை மறந்தேன்.—என் கமலா! உன் பெருமையே பெருமை! வேறு சொல்ல நாவெழவில்லை! இத்தகை இயம்பரும் இருபெண்மணிகளை மனைவிகளாய்ப் படைத்த என் பாக்கியமே பாக்கியம்! உங்களிருவரையும் காதலித்து நன்குவாழ ஈசன் திருவருள் என்றும் என்னைத்தூண்டி நல்வழியிற் செலுத்துமாக!

வீர:—(இந்திராளை முத்தமிட்டு) என் கண்ணே! உன்குணமேமிகச்சிறந்தது!—சபையோர்களே இத்தகை நிகரில்லாக் காதலரை நம்மனமார வாழ்த்துவோம்!

[யாவரும் மூன்று காதலரையும் பெரிதும் வியந்து புகழ்ந்து, வாழ்த்துகின்றனர்]

ஆ! ஒன்று மறந்தேன்! எங்கே அத்துன்மார்க்கி மோகனா?(அவளைக்கண்டு)இதோ! இவளைப் பிடித்துச் சிறையிலடையுங்கள்!

சுந்:—அரசே! கேவலம் பெண்ணவள். விட்டு விடுங்கள். கடவுள் அவளைத் தண்டிப்பார்.

வீர:—அப்பனே! சுந்தா! அரியதே நின்குணம்! அப்படியே செய்வேன்.—அடி! நீ இனி இவ்வூரிலில்லாமல் எங்கேனும் சென்றிடுவாய். போ!

[மோகனா ஓடுகின்றாள்]

சபையோர்களே! பொழுதாயிற்று. இனி நல்ல நாள் பார்த்து நம் சுத்தரப் பெருந்தகைக்கும் இவ்வொப்பிலா மங்கையர் மணிகளுக்கும் திருமணம் முடிப்பதே நம் கருமம். மங்களம் உண்டாகுக. போவோம் யாம். சுபம்.

[யாவரும் செல்கின்றனர்]

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

கமலேந்திரா முற்றிற்று.

68888

O-, 2MKI.K
N24.

திருப்பூர்,
தண்டபாணி பிரிண்டிங் ஹவுஸில்
அச்சிடப்பெற்றது.